கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

# ஜீவநதி

235
ஆனி2024
01.06.2024
ஆளுமைச் சிறப்பிதழ்


200/-

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

பருவ வெளியீட்டுப் பகுதி
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## ந.இரவீந்திரன் சிறப்பிதழ்

தமிழ்மணி அகளங்கன்
இதயராசன்
திக்குவல்லை கமால்
த.நீதிராஜன்
இ.இராஜேஸ்கண்ணன்
கந்தர்மடம் அ.அஜந்தன்
சொ.பிரபாகரன்
அ.பௌநந்தி
கலாநிதி சு.குணேஸ்வரன்
இ.சர்வேஸ்வரா
சோ.தேவராஜா
மு.அநாதரட்சகன்
இ.சு.முரளிதரன்
சிவ.ஆரூரன்
கலாநிதி தி.செல்வமனோகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2024 - ஆனி - ஆளுமைச் சிறப்பிதழ்

# பொருளடக்கம்

## கட்டுரைகள்

**வாசிப்பையே சுவாசமாகக் கொண்டவர்**
தமிழ்மணி அகளங்கன்........................ 03

**கலாநிதி ந.இரவீந்திரனின் கலாசாரம் எதிர் கலாசாரம் புதியகலாசாரம்**
இதயராசன்........................................... 06

**முற்போக்கு இலக்கியத்துக்கு கைலாசபதியின் பங்களிப்பு ஓர் அறிமுகக் குறிப்பு**
திக்குவல்லைக்கமால் ................................ 11

**கிருத யுகத்துக்கான பாரதியின் "யுகப்புரட்சி"**
த.நீதிராஜன் ........................................... 14

**"இரட்டைத்தேசியம்" பற்றிய விரிநிலைக் கருத்தாடலில் ந.இரவீந்திரனின் "சாதியம் தேசம் பண்பாடு"**
இ.இராஜேஸ்கண்ணன் ............................ 18

**கலாநிதி ந.இரவீந்திரனின் சமூக விடுதலைப் போராட்டங்காளக மாறிய வர்க்கப் போராட்டங்களின் வரலாற்று நூல்**
கந்தர்மடம் அ.அஜந்தன்........ ................. 21

**ந.இரவீந்திரனின் "பின் நவீனத்துவமும் அழகியலும்"**
சொ.பிரபாகரன்...................................... 25

**சமூகப் பெயர்ச்சிக்கான அடிப்படைகளாக அமையும் உழைப்பு, மொழி, கல்வி ஆகியவற்றிடையேயான இணைவுப் பரிமாணங்களைப் புரிதல்**
அ.பெளநந்தி ........................................ 28

**கலாநிதி ந. இரவீந்திரனின் இலங்கைத் திணை அரசியலில் வர்க்கப் போராட்டம் - சில குறிப்புகள்**
சு.குணேஸ்வரன்................................. 32

**திருக்குறளில் கல்விச்சிந்தனை - சமூக நோக்கில் ஒருமறுவாசிப்பு ஆய்வூடாக வெளிப்படும் இரவீந்திரனின் சிந்தனை வெளியின் ஆளுமை**
இ.சர்வேஸ்வரா...................................... 37

**விடுதலைத் தேசியத்துக்கான முன் நிபந்தனை புதிய பண்பாட்டுப் புரட்சி, ந.இரவீந்திரன் எழுதிய "சாதி தேசம் பண்பாடு" ஆய்வு நூல் தொடர்பான ஓர் உரையாடல்**
சோ.தேவராஜா.......................................41




**திறந்த உரையாடலுக்குக் களமமைக்கும் நூல் ந.இரவீந்திரனின் "முற்போக்கு இலக்கிய எழுச்சி" நான்கு முன்னோடி முற்போக்கு எழுத்தாளர்கள் நூலை முன் வைத்து**
மு.அநாதரட்சகன்.....................................47

**எளிமைத் தோரணங்களின் அசைவாய் "ஏன்" கதைத் தொகுப்பு**
இ.சு.முரளிதரன்.......................................50

**மதம் பற்றிய மாக்சியக் கோட்பாட்டில் மாற்றம் வேண்டும் எனக் கூற விளையும் கலாநிதி ந.இரவீந்திரனின் "மதமும் மார்க்சியமும் தமிழ்ப் பண்பாட்டுப் பார்வை"**
சிவ.ஆரூரன்.............................................52

**மாற்றங்களைக் கண்டடையும் இயங்கியலுக்கான சுய விமர்சன நோக்காக "ஏகாதிபத்தியம் - சுய நிர்ணயம் - மக்கள் இலக்கியம்"**
இ.இராஜேஸ்கண்ணன்...........................54

**மார்க்சிய நோக்கில் மதங்கள் பற்றிய மறுவாசிப்பு ந.இரவீந்திரனின் மதமும் மார்க்சியம் பற்றிய ஒரு குறிப்பு**
தி.செல்வமனோகரன்..............................58



பருவ வெளியீட்டுப்பகுதி
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [Ptejp

**2024 ஆனி இதழ் – 235**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY


இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.


## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 3000/=
வெளிநாடு – $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி
## (கலை இலக்கிய மாத சஞ்சிகை)

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## பல்துறை ஆளுமை நிறைந்த இலக்கிய, மக்கள் செயற்பாட்டாளர் கலாநிதி ந.இரவீந்திரன்

ஈழத்து இலக்கிய வரலாற்றில் கலாநிதி ந.இரவீந்திரனின் இடம் தனித்துவமானது. மார்க்சியம் தொடர்பான முழுமையான புரிதலுடன் படைப்புகளை படைத்து வருகின்ற அருமையான படைப்பாளியாக திகழ்பவர். கட்டுரை, விமர்சனம், சிறுகதை என இலக்கியத்தின் பல்வகைமைகளிலும் இயங்கி வருபவர். ஒடுக்குமுறைக்கு எதிரான போராளியாக தன் ஆரம்ப காலம் முதல் தடம்மாறாத பாதையில் இயங்கி வருபவர். இலக்கியங்களை தனது கூரிய அறிவு மூலம் பொருத்திப் பார்த்து ஆய்வு செய்து பல்வேறு சிந்தனைகளை தன் நூல்கள் மூலம் வெளிப்படுத்தி வருவதுடன் மக்கள் மனங்களை சிந்திக்கச் செய்யும் படைப்புகளை நூல்களாக்குகின்றார். தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற கலாநிதி ந.இரவீந்திரன் அவர்கள் தற்போது கே.ஏ.சுப்பிரமணியம் நூலகத்தை உருவாக்கி சிறந்ததொரு தமிழ்ப்பணியாற்றி வருகின்றார். 20 நூல்களை தமிழ் இலக்கிய உலகிற்கு தந்துள்ளார். தாயகம், புதிய பண்பாட்டுத்தளம் ஆகிய சஞ்சிகையின் வெளியீட்டில் பெரும் பங்காற்றியவர். அனைவருடனும் இனிமையாகவும் நேர்மையாகவும் பழகும் இயல்பு கொண்டவர். விருதுகளுக்காக ஏங்காதவர். தான் நினைத்த கருத்தை எந்தவிடத்தும் துணிச்சலாக கூறும் இயல்பு கொண்டவர். சாதிய ஏற்றத்தாழ்வுகள் இன்றிய சமுதாயத்தை கட்டி எழுப்புவதற்கான முயற்சிகளாக இவரது நூல்கள் அமைந்துள்ளன. மக்கள் எங்கெல்லாம் கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம் ந.ரவீந்திரனின் குரல் ஒலித்துள்ளது. ஒடுக்கப்படும் மக்கள் விடுதலைக்காக தன் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்து வருபவர். சாதியத்தை மையப்படுத்தி ஈழத்தில் அதிக நூல்களை எழுதியவரும் இவரே. மக்கள் சம உரிமைக்காக போராடி வரும் போராளியை கொண்டாடி மகிழ்ந்து ஜீவநதி இச்சிறப்பிதழை வெளியிட்டு வைக்கின்றது.

- க.பரணீதரன்


**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவ வெளியீட்டுப்பகுதி
பொது சனநூலகம்
யாழ்ப்பாணம்

# வாசிப்பையே சுவாசிப்பாகக் கொண்டவர்

தமிழ்மணி அகளங்கன்

கலாநிதி ந. இரவீந்திரன் அவர்கள் வாசிப்பையே சுவாசிப் பாகக் கொண்டவர். சுவாசிக்க மறந்தாலும் வாசிக்க மறக்காதவர். பரந்துபட்ட வாசிப்புக் கொண்ட பண்பாளர்.

சிலர் பல நூல்களை வாசிப்பார்கள். ஆனால் நூல்கள் மூலம் அவர்கள் பெறும் அறிவுக்கு மாறான வாழ்க்கையையே வாழு பவர்களாக இருப்பார்கள்.

சிலர் நூல்கள் எதையும் வாசிக்காதவர்களாக பாமரர்களாக இருப்பார்கள். ஆனால் பண்புள்ள வர்களாக இருப்பார்கள்.

பல நூல்களைக் கற்றும் பண்பற்றவர்களாக வாழும் அறி வாளிகளை விட நூல்கள் எவற்றை யும் கற்காத பண்பாளிகளே மேலானவர்கள். என்பது எனது அபிப்பிராயம். அதுவே இன்றைய தேவையாகவும் இருக்கின்றது.

பல நூல்களையும் கற்று பண்புள்ளவர்களாகவும் வாழும் சிலரே "உயர்ந்தோர்" என்று பழந்தமிழ் இலக்கியம் கூறுகிறது. இவர்களே தமது கொள்கையில் உறுதிப்பாட்டோடு வாழ்பவர்கள். இவர்களே சான்றோர்களாகவும் மதிக்கப்பட்டனர்.

"உலகம் என்பது உயர்ந் தோர் மேற்றே" என்பதிலுள்ள உயர்ந்தோர் யார் என்பது இன்று பலருக்குப் புரியாத புதிராக இருக் கிறது. இதுபற்றி இங்கே சிந்திப் பதை விட்டு விட்டுத் தொடர்வோம்.


கலாநிதி ந. இரவீந்திரன் அவர்கள் நூல்கள் பலவற்றை வாசித்தவர். அதனால் அவர் ஓர் அறிவாளியாகப் போற்றப் படுகிறார். அவரது வாசிப்பு நுனிப்புல் மேய்தலாக இருக்காது. ஆழமானதாக இருக்கும். அகலமானதாக இருக்கும். அதனால் அவரது அறிவு நுண்ணியதாக இருக்கின்றது.

அறிவாளிகள் என்று பெயர் பெற்ற பலரை நாங்கள் கண்டிருக்கிறோம். ஆனால் அறிவுக்குரிய பண்பு கொண்டவர்களாக சிலரையே காண்கிறோம். "இணர் ஊழ்த்தும் நாறா மலர் அனையர்" ஆக உள்ள பலர் சமூகத்திற்குப் பயன்படாதவர்களாக வாழ்ந்து முடித்திருக்கிறார்கள்.

கலாநிதி ந. இரவீந்திரன் அவர்கள் கசடறக் கற்றவராகவும் கற்றபடி நிற்பவராகவும், விளங்குகிறார். தான் கற்றவற்றை தன் பகுத்தறிவால் ஆராய்ந்து ஏற்றுக்கொண்டவற்றை தனது எழுத்து மூலமும் பேச்சு மூலமும் மட்டுமின்றி தனது வாழ்க்கை மூலமும் நடைமுறைப்படுத்திக் காட்டி வருபவர்.

எந்தக் கருத்தையும் ஆதாரபூர்வமாகப் பேசியும் எழுதியும் வரும் கலாநிதி ந இரவீந்திரன் அவர்கள் சம கால அறிஞர்களில் முதல் வரிசையில் வைத்துப் போற்றத் தக்கவர்.

மாற்றுக் கருத்துக்கு மதிப்பளிப்பவர். கருத்துச் சுதந்திரத்தை மதிப்பவர். வலிந்து தன் கொள்கைகளை எவருக்கும் திணிக்காதவர். தான் ஏற்றுக் கொள்ளாத, தனக்குப் பிடிக்காத கருத்தை ஒருவர் சொல்லும் போதும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்பவருக்கு மதிப்பளித்து செவிகொடுத்துக் கேட்பவர்.

மேடைகளில் பேசும்போது இன்னொருவரின் நல்ல கருத்தைச் சொல்ல வேண்டி வரும் போதெல்லாம் கருத்துக்குச் சொந்தக்காரர் சபையில் இருந்தாலென்ன இல்லாது விட்டாலென்ன அவரது பெயரைக் குறிப்பிட்டு மரியாதைப் படுத்தும் பண்பாளர்.

தனக்கென ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்கி வைத்திருப்பவர். பேசுவதைவிட செய லாற்றுவதிலேயே அதிக கவனம் செலுத்துபவர். பழகுவதற்கு இனிய பண்பாளர்.

*1985, 1986* ஆண்டுகளில் நான் நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஹோல்புஷரூக் தமிழ் மகாவித்தியால யத்தில் ஆசிரியப் பணி ஆற்றிக் கொண்டிருந்த காலத்தில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் இவரை முதன் முதல் சந்தித்தேன்.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளி யீடாக வந்துகொண்டிருந்த தாயகம் சஞ்சிகை சம்பந்த மான ஒரு கலந்துரையாடலுக்கு நண்பர் சு.முரளிதரன் அவர்களுடன் சென்றபொழுதுதான் கலாநிதி ந. இரவீந்திரன் அவர்களை முதன் முதல் சந்தித்து உரையாடினேன்.(அப்போது கலாநிதி இல்லை)

பின்பு ஹட்டன் நகரில் இடம்பெற்ற பாரதி பற்றிய ஒரு கூட்டத்தில் மீண்டும் சந்தித்ததாக ஞாபகம்.

*1992* இல் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தி யாலயத்தில் நாங்கள் இருவரும் ஒன்றாக ஆசிரியப் பணி புரிந்தோம். அப்போதுதான் கலாநிதி ந. இரவீந்திரன் அவர்களது அறிவின் ஆழத்தையும் அகலத்தையும் நுட்பத்தையும் வாசிப்பின்மேல் அவர் கொண்டிருந்த தணியாத தாகத்தையும் ஓரளவுக்கு அறியக்கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

அங்கேதான் எமது நட்பு உருவாகியது. அந்த ஆண்டில் விபுலானந்தர் நூற்றாண்டு விழாவை அங்கே நாங்கள் மிகச் சிறப்பாக நடத்தினோம். தமிழ்த்தினப் போட்டிக்காக நான் எழுதி இயக்கிய "முற்பகல் செய்யின்" என்ற நாடகத் தயாரிப்பில் எனக்கு முழுமையான ஒத்துழைப்புக் கொடுத்தார்.

அப்போது கலாநிதி ந. இரவீந்திரன் அவர்களது தகுதி அவரது சான்றிதழ்கள் மூலமான கல்வித் தகுதியாலும் நியமனம் பெற்ற வகைசார்ந்தும் மட்டுமே அதிபர் அவர்களால் அறியப்பட்டிருந்தது.

இவை தான் எல்லோருக்கும் உரிய அளவு கோல்களாக இன்றும் இருக்கின்றன. ஆனால் நான் கலாநிதி ந. இரவீந்திரன் அவர்களின் அறிவையும் ஆற்றலையும் அப்போதே தெரிந்து கொண்டு விட்டேன்.

அங்கிருந்து கலாநிதி ந.இரவீந்திரன் அவர்கள் கொட்டகலை ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விரிவுரையாளர் பதவிகிடைத்துச் சென்றமை எனக்கு மகிழ்ச்சியையும்அதேவேளை கவலையையும்கொடுத்தன.

தனது தகுதிக்குரிய பணிக்குச் செல்கிறார் என்பதில் மகிழ்ச்சியடைந்த போதிலும் பிரிந்து செல்கிறார் என்பதில் கவலை கொண்டேன். உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிந்தார்.

அங்கிருந்து வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று திரும்பி வந்த கலாநிதி இரவீந்திரன் அவர்கள் வவுனியாவில் தனது தடத்தை ஆழப் பதித்தார். தனக்கென ஒரு மாணவக் கூட்டத்தை உருவாக்கி வைத்திருந்தார்.

அக்காலத்தில்தான் *1997* மாசி மாத முழுநிலா நாளில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் முதலாவது கூட்டத்தைக் கூட்டினோம்.

இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்துறையில் மூத்த விரிவுரையாளராகப் பணி யாற்றிக் கொண்டிருக்கும் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் அவர்கள், இப்போது வவுனியாப் பல்கலைக் கழகமாக மாறியிருக்கும் அப்போதைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் விரிவுரையாள ராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். நாங்கள் மூவரும் சேர்ந்து வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் என்ற அமைப்பை உருவாக்கினோம்.

அது வவுனியாவின் பொற்காலம் என்று சொல்லலாம். கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர் களுக்குப் பின்னாலும் ஒரு மாணவர் கூட்டம் இருந்தது. எனது மாணவர்களும், சேர்ந்துகொள்ள மூன்று தரத்தி லான மாணவர்களின் சேர்க்கையில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் செழித்து வளர்ந்தது. மாதாந்த முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன. கலாநிதி ந. இரவீந்திரன் அவர்களின் குடும்பம் எனது குடும்பத்தோடு நெருக்கமாகியது. இன்றும் அந்த நெருக்கம் தொடர்கின்றது. சில வருடங்களின் பின் அவர் அழுத்கம தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று கொழும்பு வாசியானது எனக்கு மட்டுமல்ல வவுனியா மாவட்டத்துக்கே பேரிழப்பாக இருந்தது.

எனது "மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதை கள்" என்ற ஆய்வு நூலை தமது தேசிய கலை இலக்கியப் பேரவை மூலம் வெளியிட்டு என்னை உற்சாகப்படுத் தினார். தமிழ்நாடு சவுத் ஏசியன் புக்ஸ் இணைந்து இந்த நூலை தமிழ் நாட்டில் அச்சிட்டது குறிப்பிடத் தக்கது. இந்த நூல் வெளியீடு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றபோது கலாநிதி ந. இரவீந்திரன் அவர்களும்உரையாற்றியது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

பின் அவரது "பின் நவீனத்துவமும் அழகியலும்" என்ற நூலுக்கு முன்னுரை எழுதும் வாய்ப்பை எனக்குத் தந்தார். அந்தப் புத்தக வெளியீடு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றபோது எனக்கும் உரையாற்றச் சந்தர்ப்பம் தந்தார். அவரோடனான வவுனியா வாழ்க்கை விபரிக்கமுடியாதது. கலாநிதி ந.இரவீந்திரன், கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், நான்(அகளங்கன்) ஆகிய மூவரும் மும் மூர்த்திகளாக சேர சோழ பாண்டியர் களாக ஆனால் ஒற்றுமையாக வலம்வந்த காலமது.

ஒருநாள் கலாநிதி ந.இரவீந்திரன் அவர்களுடன் காரசாரமான விவாதம் ஒன்று ஏற்பட்டது. நாங்கள் சிலர் அவரோடு வாதாடினோம். அனைத்துலக தமிழாராய்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா நாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தியது பிழை என்பது அவரது வாதம். அரசியல்க் காரணங்களுக்காக அம் மாநாடு பெரு விழாவாக ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் யாழ்ப்பாணத்தில் ஆராய்ச்சி மாநாட்டுக்குரிய போதிய வசதிகள் இருந்திருக்கவில்லை என்றும் அவர் வாதிட்டார்.

பேராசிரியர் க.கைலாசபதியின் அணியைச் சேர்ந்த மாக்சியவாதி அவர் என்பது எங்களுக்குத் தெரியும். பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் கொழும்பில் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுவதையே விரும்பியிருந்தார் என்பதும் எங்களுக்குத் தெரியும்.

நானும் இன்னொரு நண்பரும் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் அணியைச் சேர்ந்தவர்கள் என்பதும் அவருக்குத் தெரியும். தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தியதனாலேயே நாங்கள் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் அணியைச் சேர்ந்தவர்களாக இருந்தோம். அத்தோடு நாங்கள் தமிழரசுக் கட்சிக்காரர்களும்கூட.

நான் யாழ்ப்பாண வளாகத்தில் படிக்கச் சென்ற காலத்தில் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் வளாக முதல்வராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். யாழ்ப் பாண வளாகத்தின் தமிழ் மன்றத் தலைவராக நான் இயங்கிய காலத்தில் பேராசிரியர் க.கைலாசபதியுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

அவர்மேல் எனக்கு முன்பு இருந்த வெறுப்புக் குறைந்தது. மிகவும் எளிமையானவர். பண்புள்ளவர். ஆற்றல் மிக்கவர் என்றவகையில் அவர்மேல் மதிப்பு ஏற்பட்டது. அவருக்குப் பின் யார் யாழ் வளாகத்திற்கு முதல்வராக வரவேண்டும் என்ற கேள்வி எழுந்தபோது. எமது முதல்த் தெரிவு பேராசிரியர் சு. வித்தியானந்தனாகவே இருந்தது. சில பேராசிரியர்களும் எங்களிடம் அதற்கான முயற்சியைச் செய்யும்படி வேண்டினார்கள்.

அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு அ. அமிர்தலிங்கம் அவர்களின் வீட்டுக்குச் சென்று நானும் இன்னும் சில தமிழ்மன்ற உறுப்பினர்களும் அவரிடம் அந்தக் கோரிக்கையை முன்வைத்தோம். எப்படியோ பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் வளாக முதல்வராக பணிக்கு வந்தார். பின் 1978 இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதல்த் துணைவேந்தர் என்ற பெருமையையும் பெற்றார்.

அப்போது தமிழ் மன்றத்தலைவர் என்ற வகையில் அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. இப்படி இரண்டு பெரும் மேதைகளோடும் பழகியிருந்தும் எனக்கு முன்மாதிரியானவராக பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களே விளங்குகிறார்.

இந்த நிலையில் எங்கள் வாக்கு வாதம் முற்றியது. தமிழாராய்ச்சி மாநாடு என்ற போர்வையில் அரசியல் மாநாடு நடத்தி அநியாயமாக மக்களைப் பலி கொடுத்துவிட்டார் பேராசிரியர் சு.வித்தியானந்தன் என்ற குற்றச்சாட்டை கலாநிதி ந.இரவீந்திரன் முன் வைத்தார்.

விவாதம் கருத்துமோதலாக மட்டுமே இருந்தது. யாழ்ப்பாணத்தில் ஆராய்ச்சி மாநாடு நடத்துவதற்குரிய வசதிகள் போதாது. குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து வரும் பிரதிநிதிகள் ஆய்வாளர்கள் தங்குவதற்கு போதிய வசதிகள் அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்திருக்க வில்லை. என்று கலாநிதி ந. இரவீந்திரன் அவர்கள் சொன்னார்.

மறவன் புலவு க.சச்சிதானந்தம் அவர்களின் நூலொன்றில் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது நடந்த தாக அவர் எழுதியிருந்த ஒரு தகவலை நான் சொன்னேன். வெளி நாட்டிலிருந்து வந்தவர்களுக்கு கக்கூஸ் பேப்பர் (Toilet paper) யாழ்ப்பாணத்தில் வாங்க முடியாமல் அவசரமாகக் கொழும்பிலிருந்து தருவித்த தாக அவர் எழுதியிருந்ததைத்தான் நான் சொன்னேன்.

உடனே கலாநிதி.ந.இரவீந்திரன் அவர்கள் அதைத் தனக்குச் சார்பான கருத்தாக எடுத்துக்கொள்ள எல்லோரும் வாதத்தை விட்டு விட்டு சிரித்து சமரசமானோம். இப்படி பகையின்றி அறிவுபூர்வமான பல வாக்குவாதங்களை கலாநிதி ந.இரவீந்திரன் அவர்களுடன் நடத்தியிருக்கிறோம்.

வவுனியாவுக்கான ஒரு தனித்துவமான இலக்கியப் போக்கை நாங்கள் உருவாக்கினோம். பல எழுத்தாளர்களை உருவாக்கியும் உற்சாகப்படுத்தியும் வவுனியா மண்ணை இலக்கிய வளப்படுத்தினோம். அந்தப் பாதையில்தான் இன்றும் வவுனியாவின் இலக்கியம் வளர்ந்து கொண்டிருக்கின்றது.

வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் தனது நேரத்தை சரியாக முகாமைத்துவப்படுத்தி வாழ்பவர்களில் கலாநிதி ந. இரவீந்திரன் அவர்கள் முதன்மையானவர். புதுப் புதுச் சிந்தனைகளை பொருத்தமாக ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தும் ஆற்றல் இவரது தனித்திறமை என்று சொல்லலாம்.

"ஏன்" என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டதன் மூலம் புனைகதைத் துறைக்குள்ளும் புகுந்து கொண்டதால் சாதாரணர்களும் விளங்கிக் கொள்ளக் கூடியதாக எழுதும் ஆற்றலையும் கொண்டிருக்கிறார். சபைகளில் மிகச் சாதாரணமானவராகவே அமர்ந்து கொள்வார். எந்த முதன்மையையும் எதிர் பார்க்க மாட்டார். தனது கருத்து நிறைந்த அறிவார்ந்த ஆதாரம் மிக்க பேச்சுமூலம் தனது திறமையை சபைக்கு வெளிப்படுத்தி சபையைக் கவர்ந்து கொள் வார்.

கலாநிதி ந. இரவீந்திரன் அவர்களைப் போன்றவர்களைக் காண்பது அரிதினும் அரிது என்றே சொல்லலாம்.

ஒரு கல்விமானாக, ஆசிரியராக, ஆய்வாளராக, படைப்பிலக்கிய வாதியாக, சமூக ஏற்றத்தாழ்வுக்கு எதிரான போராளியாக, மானுட நேயம் மிக்க மிக நல்ல மனிதராக பல முகம் கொண்ட கலாநிதி ந. இரவீந்திரன் அவர்கள் மானுட வளர்ச்சிக்கு இன்னும் பணிசெய்ய எல்லாம் வல்ல இறைவனை அருள் பாலிக்க வேண்டுகிறேன். கலாநிதி ந.இரவீந்திரன் அவர்கள் ஆரோக்கியத்தோடு கூடிய நீண்ட ஆயுளோடு மகிழ்ச்சியான குடும்ப உறவுகளோடு சகல சிறப்புக்களையும் பெற்று வாழ வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இதயராசன்

# கலாநிதி. ந. இவீந்திரனின் கலாசாரம் எதிர் கலாசாரம் புதிய கலாசாரம்

**முகவுரை:**

கலாநிதி ந.இரவீந்திரன் அவர்கள் அரசியல், கலை, இலக்கியம், சமயம், பண்பாடு, தத்துவம் பற்றி நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளையும், பல நூல்களையும் எழுதியுள்ளார். தமிழ் மொழியில் அரசியல், இலக்கிய விமர்சனத் துறையில் ஆழமாகக் காலூன்றியுள்ள இவரது ஆளுமையினைச் சிறப்பித்து, வெளிவரும் ஜீவநதி இதழில் எழுதும் வாய்ப்புத் தந்தமைக்கு முதலில் நன்றி தெரிவிப்பதோடு, கலாசாரம் எதிர் கலாசாரம் புதிய கலாசாரம் நூல் பற்றிய எனது கருத்துக்களைப் பதிவு செய்கின்றேன்


இந்நூல் பாரதியாரின் அரசியல் இலக்கியம் வரலாறு பற்றிய ஒரு மறுமதிப்பீடு, இருபதாம் நூற்றாண்டில் தமிழ் புனைகதை இலக்கியம், ஜெயமோகனும்: திசையழிந்த அத்துவா வெளியில், கலாசாரம் எதிர் கலாசாரம் புதிய கலாசாரம் ஆகிய நான்கு கட்டுரைகளை உள்ளடக்கியதாகும்.

மேற்கூறிய நான்கு கட்டுரைகளும் ஆழ்ந்த புலமையுடன், சமகாலத்தில் எதிர்கொள்ளப்படும் எதிர் விமர்சனங்களையும் கருத்திற் கொண்டு நுணுகி எழுதப்பட்ட ஆய்வேடாகத் திகழ்கின்றது.

**1. பாரதியார் பற்றிய மறுமதிப்பீடு**

எட்டயபுரத்தின் விதை இந்திய தேசத்தின் தமிழ் இலக்கிய விருட்ஷமாக வளர்ந்த வரலாறு சுவராசியமானது. மிகக்குறைந்த காலமே வாழ்ந்த போதிலும் ( 1882 - 1921.) காலனித்துவ ஆட்சியின் போது இந்திய தேசம் சுதந்திரம் பெறவேண்டும், அத்துடன் சகலவிதமான அடிமைத்தனமும் ஒழிய வேண்டும் என்று பாடல்களும் கட்டுரைகளும் எழுதியவர்.

அன்று முளைவிட்ட இந்திய தேசிய எழுச்சியின் பங்குதாரராகி களப்பணியாற்றியவர் பாரதியார். தனது எழுத்துக்கள் மூலம் மக்களை எழுச்சியூட்டியவர். துரதிஷ்டவசமாகச் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னமே மரணித்துவிட்டார். சுதந்திரத்திற்குப் பின்னரும் அவர் வாழ்ந்திருப்பின் அப்போதும் முற்போக்கு நிலைப்பாடே எடுத்திருப்பார் என்பதற்கு, அவரது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்களைப் புறநிலைச் சூழலுடன் பொருத்திப் பார்க்கவேண்டும் என்று கருத்துரைக்கின்றார் நூலாசிரியர்.

"சமகாலத் தமிழ் இலக்கியத்தில் அரசியல் இலக்கியம் என்ற கோட்பாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் பாரதியுடன் மிக நெருங்கிப் பிணைந்த உறவைக் கொண்டுள்ள காரணத்தால், அரசியல் இலக்கியத்தில் பாரதியின் ஈடுபாட்டை ஆராய்வது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாயமைந்துள்ளது."

"ஆரம்பந் தொட்டே ஏற்றத்தாழ்வான வர்க்கங்களாகப் பிளவுபட்டுவிட்ட சமூகத்தில் ஆதிக்கஞ் செலுத்துவதற்காக வர்க்கப் பிரிவுகள் தம்முள் நடத்தும் போராட்டத்தில் ஒரு வர்க்கஞ் சார்ந்ததாக நின்று, பாலில் நெய்போல் தன்னகத்தே அரசியல் கோட்பாட்டை மறைபொருளாகத் தாங்கிவந்துள்ளது அதன் திரண்ட வெளிப்பாடு, அதாவது அரசியல் சிந்தனைகள் இலக்கியத்தில் வெளியாகவே இனங்காட்டிக் கொள்ளும் போக்கு பாரதி பாவரிகளில்தான் ஆரம்பமாகின்றது."

மேலே குறித்துக்காட்டிய இரண்டு மேற்கோள்களும் இவரது பாரதி ஆய்வின் முக்கியத்துவத்தைச் சுட்டி நிற்கின்றன. மேலும் இவரது பாரதி பற்றிய ஆய்வில், அரசியல் இலக்கியத்தின் தோற்றுவாய், தேசிய எழுச்சிப் பேரலையில் பாரதி, ஒடுக்குமுறையைச் சாடும் பாங்கு, அக்டோபர் புரட்சி பற்றிப் பாரதி, பேரெழுச்சி தோற்றிய புதிய விதி, ஆயுதமேந்திய எழுச்சியும் இந்திய விடுதலையும், தேச சுதந்திரமும் சமூக விடுதலையும், புதிய உலக நோக்கும் பாரதியும், முப்பெரும் பாதைகளும் பாரதியும், தனித்துவப் பாதை வகுத்த பாரதி, புதுவை வாழ்வின் மறுபக்கம், ஊற்றுக்களும் வெளிப்பாடும் என்று பன்னிரண்டு தலைப்புக்களில் கால தேச வர்த்தமானங்களைக் கருத்தில் கொண்டு ஆய்வு செய்துள்ளார்.

கைத்தொழில் புரட்சியுடன் தோன்றிய முதலாளித்துவ சமூகம், நிலத்துடன் கட்டுண்ட நிலப்பிரத்துவ சமூகத்தைப் புரட்டிப்போட்டது. அதன் பேறாக சமயம், பண்பாடு, கலை, இலக்கியம், அரசியல் அனைத்தும் புதிய வடிவம் எடுத்தன. அதன் குறியீடாகவே பிரெஞ்சியப் புரட்சியைப் பார்க்க வேண்டும்.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவம், ஏகாதிபத்தியமாக எழுச்சிபெற்று ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளைக் காலனித்துவ நாடுகளாக மாற்றின. அப்போது அந்தக் காலனித்துவப் பிணைப்பிலிருந்து விடுதலை பெறுவதற்காக, ஒடுக்கப்பட்ட தேசங்கள் போராட்டங்களில் ஈடுபட்டன. இத்தகைய சூழ்நிலையில்தான் இந்திய சுதந்திர போராட்டம் முளைவிடத் தொடங்கியது. இத்தருணத்தில் இந்திய அரசியல் போராட்டத்திற்கு கலை, இலக்கியத்தினைப் பண்பாட்டுத் தளத்தில் கையிலெடுத்தவர் பாரதியார்.

மேலும் பாரதி, தேசிய விடுதலையுடன் சமூக விடுதலை பற்றியும் தனது எழுத்துகளில் பிரதிபலித்ததை காணத்தவறுவதை என்னவென்று சொல்வது. அக்காலச் சூழ்நிலையின் புறநிலையைவைத்து மதிப்பிடாமல் அகநிலைப்பட்டு, தற்கால சூழ்நிலையுடன் பொருத்திப் பார்க்கும் பெரும் தவறினைச் செய்வதனைத் தக்க ஆதாரங்களுடன் வெளிப்படுத்துகின்றார் நூலாசிரியர்.

பாரதிபற்றிய மறுதலையான விமர்சனமாக பாரதி தமிழைப் போற்றவில்லை ஆரியத்தினையும் சமஸ்கிருதத்தினையுமே போற்றிப் பாடினார், பாரதி சுதேச போராட்டத்தில் உறுதியுடன் ஈடுபடவில்லை தன்னுடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை மறுதலித்ததோடு வெள்ளையரிடம் மன்னிப்புக்கோரி கடிதம் எழுதினார், சனாதன தர்மத்தை ஆதரித்தார், திலகரை மறுதலித்து மகாத்மா காந்தியின் சீடரானார், புதுவைக்குப் போனபின்னர் ஆன்மீகத்தில் ஈடுபட்டு ஏறக்குறைய சமய பக்தர் ஆகிவிட்டார். என்ற குற்றச்சாட்டுக்களை கோ.கேசவன், அ.மார்க்ஸ் உட்பட பல அதிதீவிர புரட்சியாளர்கள் முன்வைக்கின்றனர்.

பாரதியாரின் எழுத்துக்களை அவரது சமகாலத்தவர், பாரதியின் மரணம் நடைபெற்றுப் பல காலத்தின் பின்னர், தமது அப்போதைய மனப்போக்கில் எழுதி வைத்தவற்றை முதல் ஆதாரமாகக் கொண்டு, அவர் சனாதனப் பிராமணர், தமிழ்த் தேசியத்துக்கும் தமிழர்க்கும் எதிரானவர் என்ற விமர்சனங்களை இன்றும் முன்வைக்கின்றனர்.

இத்தகைய ஆய்வாளர்கள் நூறு வருடங்களுக்கு முன்னர் சனாதனப் பிராமணர்களின் கருத்தியலையும் அதிலிருந்து விடுபட்ட பாரதியின் முற்போக்குச் சிந்தனையைக் கண்டுகொள்ள மறுக்கின்ற பக்கத்தினையும், அவரது காலத்தில் இந்திய சுதந்திர போராட்ட களத்தின் உண்மை நிலையையும் கருத்தில் கொள்ளாமல், பாரதியின் மரணத்திற்குப் பிந்திய வரலாற்றுப் போக்குகளை முன்னிறுத்திய ஆய்வுக்குப் பாரதி எப்படிப் பொறுப்பேற்க முடியும் என்ற வகையில், அத்தகையோரின் அரைவேக்காட்டு ஆதாரங்களை யானை பார்த்த குருடர்களென மறுத்துரைக்கும் பாங்கு, கட்டுரையாளரின் நுண்மாண் நுழை புலத்தினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

**2. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் புனைகதை இலக்கியம்**

தமிழ் இலக்கியம் செய்யுள் இலக்கியத்தில் பண்டுதொட்டே செழுமையுடன் திகழ்ந்துள்ளது. ஆனால் உரை நடை வடிவில் வருவதற்கான முன் முயற்சிகள் அப்பப்போ மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும், நவீன கலை வடிவமான நாவல், சிறுகதை தமிழிற்குப் புதியனவாகத் தொடக்கிவைத்த முன்னோடிகள் தொடக்கம், இன்று புதிய வடிவமும் உத்திகளும் தேடும் ஜெயமோகன் வரையான எழுத்துகளை ஒரு பறவைப் பார்வையின் மூலம், வாசகர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஆய்வினை மேற்கொண்ட கட்டுரையாகும்.

வேதநாயகம்பிள்ளை 1879 இல் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம், இராஜம் ஐயரின் கமலாம்பாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திரம், மாதவையாவின் பத்மாவதி சரித்திரம், பண்டிதர் நடேச சாஸ்திரி யின் தீனதயாளு, தி.ம.பொன்னுசாமி யின் கமலாட்சி வரையான நாவல் களைக் குறிப்பிட்டு, தமிழிற்குப் புதிய இலக்கிய வடிவம் ஆரம்பமாவதையும் அக்கால சிந்தனை மரபுக்கு ஏற்பவும், காவியங்களின் தாக்கத்தினாலும் வசன நடையிலான காவியமாகவே நாவல் எழுதப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார்.




செய்யுள் நடையிலிருந்த இலக்கியத்தை, எளிமையான வசன நடைக்குக் கொண்டுவந்தவர் வேத நாயகம் பிள்ளை என்றால், தமிழ் நாவலுக்குப் புதிய வடிவத்தை வழங்கி யவர் மாதவையா என்பதை யும் குறிப்பிடுகின்றார். இவை யாவும் அறிவுறுத்துதல், இன்ப மூட்டுதல், உள்ளதை உள்ளபடி காட்டுதல் போன்ற பண்புகளைக் கொண்டி ருந்தன. ஆனால் சமூக அமைப்பை மாற்றத்தக்கதான நவீன சிந்தனையை அடிப்படையைக் கொண்டிருக்க வில்லை, படித்த உயர் வர்க்கத்தினர் அல்லது மத்திய வர்க்கத்தினரின் பொழுது போக்குக் கருவியாகவே நாவல்கள் இருந்தன என்பதை யும் காட்டி நிற்கின்றார்.

அடுத்த கட்டமாக பாரதியார், வ.வே.சு.ஐயர் வழி வந்தோரின் எழுத்துக்களை அலசுகின்றார். மரபை மீறிக் கவிதை இலக்கியத்திற்குப் பாரதி எவ்வாறு முன்னோடி யானாரோ அதே போலவே சிறுகதை இலக்கியத்திற்கும் பாரதி திகழ்ந்தார் என்பதை எடுத்துக் காட்டுகின்றார். *1905 – 1906* இல் எழுதப்பட் துளசிபாயி என்ற ராஜபுத்திர கன்னிகையின் சரித்திரம் என்ற தொடர் சிறுகதை, *1913* இல் எழுதி முற்றுப்பெறாத சின்னச்சங்கரன் கதை, அதே ஆண்டில் எழுதிய ஆறில் ஒரு பங்கு ஆகிய கதைகள் கவனத்தை ஈர்ப்பனவாக அமைந்தவற்றின எடுத்துக் காட்டியுள்ளார்.

பாரதியார் ஐரோப்பிய நவீன வரலாறு வழங்கிய புதியவடிவத்தை எமது சூழலுக்கு இசைவாக மாற்றியமைக்கின்றார். தேசிய விடுதலை உணர்வோடு சமூக விடுதலை அம்சங்களையும் உள்வாங்கி எழு தினார். அவர் எழுதிய புதிய சிறுகதை வடிவம் தனக்குப் புரியவில்லை என்று செல்லம்மாள் சொன்னபோது, சாதாரண மக்களுக்கும் புரியும்படி, பஞ்சதந்திரக் கதை வடிவங்களுடன் இணைத்துப் புதிய மரபைத் தொடக்கி வைக்க முயன்றார் பாரதி என்பதையும், வ.வே.சு.ஐயர் இதேகாலத்தில் குளத்தங்கரை அரச மரம் போன்ற கதைகள் மூலம் கவனத்தை ஈர்த்தவர். ஆனால் சுதேச போராட்டத்தைத் தாண்டி வெகுஜன மக்களிடம் செல்ல முடியமையின் போதாமையையும் ஆய்வுசெய்துள்ளார்.

மணிக்கொடி காலகட்டம் சிறுகதையின் வடிவத் திற்கு முதன்மை கொடுத்து, காலம் கடந்தும் இலக்கிய உலகில் தாக்கம் செலுத்துவதை விமர்சனம் செய் கின்றார். புதுமைப்பித்தன், தி.ஜ.ரா, கி.ரா, பி.எஸ்.ராமையா, சி.சு.செல்லப்பா, சிதம்பரம் சுப்பிர மணியம், லா.ச.ராமாமிருதம் போன்றோரின் கதைக் கருவினையும் அவர் களது சமூக அக்கறையையும் கேள்விக்கு உட்படுத்துகின்றார்.

அக்கால கட்டத்தில் கல்கியின் எழுத்துக்கள் வணிக நோக்கில் அமைந்தமையும், ஆனந்த விகடன் அப்பாதையில் முடிசூடியதையும் சொல்கின்றார். மணிக்கொடி வணிக லாபத்தைக் கருதாமல் சோதனைப் படைப்புக்களையும் தந்தது என அ.மார்க்ஸ் சொன்னதையும் ஞாபகமூட்டுகின்றார்.

மணிக்கொடி ஏற்படுத்திய சிறுகதை வடிவத் தரமேன்மை மக்களிடம் பிரபல்யப்படுத்தும் தேவை யுடன், பாரதிவழி தொடரப்பட வேண்டிய சூழ்நிலையில் சரஸ்வதி இதழ் தோற்றம் பெற்றதாகக் குறிப்பிடுகின்றார். கூடவே எதிர்முகமாக வெறும் இலக்கியத் தரத்துக்காக, வளமான உள்ளடக்கச் செழுமையை நிராகரித்தபடி எழுத்து சஞ்சிகை தோன்றியது. சி.சு.செல்லப்பாவின் "எழுத்து" அதி உன்னத கலைத்துவத் தீட்சை பெற்றோர் சஞ்சிகையாக முடங்கிப் போனதையும் குறிப்பிடு கின்றார்.

சரஸ்வதியின் தோன்றலான ஜெயகாந்தன் சாதாரண மக்களின் இலக்கியமே புனைகதை என்ற தளத்திற்குத் தமிழ்ப் புனைகதையை வளர்தெடுத்த போதிலும் வளர்ச்சியின் உச்சம் நோக்கி வந்த வேகத்திலேயே சரியவும் தொடங்கினார். வெறும் ஃபிராய்டிய எல்லைக்குள் குறுகி, மக்களைவிட்டு விலகிச் சென்றார். என்று ஆய்வாளர் எழுதுகின்றார்.

நாடு விடுதலை பெற்றபின்னர் எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்து முற்போக்குச் சிந்தனைகளை வெளியிட்ட எழுத்தாளர்கள் தாம் எதிர்பார்த்தவை நிராசைகளான போது, எழுத்துத் துறைக்கு வந்த புதிய கோபங்கொண்ட இளைஞர்கள் ஒருவகையான மன முறிவு மனப்பான்மையோடு உலகைக் காணத் தலைப்பட்டனர்.

அதுவரை உலகைப் புறநிலைப் பார்வையோடு கண்டவர்கள், தம் பாதையை மாற்றிக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மையே உள்முகமாகக் காணத்தொடங்கினர்.அதன் விளைவாகத் தமிழ்க்கதை உலகில் புதிய போக்கு உதயமாயிற்று. சிறுகதை அகமனச் சித்திரிப்பாக மாறிற்று. இதன் விளைச்சலை 1960 – 1970 காலப்பகுதியில் தோற்றம் பெற்ற கசடதபற, நடை, பிரக்ஞை போன்ற சிற்றேடுகள் அறுவடை செய்தன. என்றும் குறிப்பிடுகின்றார்.

சரஸ்வதி வழியில் பாரதி மார்க்கத்தை வளர்த்தெடுத்த தாமரை, செம்மர் போன்ற சஞ்சிகைகள் காலச்சூழ்நிலை காரணமாக தொடர்ந்து இயங்க முடியாமற் போயிற்று. என்பதையும் பதிவுசெய்கின்றார்.

தத்துவார்த்த தளத்திலும் சமூக இயக்கப் போக்கின் முழுமையின் பகுதிகளாய் தேசிய உணர்வு, சாதிய எதிர்ப்பு, பெண்விடுதலை என்பன விளங்கியிருந்த நிலைமாறி ஒவ்வொன்றும் தத்தம் அளவில் அவையே முழுநிறைவென முனைப்படைந்த போக்கை எண்பதுகளில் காண்கின்றோம்..... சமூக மாற்றந் தேடிய புரட்சிகர சக்திகளை அத்திசை வழியே வளரமுடியாமல் தடுத்தது.

இத்தகைய அழிவுக் கோலத்துக்கு ஏற்ற தத்துவமாக அமைப்பியல் வாதமும், அதையும் மறுக்கும் பின் – அமைப்பியல் வாதமும் தமிழ் சூழலுக்கு வலிந்து கொணரப்பட்டன. அமைப்பியல் வாதம் மார்க்ஸியத்தை தலைகீழாக்கிக் கடந்து செல்கிறதென அதை அறிமுகம் செய்த தமிழவன் சொல்கின்றார். அவர்கள் மார்க்ஸியத்தைக் கடந்து மேல்நோக்கிச் சென்றுவிடவில்லை, மீண்டும் ஹெகலிய நிலைக்குச் சரிந்து கருத்துமுதல்வாத பழமையின் பழமைக்கே செல்கிறார்கள் என்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

அமைப்பியல்வாதம் பேசுவோர் புனைகதை இலக்கியத்திற்கு கதை வேண்டியதில்லை என்பர்.... எதையும் மனம்போனபடி எழுத வேண்டியது, எழுதிப் பிரதி வெளிப்பட்டதுடன் ஆசிரியன் இறந்துவிடுவான், இனி பிரதி, அதையும் ஒவ்வொரு தனித்தீவாக உள்ள ஒவ்வொரு வாசகனும் தனது மனக்கோணல்களுக் கேற்ப அர்த்தப்படுத்தி மறு வாசிப்புகள் செய்து கொள்ளலாம். இப்போது பிரதியும் செத்துவிடும். என்று கூறுவதை விமர்சனம்செய்கின்றார்.

மேற்குறித்த நிலைப்பாட்டால் திணறிக் கொண்டிருந்த தமிழ் புனைகதை இல்க்கியம், தொண்ணூறாம் ஆண்டுகளில் இலக்கியத்தரம் உலகத்தரம் என்ற கோஷங்களை முகங்கொள்கிறது. இந்தக் காலத்துக்கேயான கலைத்துவப் பிரதிநிதியாகப் பரிணமித்த ஜெயமோகன் கலைப் படைப்புகளுக்கு யதார்த்தம் எட்ட நிற்க வேண்டும் என்று சொல்வதோடு, நிகழ்வுகளின் அனுபவ சாரத்தை அதாவது அவற்றின் நனவிலி மனப்பதிவுகளை மட்டும் எழுத முடிந்தால் அர்த்த விரிவும் தீவிரமும் கொண்ட படைப்புக்களை உருவாக்க முடியும் எனவும் கூறுகின்றார்.




இவரது வழியில் சமூக அக்கறையுள்ள ஒரு கலைஞனால் செல்லமுடியாது. சமூகக் கொந்தளிப்பிலிருந்து விலகி வெறும் தனிமனித உலைச்சல்களை மட்டுமே கலைப்படைப்புகள் தந்து கொண்டிருக்க முடியாது என்பதையும் நூலாசிரியர் குறிப்பிடுவதன் மூலம் தமிழ் புனைகதை இலக்கியத்தின் மாறுதல் போக்குகளையும் தத்துவத் தளத்தின் மாறுதலையும் துல்லியமாக எடுத்துரைக்கின்றார்.

**3.ஜெயமோகன்: திசையழிந்த அத்துவான வெளியில் :-**

“இன்றைய இலங்கைத் தமிழ்ப் படைப்புக்களைப் பொதுவாகப் பார்க்கும் போது, அனுபவ உலகின் தீவிரத்தை உள்வாங்கி வெளிப்படுத்த முடியாதபடி மொழியும் வடிவமும் பின்தங்கி விட்டிருப்பதாகத் தெரிகிறது. இவற்றில் ஒரு வெடிப்பு நிகழாதவரை இலங்கைத் தமிழ்ப் படைப்பிலக்கியம் இன்று உள்ளது போல பழுக்காமல் உதிர்ந்தவற்றால் நிரம்பியதாகவே இருக்கும். இதுபற்றிய தீவிரமான ஒரு விவாதம் குறைந்தபட்சம் புலம் பெயர்ந்தோர் படைப்புலகிலாவது உடனடியாக நடக்க வேண்டியது அவசியம்.”

“ஒரு தவளைக்குஞ்சும் சில வெம்பல்களும்” என்ற தலைப்பில், நாளிகை சஞ்சிகையில் ஜூலை 1994 இல் ஜெயமோகன் எழுதிய விமர்சனக் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டதே மேலே குறித்துக்காட்டிய பகுதியாகும்.

மக்களின் நடைமுறைப் பிரச்சினைகளில் கவனத்தினைக் குவிக்காமல், அதாவது புறவயமான சூழலை மறந்து, அகவயமான எண்ண அலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதன் பிம்பங்களைத் தொன்மங்கள், படிமங்களுடன் கற்பனை மாளிகையைக் கட்டியெழுப்ப வேண்டும். என்கின்றார்

அதி உன்னத, சாகாவரம் பெற்ற கலைப்படைப்பு என்ற அலங்கார வார்த்தைகளுடன் மீண்டும் வைதீகப் பிராமணிய கலாசாரத்தை கொண்டு வரவே பகீரதப் பிரயத்தனம் செய் கின்றார் ஜெயமோகன் என்பதை, அவரது நதி, திசைகளின் நடுவே, மாடன் மோட்சம், ஜகன் மித்யை, படுகை முதலிய சிறுகதைகள் பேசும் உள்ளடக்கத்தை முன்னிறுத்தி விவாதிக்கின்றார்.

மேற்கூறிய கருத்தியல் சீரழிவைத் தாங்கிய ஜெயமோகன், ஈழத்துத் தமிழ் இலக்கியக் களத்தில் நடைபெற்ற சமூக அநீதிக்கு எதிரான போராட்டம், சிங்களப் பெருந்தேசியத்திற்கு எதிரான போராட்டங்களின் வாயிலா நிறையவே அனுபவங்களைப் பெற்றுள்ளன. எனவே புதிய மொழிகளில் பழைய வடிவங்களையும் சிந்தனைகளையும் போதிக்க வேண்டாம் என்று ஜெயமோகனின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாவிமர்சனத்தை மறுத்துரைத்து, திசையழிந்த அத்துவான வெளியில் சஞ்சரிக்கும் ஜெயமோகனின் திரிசங்கு நிலையைக் கிண்டலுடன் விமர்சிக்கின்றார்.

**4.கலாசாரம் எதிர் கலாசாரம் புதிய கலாசாரம் :**


"அற்பத்தனமான சிறு முதலாளி வர்க்கத் தத்துவங்களிடம் தன்னை இழந்து நிற்கும் அ.மார்க்ஸ் இந்தக் கட்டத்தைப் பிரதி நிதித்துவப் படுத்தி சகல ஒழுங்கமைவுகளையும் தகர்க்கும் அராஜக வாதியாகி விட்டுள்ளார். அக்காரணத்தால் பாட்டாளிவர்க்க அரசையும், அதன் தலைமையில் முதலாளித்துவம் இன்றுவரை மோசமாகச் சிதைந்துவரும் விழுமியங்களை மீளப் பெற்று வளர்க்கவல்ல மக்களுக்கான ஒழுங்கமைவு ஏற்படுவதையும் அ.மார்க்ஸ் எதிர்க்கின்றார்."

"ஜெயமோகன் தூய கலைப் பிராமணியத்திடம் தன்னை இழக்க, இங்கே தலித்தியத்துள் அ.மார்க்ஸ் மறைந்து கொண்டிருக்கின்றார். ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகத் தலித்தியம் துலங்குவதாகக் கூறிக்கொண்டு, அதற்குக் குரல்கொடுக்கும் முழு உரிமையும் தாமே முழுக் குத்தகைக்கு எடுத்துவிட்டதாகத் தம்பட்டம் அடித்துக்கொண்டு, உண்மையான தலித் மக்களின் விடுதலைக்கு மார்க்கம் காட்டும் வர்க்கப் போராட்டத்தின் பக்கம் அவர்களின் வளர்ச்சி அமைவதைத் தடுக்கும் வகையில் முன்னேறும் தலித் சக்திகளை வெறும் தன்னார்வக் குழுக்களாய் முடக்கும் கைங்கரியத்தையே அ.மார்க்ஸ் போன்றோர் செய்கின்றனர்."

மேலே குறிப்பிட்ட இரண்டு மேற்கோள்களும் அ.மார்க்ஸ், ஜெயமோகன் போன்றோரின் காலனித்துவ, ஏகாதிபத்தியத்தின் சீரழிவுகளை மூடிமறைத்து சுரண்டப்படும், ஒடுக்கப்படும் தேசங்களையும் மக்களையும் மீண்டும் பிற்போக்குவாத சகதிக்குள் வீழ்த்துவதற்கான சதியே அன்றி வேறில்லை என்பதை எடுத்துரைக்கவே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

தமிழகத்தைப் பொறுத்த மட்டில் பெரியாரிஸம் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும் அதன் போதமை கண்டு, பொதுவுடமை இயக்கத்தில் ப.ஜீவானந்தம் போன்றோர் இணைந்து செயற்பட்டனர். திராவிடர் இயக்கம் வெறுமனமே பிராமண எதிர்ப்பு இயக்கமாகக் குறுகிப்போனதால் அங்கு ஏற்பட்ட மாற்றங்களையும் கட்டுரையாளர் அலசுகின்றார்.

மேற்போந்த காரணங்களால் சாதிய ஒடுக்கு முறைக்கு உள்ளான ஒடுக்கப்பட்ட மக்கள், தனித்தனிச் சாதிகளாகப் போராடுவதால் முழுமையான வெற்றியை அடையமுடியாமல் முடங்கிப்போவதைத் தவிர்ப்பதற்கு ஒடுக்கப்படும் சாதிகள் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தையும், ஆதிக்க சாதியிலுள்ள முற்போக்கு எண்ணமும் செயற்பாடும் கொண்டவர்களுடன் இணைந்த போராடுவதே சிறந்த மார்க்கமாகும். அதற்கு ஒரு முற்போக்கான ஆற்றல்மிக்க அமைப்பொன்று கட்டியெழுப்பப்பட வேண்டியதன் அவசியத்தை ஈழத்து அனுபவத்தை முன்வைத்து, இவ்வாறான முயற்சிகளுக்குத் தடைபோடும் அ.மார்க்ஸ் போன்றோரைக்



கடுமையாக விமர்சிக்கின்றார். இக்கட்டுரை எழுதப்பட்ட காலத்தின் தொலைவில் அ.மார்க்ஸ் மீண்டும் மார்க்ஸியத்தின் பக்கம்செயற்படுவதும் குறித்துக்காட்ட வேண்டியது, வாசகர்களின் குழப்பத்தை நீக்கும் எனக்கருதுகின்றேன்.

**முடிவுரை :**

நூலாசிரியர் தனது முன்னுரையில் குறித்துக் காட்டியதுபோல, தனித்தனிக் கட்டுரைகளாக இவைகள் அமைந்த போதிலும் எதிர் கலாசாரத்தை விவாதிக்கும் ஒரு இளையோடுவதைக் காணமுடிகின்றது. இதுவே இந்நூலின் சிறப்பாக அமைகின்றது.

"கலாசாரம் எதிர் கலாசாரம் புதிய கலாசாரம் என்னும் தலைப்பில் அவர் நிலை மறுப்பின் நிலை மறுப்புச் சிந்தனை வளர்ச்சி விதியை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். கலை இலக்கிய வடிவங்களில் உள்ளடக்கங்களிலும் இயக்கவியல் செயற்பாட்டின் வழிப்படுத்தும் இலக்கிய செல்நெறியைச் சுட்டிக்காட்டித் தமது திறனாய்வுக்கு அரண் அமைத்துள்ளார்." என்று முன்னுரையில் பெ.சு.மணி குறிப்பிட்டது பொருத்தம் கருதி இங்கு பதிவுசெய்கின்றேன்.

அமைப்புக்கள், சிறு குழுக்கள் என்பவற்றின் கோட்பாடுகள், செயற்பாடுகள் என்பவற்றில் அ.மார்க்ஸ் போன்றோரின் தாக்கம் இருந்ததுபோல, ஜெயமோகன் பார்ப்பனியத்தின் தத்துவ ஆசானாகி, தமிழ்ப் புனைகதைகள் சாதாரண மக்களின் பக்கம் சாராமல், மேல்தட்டு வர்க்கத்தின் உன்னத கலைப்படைப்பாகவே இருக்க வேண்டும் என்று, சட்டாம்பியாராக நடப்பதையே நூலாசிரியர் கேள்விக்கு உள்ளாக்குகின்றார்.

இந்நூல் எழுத்துலகில் அறிமுகமாகும் எழுத்தாளர்களுக்கும், தேர்ந்த வாசகர்களாக மிளிர ஆசைப்படும் வாசகர்களுக்கும் பெரு விருந்தாய் அமையும் என்பது எனது கணிப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவப் பருவத்திலேயே சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நன்கு விளங்கிக்கொண்டு, அதற்கான தீர்வுகளையிட்டு சிந்தித்தவர்தான் பேராசிரியர் க.கைலாசபதி (1933 - 1982) அவர்கள். அதனால்தான் பல்கலைப் கழக மாணவனாக இருக்கும்போதே, முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தாபிக்கப்பட்ட அதே காலகட்டத்தில் அதில் இணைந்துகொண்டார். கூடவே கோட்பாட்டு உருவாக்கத்திலும் முக்கிய பங்காளியாகத் திகழ்ந்ததுடன் அதன் செயற்பாட்டாளராகவும் மாறினார்.

அவர் தனது குறுகிய வாழ்க்கைக் காலத்தில் கல்வி - இலக்கியம் - அரசியல் என்று நிறையவே பணியாற்றியுள்ளார்.அதிலிருந்து முற்போக்கு இலக்கியத்துக்கு கைலாசபதி ஆற்றிய பணிகள் என்னவென்பதைத் தனி நூலாக எழுதவேண்டுமென்று முற்போக்கு கலை இலக்கிய மன்றம் தீர்மானித்தது. அந்தப் பொறுப்பை அதற்குப் பொருத்தமான கலாநிதி இரவீந்திரனிடம் ஒப்படைத்தது. அதனை ஏற்றுக்கொண்ட அவர் " முற்போக்கு இலக்கியத்துக்கு கைலாசபதியின் பங்களிப்பு"(2012) என்ற நூலை எழுதினார்.

இந்நூலுக்கு மூத்த முற்போக்கு எழுத்தாளர் நீர்வைப் பொன்னையன் பதிப்புரை எழுதியுள்ளார். அதில் அவர் "ஈழத்து இலக்கியம், ஈழகேசரி காலம், மறுமலர்ச்சிக் காலம், முற்போக்குக் காலம், போர்க்காலம் என்று பல சகாப்தங்களைக் கண்டுள்ளது. முற்போக்குக் காலத்தில் (1960-1980) பொதுச் செயலாளர் பிரேம்ஜீ ஞானசுந்தரத்துடன் இணைந்து க.கைலாசபதி பலவகையிலும் உழைத்தார்.தமிழ் இலக்கிய விமர்சனத்தில் மாக்ஸிய அணுகுமுறையைக் கொண்டுவந்தார். இது தமிழ் இலக்கியத்துக்கு சரிநிகரில்லாப் பங்களிப்பாகும். சங்கத்தின் தலைமைக் குழுவிலும் இரு சகாப்தங்களாகச் செயற் பட்டுள்ளார். நெறிப்படுத்தல், விமர்சித்தல், வழிநடாத்தல், புதிய பண்பாட்டுத் தளத்தை நோக்கி நகர்தல் போன்ற வகையில் கைலாஸின் நவீன இலக்கியப் பங்களிப்பை இரவீந்திரன் விரிவாக எழுதியுள்ளார்." - என்று முத்திரை பதித்துள்ளார்.

ஏற்கனவே கைலாசபதியின் பண்முகப் பணிகள் தொடர்பாக பதினைந்துக்கு மேற்பட்ட நூல்கள் பலராலும் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமான சில நூல்களைக் குறிப்பிடுவது இந்நூலை உள்வாங்குவதற்குத் துணையாக அமையுமெனலாம்.அவையாவன...

# முற்போக்கு இலக்கியத்துக்கு கைலாசபதியின் பங்களிப்பு
## ஓர் அறிமுகக் குறிப்பு

திக்குவல்லை கமால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கைலாசபதியும் சமூக நோக்கும் (1988)
  - சி.கா.செந்திவேல்.
* பேராசிரியர் கைலாசபதியின் நினைவுகளும் கருத்துக்களும் (1992)
  - இளங்கீரன் சுபைர்.
* எங்கள் நினைவுகளில் கைலாசபதி (1996)
  - டொமினிக் ஜீவா.
* பாரதிமுதல் கைலாசபதிவரை (1998)
  - கோ .கேசவன்.
* கலாநிதி கைலாசபதி (2007)
  - இராமசுந்தரம்.
* கைலாசபதி - சில்லையூர்ச் செல்வராஜன் (2007)
  -அ.முகம்பது சமீம்.
* பேராசிரியர் க .கைலாசபதி - சமூக மாற்றத்துக்கான இலக்கியம்(2011)
  - லெனின் மதிவானம்.

***

இலங்கையில் தொழிலாளர் - விவசாயிகள் போராட்டம் கூர்மை அடைந்ததும், சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக மக்களிடையே வர்க்க ரீதியான ஐக்கியப்பாடு ஏற்பட்டு வந்ததும், இனவாதத்துக் கெதிராக தமிழ் முற்போக்குச் சக்திகள் போராடும் ஆற்றல் பலமடைந்ததும் ஒரே காலகட்டத்தில்தான். அவ்வேளையில்தான் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தோற்றம் பெற்றது.

முப்பது வருடம் கடந்த நிலையில் 1980 களில் பூகோளக் கிராமம் என்ற மாயம் காட்டி, பல்தேசியக் கம்பனிகள், இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சூறையாடிக் கொண்டிருந்த கட்டத்தில்தான் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இக்காலப் பகுதிகளில் கைலாசபதியின் முற்போக்கான பங்களிப்பை , ஊற்றுக்கள்- புதிய பாதை - மக்கள் இலக்கியம் - புதிய பண்பாடு - மறுமதிப்பீடு - முதலிய தலைப்புக்களில் எழுதுயுள்ளதாக நூலாசிரியர் இரவீந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

**ஊற்றுக்கள் :**

கலை இலக்கியச் செயற்பாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் - சமூக மாற்றத்துக்காக இயங்கும் பத்திரிகை, சஞ்சிகை அமைப்புக்களுக்கான ஆதரவு - கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாடு - வீரயுக சங்கப் பாடல்கள் - பாரதியுடனான ஈடுபாடு , ஆய்வு, பொதுமைப் புத்துலகு - மண்வாசனை, தேசிய இலக்கியம் , முற்போக்கு அம்சங்கள் - சமூகவியல் நோக்கில் யதார்த்தவாதமும் ஒப்பியல் இலக்கியமும் - முற்போக்கு ஈடுபாட்டாளர்களை இணைத்தல், போன்ற விடயங்களை ஒழுங்கு வரிசைப்படுத்தியுள்ளதுடன் பேராசிரியரைப் பற்றி பின்வருமாறு அழுத்தமாகத் தெரிவித் துள்ளார்.

" சமூகவியல் நோக்கும் ஒப்பியல் ஆய்வும் என்கிற பிரதானமான இரு அம்சங்கள் வேறெவரை விடவும் அதிகமாகவே கைலாசபதியிடம் காணப்பட்டுள்ளன. அவற்றின் துணையுடன் தமிழ் இலக்கியச் செல்நெறியை முன்னோக்கி திசைமுகப்படுத்த அயராது உழைத்தவர். குறிப்பாக ஈழத்தமிழ் முற்போக்கு இயக்கச் சகபாடிகளை மேலும் உத்வேகப்படுத்தவும் இளம் தலைமுறையினரை அதன்பால் வழிப்படுத்தவும் தீவிரமாக உழைத்தார்."

**புதிய பாதை**

இத்தலைப்பில் கைலாஸின் புத்தாக்க அம்சங்கள் உரையாடப்பட்டுள்ளது.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் - புரட்சிகர எழுச்சிக் கோட்பாடு வடிவம் - கவிஞர் இ.முருகையனின் "கோபுர வாசல் " நாடகப் பிரதி - சாதி ஒழிப்பு இயக்கமும் இலக்கியமும் - தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மாநாட்டு மலர் - போன்ற விடயங்களோடு , கைலாசபதி வழங்கிய முன்னுரை ஒன்றிலிருந்து பின்வரும் கருத்தும் பகிரப்பட்டுள்ளது...

"சமீப காலமாக, தமிழிலக்கிய உலகிலே சமூகவியல் நோக்கை ஏளனம் செய்யும் விபரீதப் போக்கு ஒன்று தலைதூக்கி வருகிறது.தத்துவங்கள் , குறிப்பாகப் பொதுவுடைமைக் கோட்பாடுகள் காலவழுப்பட்டவை என்றும் சமூகப் பிரக்ஞையுள்ள இலக்கியங்கள் பிரசார இலக்கியங்கள் என்றும் மேதாவித் தனத்துடன் சிலரால் கூறப்படுகின்றது. தத்துவத்தைக் கைவிட்டு எந்த இலக்கியமும் பயன்வளமுடையதாய் இயங்கவியலாது. மைக்கேல் ஹரின்டன் என்ற எழுத்தாளர் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருப்பதுபோல, " தத்துவம் வேண்டாம் என்று கூறுவது, சோஷலிஸம் வேண்டாம் என்று மறைமுகமாகக் கூறுவதேயாகும்."




**மக்கள் இலக்கியம்**

காலமாற்றத்திற்கேற்ப எவ்வாறு கோட்பாட்டு மாற்றங்கள் உருவாக்கப்பட்டன. அறுபதில் பேசிய தேசிய இலக்கியம் எண்பதில் எப்படி மக்கள் இலக்கிய மாகியது - முற்போக்கு, சமூக நோக்கு, யதார்த்தம் என்றெல்லாம் பேசியபோது மக்கள் இலக்கியம் அறியப்படாததாகவே இருந்தது - அரசியல் அரங்கில் சாதிப் பாகுபாடு எவ்வாறெல்லாம் பிரச்சினையாக இருந்தது என்பதை, ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் அரசியல் நாவல் எழுதுவோர் அலசியிருப்பது கவனிக்கத் தக்கது. - பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய மார்க்கத்தைச் சுட்டிக்காட்டி வாசகனை வழிநடாத்துவதே இலக்கியப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணி - இத்தகைய விடயங்களைக் எவ்வாறு கைலாஸ் கையாண்டார் என்பது இங்கு உரையாடப் பட்டுள்ளது.

**புதிய பண்பாடு**

இயற்பண்புவாதப் படைப்புக்களில் நல்ல பெறுமானங்கள் காணப்பட்டபோதும், அந்த எழுத்தாளர்களை முற்போக்குவாதிகள் என்று கைலாசபதி கூறவில்லை. அதேநேரத்தில் முற்போக்கை ஏற்காதோரை பிற்போக்குவாதிகள் என்று அவர் சொல்லவுமில்லை. இரண்டுக்கும் இடைப்பட்ட, சமயத்துக்கேற்ப ஊசலாடும் அறநெறி விழுமியங்களில் மூழ்கியோரைக் கவனிக்காமலுமில்லை" என்று குறிப்பிடும் கைலாசபதியின் ஆய்வுப் பரப்பை, பண்பாடு... எதிர்ப்பண்பாடு...புதிய பண்பாடு என்று வகைப்படுத்தலாம் என்று பகர்கிறார்.

இத்தலைப்பின் இறுதிப் பந்தி இவ்வாறு அமைகிறது. "பண்பாடு, எதிர்ப் பண்பாடு, புதிய பண்பாடு என்பன குறித்த கருத்தாடல் கைலாஸின் மறைவுக்குப் பின்னரே பேசு பொருளாக மேற்கிளம்பியது. அவரது செயற்களம் புதிய பண்பாட்டியலுக்கு உரியதாய் அமைந்து, முந்திய இரு கூறுகளது செல்நெறிகளை நுண்ணாய்வுகள் வாயிலாக விளக்கம் பெறவழிப் படுத்தப்பட்டிருந்தது. இன்று எழுச்சி பெறும்புதிய பண்பாட்டு இயக்கங்கள் சகல வடிவங்களாலுமான ஏற்றத் தாழ்வுகளைத் தகர்த்துப் பொதுவுடைமைப் புத்துலகை நிர்மாணிக்க ஏற்ற கற்றல்புலம் கைலாசபதியின் எழுத்தாக்கங்கள் அவை குறித்த விவாதங்களையும் புதியபண்பாட்டுத் தளம் ஒன்றில் சுதந்திரமாக முன்னெடுக்க இயலும்.

**மறுமதிப்பீடு**

இறுதி அம்சமான மறுமதிப்பீட்டில், கைலாசபதி ஒப்பாய்வுக்கு மிகை அழுத்தம் கொடுத்து தனித்துவ அம்சங்களை முன்னெடுக்கத் தவறியமை, நாட்டுத் தேசியத்தை வலியுறுத்தித் தமிழினத் தேசியத்தை கவனிக்கத் தவறியமை போன்ற விடயங்களை சுட்டிக் காட்டியுள்ளதோடு, ஒரு மாக்ஸியரான கைலாசபதி இலக்கியத் தளங்களிலும் பல்வேறு சமூகக் களங்களிலும் மக்கள் விடுதலைப் போராளியாகச் செயற்பட்டவர். தனது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் மக்களது போராட்ட வளர்ச்சியில் மாக்ஸிய நிலைப்பட்டு தனது ஆழமான ஆய்வுப் பார்வையைச் செலுத்தித் தீர்க்கமான முடிவுகளுக்கு வந்தவர்... அர்ப்பணிப்பான தேடலும் உழைப்பும் சமூகப் போராளிக்கான உணர்வும் உள்ளவராய்த் தனது எழுத்தை வடித்த கைலாசபதி முற்போக்கு கலை இலக்கிய இயக்கத்துக்கு மகத்தான பங்களிப்பை நல்கியுள்ளார் என்பதில் சந்தேகமில்லை" என்று குறிப்பிட்டு முத்தாய்ப்பு வைத்துள்ளார்.

***

இந்நூலை எழுதியுள்ள கலாநிதி இரவீந்திரன் பேராசிரியர் கைலாசபதியின் மாணவன் என்பது அறிந்ததே. மாணவர்கள் ஆசிரியரை அனுசரித்துச் செல்வதும் ஆசிரியர்கள் அதனை எதிர்பார்ப்பதும் பொதுவான நிலைப்பாடே.

"பாரதி மதவாதியல்ல - இயங்கியல் பொருள் முதல்வாதி" என்ற தான் வழிப்படுத்தும் இரவீந்திரன் என்ற மாணவனின் மாற்றுக் கருத்தை பேராசிரியர் மறுதலிக்கவில்லை. மட்டுமன்றி அதனைத் ஒரு தனி நூலாக எழுதுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். குரு- சிஷ்யன் இருவருமே பலவீனங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக நடந்து கொண்டுள்ள ஓர் அபூர்வமான சந்தர்ப்பம் இது.

ஒரு சமயம் இந்துசமய தமிழ்மொழி விவகார இராஜாங்க அமைச்சு கொழும்பில் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது. பின்நவீனத்துவம் உள்ளிட்ட புதிய சித்தாந்தங்களை இலக்கிய வட்டத்தினருக்கு அறிமுகப்படுத்துவதே நோக்கமென்று தெரிவிக்கப் பட்டது. இறுதியாக சபையோர் கருத்துக்கும் சிறிது நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது.



பலரும் கருத்துத் தெரிவித்தனர். திடீரென்று எழுந்த ஒருவர் " எமது நாட்டுக்கும் தேவைக்கும் அப்பாற்பட்ட விடயங்களை எதற்காக திணிக்க முயற்சிக்கிறீர்கள்? இந்தக் கூட்டத்தை அமெரிக்க தேசிய கீதத்துடன் முடித்தால் நன்றாக இருக்கும்" என்று சொல்லிவிட்டு அமர்ந்து கொண்டார்.


ஒரு குழப்ப நிலையோடு எல்லோரும் அவரையே திரும்பிப் பார்த்தனர். அவர் ந.இரவீந்தரன்தான் என்பதைப் பின்னர் தெரிந்துகொண்டேன்.அவர் அப்போது தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயலாளராகவும் இருந்தார் என்று நினைக்கிறேன்.

ந.இரவீந்திரன் போர்க்குணம் கொண்டவர். எந்த சந்தர்ப்பத்திலும் சொல்லவேண்டியதை மிக அழுத்தமாகவும் தெளிவாகவும் சொல்லி விடுவார். கைலாசபதி பற்றி எழுதுவதற்கு மிகமிகப் பொருத்தமானவர் என்பதை இந்நூல் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார். இன்றைய சூழலில் கைலாசபதியின் சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கும் பொறுப்பை இவர் தன் பணியாகக் கொண்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த நீதிராஜன்

# கிருத யுகத்துக்கான பாரதியின் "யுகப் புரட்சி"



தத்துவ ஞானிகள் உலகத்தை பல்வேறு வகைகளில் விளக்கியிருக்கிறார்கள். உலகத்தை மாற்றுவது தான் இப்போதைய தேவை. என்கிறார் கார்ல்மார்க்ஸ். "உலகம் போதுமான அளவுக்கு இன்னமும் விளக்கப் படவேயில்லை என்று தோன்றுகிறதே, அப்படியிருக்க, உலகத்தை எப்படி மாற்ற முடியும்?" என்று நண்பர் ஒருவர் ஒரு முறை கேட்டார்.

எனது அம்மா ஜெயலட்சுமி பள்ளி செல்லாதவர். எப்படி செயல்படவேண்டும் என்று தனது குழந்தைகளுக்கு அவர் சொல்லிக்கொடுக்கும்போது, "கண்ணு பார்க்கணும். கையி செய்யணும்" என்பார். நான் எனது தாயிடம் கற்றுக்கொண்டதை, எனது குழந்தைகளுக்கு நான் விளக்கும்போது "கண்ணால் பார்த்துவிட்டு பிறகு கையால் செய்வதல்ல. கண் பார்த்துக்கொண்டிருக்கும் போதே கையால் செய்யவேண்டும். ஒரே நேரத்தில் இரண்டையும் செய்ய வேண்டும் என்று அம்மா சொன்னார்கள்" என்பேன்.

#### மாற்றத்துக்கான விளக்கம்

"திட்டவட்டமான நிலைமைகளின் மீதான திட்டவட்டமான தீர்வுகள்" தான் மார்க்சியம் என்பார் லெனின். உள்ளதை உள்ளபடி புரிந்துகொள்ளும் அடிப்படைத் திறன் இருந்தால்தான் "திட்டவட்டமான நிலைமைகளை" அறிந்துகொள்ளக்கூடிய முதல்கட்ட வெற்றி சாத்தியமாகும். அதற்கு பல்வேறு வகையான விளக்கங்கள் அவசியம். அதனை "கண்ணால் பார்ப்பதாக" கொள்ளலாம். நிலைமைகளை மாற்றியமைக்கும் தீர்வுகளை உருவாக்குவது என்பது இரண்டாம் கட்ட வெற்றி. "கையால் செய்வதாக" அதைக் கொள்ளலாம்.

உலகைப் பற்றிய விளக்கமும் உலகத்தை மாற்றுவதும் இரண்டும் தனித்தனியாக இல்லை இரண்டும் இணைந்துதான் உள்ளது உலகத்தைப் பற்றிய விளக்கமே மாற்றத்தைத் தூண்டும் விளக்கமாக இருக்க வேண்டும். வெற்று விளக்கமாக அது இருக்கக்கூடாது. இரண்டும் பின்னிப்பிணைந்திருக்க வேண்டும்.

#### இயங்கியல் பொருள்முதல்வாதியாக பாரதியார்

"உணர்ச்சிரீதியான தத்துவஞானிகள்" என்று நான் சாமான்ய மனிதர்களைக் கருதுகிறேன். எந்தவொரு தத்துவத்தையும் மக்கள் எளிதாக அன்றாட செயல்களில் வெளிப்படுத்துவார்கள். ஆனால், அவற்றை கோட்பாடுகளாக வளர்த்து அளிப்பதில் சாமான்ய மக்களுக்கு சிரமம் இருக்கலாம். மக்களுக்கான அறிவாளிகள் என்பவர்கள் மக்களிடமிருந்தே கற்றுக்கொண்டு அவர்களுக்கே திரும்ப அளிப்பவர்கள். அத்தகைய ஒரு செயல்பாடாகத்தான் ந. இரவீந்திரன் அவர்கள் 1988இல் வெளியிட்ட முதல் புத்தகம்தான் "பாரதியின் மெய்ஞ்ஞானம்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நேயமுள்ள மத நம்பிக்கையாளர்களின் மனதில் வலிமையான சலனங்களை உருவாக்கும் புத்தகம் இது. பாரதி பிறந்த ஆண்டின் நூற்றாண்டை யொட்டி (1882-1982) உருவான விவாதங்களின் வளர்ச்சியாக 1988இல் முதலில் வெளியானது இது. 1993, 2003 களில் பதிப்புகள் வெளியாகின. 20 ஆண்டு களுக்குப் பிறகான அவரது நினைவு நூற்றாண்டு (1921-2021) காலகட்டத்தில் மேம்படுத்தப்பட்ட பதிப்பாக இது வெளியாகியிருக்கிறது.

இதில், அவர் "தமிழ் தேசியம், இந்திய தேசியம், பூரண சமத்துவத்துக்கான மனித குல விடுதலை என்பவை சார்ந்த இயங்கியல் பொருள்முதல்வாதியாக பாரதியார் வெளிப்பட்டார் என்பதை நிறுவியிருக்கிறார்.

**சமூக மாற்றத்துக்கான பாரதியின் சிந்தனை**

மனிதருக்கு உள்ளும் வெளியிலும் இயங்கும் அனைத்துவித இயக்கங்களின் இயங்கும் இயல்பை அறிதலைத்தான் "இயங்கியல்" என அழைக்கிறோம். இயக்கத்தின் இயல் அல்லது இயங்குதலின் இயல். பொருளா, கருத்தா எது முதலில் தோன்றியது? எனும் தத்துவ விவாதத்தில் பொருளே முதலில் தோன்றியது. பொருளின் விளைவே உணர்வும் அதன் வளர்ச்சி யடைந்த நிலையான கருத்தும் என்ற விவாதமே "பொருள்முதல்வாதம்" என்பது.

இயங்கியல் பொருள் முதல்வாத சிந்தனை முறையை இந்திய தத்துவ மரபுச் சிந்தனையின் ஊடாகவே கைவரப்பெற்றவராக பாரதி இருக்கிறார் என்கிறார் இரவீந்திரன். பாரதி தன்னை வெளிப்படுத்து வதற்காக தேர்வு செய்ததுதான் ஆன்மீகம் என்று சொல்கிற அவர், அதனை "ஆன்மீக நாத்திகம்" என்றும் வரையறை செய்துள்ளார். (இங்கே "நாத்திகம்" என்பது "வேத மறுப்பு" எனும் அதன் ஆரம்பகால அர்த்தத்தில் பயன்படுத்தப்படவில்லை. "கடவுள் மறுப்பு" எனும் எனும் தற்போது புழங்கும் அர்த்தத்திலேயே பயன்படுத்தப் பட்டுள்ளது)

பாரதியின் சிந்தனையும் செயலும் சமூக மாற்றத்துக்கான குறிக்கோளோடு இருந்தன என்று விவாதிக்கும் இரவீந்திரனின் புத்தகங்களும் சமூக மாற்றத்தை உளப்பூர்வமாக வலியுறுத்தி வெளி யானவையே.

**கிருத யுகமும் பொதுவுடமையும்**

எழுத்தாளர், படைப்பாளர், பத்திரிகையாளர் என தமிழின் பல்வேறு தளங்களில் பல சாதனைகளைச் செய்தவர் பாரதியார். அவர் மகா கவி மட்டுமல்ல, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக போரிட்டோருக்கு வழிகாட்டிய அரசியல், சமூக புரட்சியாளர். இந்து ஆன்மீகத்தை வெளிப்புற வடிவமாகவும் பொதுவுடமை சம தர்மத்தை உள்ளடக்கமாகவும் கொண்டு பாரதியின் கருத்துகள் வெளியாகியிருக்கின்றன. ஒரு தத்துவ ஞானச் செறிவுடன் பாரதியின் படைப்புகள் வெளியாகி யிருக்கின்றன.

மனித சமூக வரலாற்றை யுகங்களாக பிரிக் கிறது இந்து தொன்மம். கிருத யுகம்தான் முதலாவதும் சிறப்பானதுமாக யுகம். (சிறப்பானது என்றால் நான்கு வர்ணத்தாரும் அவரவர் பணிகளை செய்கிற சனாதன தர்மச் சிறப்புதான்) கலியுகம் என்பது இருண்டகாலம். திரேதா யுகமும், துவாபர யுகமும், கிருத யுகத்தை விட குறைந்த நல்ல யுகங்கள். பிரளயம் எனும் அழிவுக்குப் பிறகு யுகங்கள் மீண்டும் மீண்டும் தொடரும் என்பது நம்பிக்கை.

புராதன பொதுவுடமை சமூகமாக தொடங்கிய மனித சமூகம், ஆண்டான் அடிமை சமூகமாக மாறி, நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் எனும் பரிணாம வளர்ச்சிக் கட்டங்களின் வழியாக மேம்படுத்தப்பட்ட புதிய பொதுவுடமை சமூகமாக மீண்டும் உயரும் என்பது




மார்க்சியத்தின் கணிப்பு.

புதிய பொதுவுடமை சமூகத்தையே தனது பாணியில் பாரதி, கிருத யுகத்தோடு தொடர்புபடுத் தினார். பாரதியின் கிருத யுகம் சனாதன யுகம் அல்ல. புதிய வரையறையோடு அவர் எழுதிய கவிதையைப் பாருங்கள்.

**புதிய ருஷியா**

ஜார் சக்கரவர்த்தியின் வீழ்ச்சி)
மாகாளி பராசக்தி உருசியநாட்
டினிற்கடைக்கண் வைத்தாள், அங்கே,
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி,
கொடுங்காலன் அலறி வீழ்ந்தான்,
வாகான தோள்புடைத்தார் வானமரர்,
பேய்க ளெல்லாம் வருந்திக் கண்ணீர்
போகாமற் கண்புதைந்து மடிந்தனவாம்,
வையகத்தீர், புதுமை காணீர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஆர்எஸ்எஸ் பயங்கரவாத இயக்கத்தின் ஆட்சி இந்தியாவில் நடைபெறுகிறது மோடியின் ஆட்சி எப்படி நடக்கிறது என்பதையே பாரதியார் வர்ணித்தது போல இந்தக் கவிதை செல்கிறது

இரணியன்போ லரசாண்டான் கொடுங்கோலன்
ஜாரெனும்பே ரிசைந்த பாவி
சரணின்றித் தவித்திட்டார் நல்லோரும்
சான்றோரும் தருமந் தன்னைத்
திரணமெனக் கருதிவிட்டான் ஜார்மூடன்,
பொய்சூது தீமை யெல்லாம்
அரணியத்திற் பாம்புகள்போல் மலிந்துவளர்ந்த
தோங்கினவே அந்த நாட்டில்.
உழுதுவிதைத் தறுப்பாருக் குணவில்லை,
பிணிகள் பலவுண்டு பொய்யைத்
தொழுதடிமை செய்வாருக்குச் செல்வங்க
ளுண்டு, உண்மை சொல்வோர்க் கெல்லாம்
எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு,
தூக்குண்டே யிறப்ப துண்டு,
முழுதுமொரு பேய்வனமாஞ் சிவேரியங்லே
ஆவிகெட முடிவ துண்டு.
இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால்
வனவாசம், இவ்வா றங்கே
செம்மையெல்லாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்
அம்மைமனங் கனிந்திட்டாள், அடிபரவி
உண்மைசொலும் அடியார் தம்மை
மும்மையிலும் காத்திடுநல் விழியாலே
நோக்கினாள், முடிந்தான் காலன்.
இமயமலை வீந்ததுபோல் வீழ்ந்துவிட்டான்
ஜாரரசன் இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர் சடசடவென்று சரிந்திட்டார்,
புயற்காற்றுங் குறை தன்னில்
திமுதிமென மரம்விழுந்து காடெல்லாம்
விறகான செய்தி போலே!

இந்து தொன்மத்தின் சனாதன தர்மத்தின் நால்வர்ண ஆட்சியாக கிருத யுகத்தை பாரதி வர்ணிக்கவில்லை அவர் சொல்கிறார்

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றி லெழுந்ததுபார் குடியரசென்று
உலகறியக் கூறி விட்டார்
அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போது
அடிமையில்லை அறிக என்றார்,

இடிப்பட்ட சுவர்ப்போல் கலி விழுந்தான்,
கிருத யுகம் எழுக மாதோ!

**கிருத யுக கவிதைப் பிரகடனம்**

“உலகில் கிருத யுகத்தை இந்தியாவே தொடங்கும்” என்று பாரதி எழுதியிருக்கிறார், “ரஷ்யா முந்திவிட்டதே” என்ற மகிழ்ச்சி கலந்த போட்டி உணர்வோடு செய்த கவிதைப் பிரகடனம் இது.

இந்து ஆன்மீகத்தின் வேடத்தில் ஒளிந்துள்ள ஆர்எஸ்எஸ் மக்கள் விரோத சக்திகள் பாரதியின் “சேதமிலா இந்துஸ்தானம் தெய்வம் என கும்பிடடி பாப்பா” எனும் பாடல் வரியை வெட்டித் தனியே எடுத்து, தங்களின் அரசியலுக்காக பாரத மாதா படத்தின் கீழ் தமிழகத்தில் பயன்படுத்துகின்றனர்.

“இந்தியாவின் சுதந்திரம் லெனினின் தந்திரமாக ஆகிவிடக்கூடாது” என்று ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் இரண்டாம் தலைவர் கோல்வால்கர் (*1906-1973*) *1960*களில் எழுதிய “Bunch of thoughts” எனும் புத்தகத்தில் குறிப்பிடுகிறார்.

ரஷ்யப் புரட்சியை “கிருத யுக”ப் புரட்சியாக பாவித்து மகிழ்ந்த பாரதி எங்கே? ரஷ்யப் புரட்சி நினைத்து இன்றும் பயந்து வாழும் ஆர்எஸ்எஸ் இயக்கம் எங்கே? மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட முயலும் ஆர்எஸ்எஸ் காரர்களின் அசட்டுத் தைரியத்தை இந்திய மக்கள் எதிர் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது,

ஆர்எஸ்எஸ் எனும் இந்தியாவை மையமாகக் கொண்டு உலகெங்கும் இயங்கும் இயக்கத்தின் ஆதிக்கத்தில் இன்றைய இந்தியாவின் சமூக வாழ்வும் அரசியல் வாழ்வும் சிக்கியிருக்கிறது. இந்தியாவின் ஒன்றிய அரசிலும் பல மாநிலங்களிலும் அதன் அரசுகள் அதிகாரத்தை கைப்பற்றியிருக்கின்றன.

**பலவீனமான இடைவெளி**

அடித்தள மக்களின் பொருளாதார விடுதலைக்கான அறம் சார் வழிமுறைகளையும் இந்திய சமூகத்தின் ஒட்டுமொத்த விடுதலைக்கான லட்சியத் திட்டத்தையும் சமூகம் ஏற்றுக்கொள்ளும்வகையிலும் தேவைப்படும் வேகத்திலும் மக்களிடம் பரப்ப இயலாமல் முற்போக்கு சக்திகள் இருக்கின்றன.

இந்த பலவீனமான இடைவெளியைத்தான் ஆர்எஸ்எஸ் அறிவாளிகள் சூழ்ச்சித் திறனோடு பயன் படுத்தி வருகிறார்கள். பிரித்தாளும் சூழ்ச்சியை கையாண்டு அடித்தள மக்களின் பொருளாதார பிரச்சனைகளுக்கான போராட்டங்களை திசை திருப்புகின்றனர். அடித்தள மக்களிடம் “நயவஞ்சக சமத்துவத்தை” போலியாக அவர்கள் கடைப்பிடிக்கின்றனர்.

“சுரண்டல் கொள்கைகளுக்கு அடித்தள மக்கள் ஆதரவு அளித்தால்தான் அவர்களுக்கு ரொட்டித் துண்டுகள் கிடைக்கும்” என்ற நிலையையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். போலி சமத்துவத்தால் கவரப்பட்டு, ஒடுக்கப்பட்டோரிடமிருந்து அடிமைகளும் ஆர்எஸ்எஸ் இயக்கத்துக்குக் கிடைத்துவருகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேற்கத்திய நாடுகளில் ஒரு சனாதன தர்ம முறைமை**

சமீபத்தில் ஆர்எஸ்எஸ் நடத்திய ஒரு கூட்டத்தில் அதன் சர்வதேசத் தலைவரான மோகன் பாகவத் என்பவர் "கடவுள் முன் அனைவரும் சமம். பண்டிட்டுகள் தான் சாதிகளை உருவாக்கி விட்டார்கள்" என்று "போலி சமத்துவம்" பேசியிருக்கிறார்.

இந்தப் பேச்சுக்கு பலவகையான கண்டனங்கள் எழுந்தன. மோகன் பாகவத்தைக் கண்டித்த, ஒரிசாவில் உள்ள பூரி கோவர்த்தன் பீடத்தின் சங்கராச்சாரியார் அவர்கள்,

"அனைத்து அறிவியல்களையும் பிராமணர்களே படைத்தார்கள். ஐக்கிய நாடுகள் சபை எங்களிடம் வந்தால் அனைத்துக்கும் நாங்களே தீர்வு சொல்வோம். பிரான்ஸ், அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளில் சாதி சமூக முறைமை இல்லை என்பதால் அதற்கு இணையான ஒரு சனாதன தர்ம முறைமையை உருவாக்க வேண்டும்"


எனும் பொருள்பட பேசியிருக்கிறார். "பொய் சமத்துவம்" கூட பேசத் தேவையில்லை என்பதுதான் அந்த எதிர்ப்பின் மையம்.

உத்தரப்பிரதேசத்தின் பாஜக முதலமைச்சர் சமீபத்தில் "சனாதன தர்மம் தான் இந்தியாவின் தேசிய மதம். அதற்கு அனைத்து குடிமக்களும் கட்டுப்பட்டாக வேண்டும்" என்று பேசியிருக்கிறார்.

**பண்பாட்டு புரட்சிக்கான முன்னோடியாக பாரதி**

இந்து ஆன்மீக வேஷத்தில் ஒளிந்து கொண்டுள்ள மக்களைச் சுரண்டுவதற்கான அரசியல் இன்று தனது வளர்ச்சியின் உச்சத்தில் இருக்கிறது. இந்தியாவுக்கு வெளியில் இந்தியர்கள் வசிக்கும் அனைத்து நாடுகளிலும் வேலை செய்யும் ஆர்எஸ்எஸ் இயக்கம் அமெரிக்காவின் இரண்டு பெரிய அரசியல் கட்சிகளிலும் தனது நேரடி ஆதரவாளர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்திருக்கிறது. வலதுசாரிகளின் உலக தலைநகராக இந்தியாவை மாற்றவும், பாரதி பாடிய "யுகப் புரட்சிக்கு" எதிரான "யுக எதிர்ப் புரட்சிக்காக"வும் ஆர்எஸ்எஸ் உழைத்து வருகிறது.

இந்த சூழலில்தான் மேம்படுத்தப்பட்ட புதிய பதிப்பாக தனது புத்தகத்தை இரவீந்திரன் கொண்டு வந்திருக்கிறார். ஏகாதிபத்தியத்துக்கும் இந்து வேடதாரிகளான பாசிஸ்ட்டுகளுக்கும் எதிரான போராட்டத்தில் மக்களின் போராட்ட ஆயுதமாக பாரதியின் படைப்புகளை மாற்று வது இன்றைய முக்கிய கடமை. இந்திய சமூகத்தின் வரலாற்று, அரசியல், பொருளாதார வேர்களை ஆய்வு செய்யாமல் புரட்சிகர சக்திகள் முன்னேற இயலாது. அவற்றில் பண்பாட்டு வேர்கள் முக்கியமானவை. சமூக மாற்று அரசியலைப் பிரசவிக்கும் பண்பாட்டு புரட்சிக்கான பணிகள் இன்று தேவைப் படுகின்றன. அந்தப் பணிக்கான முன்னோடியாக பாரதி இருக்கிறார்.பெண் விடுதலை, சமூக நீதி, ஏகாதிபத்திய



எதிர்ப்பு, கவிதை, கட்டுரை, வரலாறு, சாதி மறுப்பு உள்ளிட்ட களங்களில் ஏற்பட்ட தமிழில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் தந்தையாக பாரதி உள்ளார்.

**'இந்து விடுதலை நெறி'**


சனாதன தர்மம் என்று காலகாலமாகவும் இந்துத்வா எனும் பெயரில் இன்றைய மதவெறி அரசியல் தத்துவமாகவும் செயல்படுகிற சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான மக்கள் போராட்ட ஆயுதமாக, "இந்து விடுதலை நெறி" எனும் கோட்பாடு பயன்படும். அத்தகைய முறையிலான போராட்ட வடிவங்களை தனது படைப்புகள் வடிவத்தில் பாரதி சமூகத்தில் சமர்ப்பித்துள்ளார். அதனை நமக்கு விரிவாக விளக்கி விவாதத்தைத் தூண்டுபவராக இரவீந்திரன் விளங்குகிறார்.

விடுதலைக்கான பொருளாதார, பண்பாட்டு, தத்துவக் கருத்துகள் அடித்தள மக்களிடம் போதுமான அளவுக்கு கொண்டு செல்லப்படாத பலவீனமான சூழலைத்தான் மக்கள் விரோதிகள் பயன்படுத்துகிறார்கள். அடித்தள மக்களிடமிருந்து தங்களுக்கான அடியாட்களை உருவாக்கிக்கொள்ளும் திறனையும் அவர்கள் அதிலிருந்தே பெறுகிறார்கள்.

மனித நேயமுள்ள மத நம்பிக்கையாளர்களிடம் மனதில் வலிமையான சலனங்களை உருவாக்கும் புத்தகம் இது. இளம் தலைமுறையினரிடமும் மனதைத் திறந்து வைத்திருப்போரிடமும் இந்தப் புத்தகத்தைக் கொண்டு செல்வோம். பாரதியின் "கிருத யுக" கனவை நடைமுறைப்படுத்துவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.இராஜேஸ்கண்ணன்




# "இரட்டைத் தேசியம்" பற்றிய விரிநிலைக் கருத்தாடலில் ந.இரவீந்திரனின் "சாதி தேசம் பண்பாடு"

நெறிமுறையான ஆய்வுப் பின்னணியோடும் சமூக இயங்குநிலையைப் புரிந்துகொள்ள வரித்துக் கொண்ட தத்துவார்த்தக் கருத்துநிலையுடனும் பயில் நிலையான இடதுசாரிய இயக்கச் செயற்பாட்டுத் தளத்துடனும் தொடர்ந்து இயங்கி வருபவர் ந.இரவீந்திரன் அவர்கள். இந்த மூன்றுக்கும் இடைவெளியின்றி அவர் இயங்குவதை அவரது எழுத்துக்கள் புலப்படுத்திய படியே உள்ளன. "இந்துத்துவக் காலச் சூழலின் மறுவாசிப்பில் பாரதியின் மெய்ஞ்ஞானம்"(2003), "இந்துத்துவம் இந்து சமயம் சமூகமாற்றங்கள்"(2003), "திருக்குறளின் கல்விச் சிந்தனை"(2010) ஆகிய நூல்கள் வாயிலாக தன்னை ஒரு நெறிமுறைப்பட்ட ஆய்வாளனாக நிலைநாட்டிக்கொண்ட இரவீந்திரன் தனது ஆய்வின் புலமைத்துவத்தையும் தான் சார்ந்த கருத்துநிலைப்பட்ட சமூக-அரசியல் பார்வையையும் "இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்"(2014), "கலாசாரம் எதிர்க்கலாசாரம் புதிய கலாசாரம்"(1999), சாதி தேசம் பண்பாடு"(2014) போன்ற நூல்கள் வாயிலாகவும் மிக ஆழமாக வெளிப்படுத்தியிருந்தார். பின் மூன்று நூல்களிலும் தேசியம், ஜனநாயகம், வர்க்க முரண், சாதியம், பண்பாடு, ஊடகம், சுயநிர்ணய உரிமை முதலான விடயங்களை மரபார்ந்த சமூகத்தின் நிலைமையிலும், தீவிர நவீனத்துவ மாற்றங்களின் பின்னணியிலும் வைத்து விவாதிக்கின்றார். இந்த விவாதங்கள் மையநீரோட்ட அரசியலுக்கான ஒரு மாற்றுச் சிந்தனையை உருவாக்கும் முதன்மைமிக்க கருத்தாடல்களாக அமைந்து விடுகின்றன. பொதுவாகவே "மாற்றுக் கண்ணோட்டம்" ஒன்றைக் கருத்தாடல் வெளிக்குக் கொண்டுவரும் ஒருவராகவே இரவீந்திரனை அவரது எழுத்துக்கள் எப்போதும் அடையாளம் காண்பிக்கின்றன.

"சாதி-தேசம்-பண்பாடு" எனும் நூல் மைய நிலையில் தொழிற்படும் வெகுவான ஜனரஞ்சக போக்குக்கான மாற்றுக் கருத்துக்களை திறக்கும் பல்வேறு சிந்தனைகளின் உள்ளடக்கமாகியுள்ளது. இந்த நூலில் பஞ்சமர் இலக்கியம், சாதிய சமூகத்தில் தேசியம், சாதிய சமூகத்தில் மார்க்சியம், தேசிய எழுச்சியும் சமகாலத் தலித் பிரச்சினைகளும், சுயநிர்ணய உரிமை சம்பந்தமான தீர்வில் இரட்டைத் தேசியம் என்பன தொடர்பான கருத்தாடல்களை மையப்படுத்திய கட்டுரைகள் உள்ளன. 254 பக்கங்களைக் கொண்ட இந்த நூலில் பின்னுரையோடு சேர்த்து பத்துக் கட்டுரைகள் உள்ளடங்குகின்றன. 1966 ஒக்டோபர் 21 எழுச்சியின் முன்னணிப் படையாக விளங்கிய "நிச்சாமம்" என்ற கிராமத்துக்கு இந்த நூலைச் சமர்ப்பணம் செய்திருந்தார். நூலுக்கு எழுதப்பட்டுள்ள முன்னுரையில் "தொடர்ந்து நாங்கள் உயிர்ப்புடன் இயங்கவும், அதற்கு ஏற்ப அர்த்தமிக்க பிரயோக அறிவியலாக மார்க்சியத்தைக் கற்கவும் முடிந்தது என்றால் அது நிச்சாமத்தினால் சுவீகாரம் எடுக்கப்பட்டு போஷிக்கப்பட்டதால் மட்டுமே சாத்தியமானது எனலாம்" என்று குறிப்பிடுகின்றார். யாழ்ப்பாண சமூகத்தின் சாதிய ஏற்றத்தாழ்வுக்கு எதிரான போராட்டம்சார்ந்த அல்லது இயக்கநிலைப்பட்ட முன்னெடுப்புகளின் பரிசோதனைக் களமாக யாழ்ப்பாணத்தின் சங்கானைப் பகுதியில் அமைந்த நிச்சாமம் எனும் கிராமம் விளங்கியமை யாவரும் அறிந்ததே.

இந்த நூலுக்காக இரவீந்திரன் எழுதிய முன்னுரையில் "பாரதியின் சுதந்திரப் பள்ளுவில் வெளிப்படுமாறான பண்பாட்டு-அரசியல் முன்னெடுப்பு என்பன இணைக்கப்பட்ட தேடல் புதிய தளம் நோக்கிய சிந்தனைப் பெயர்வைச் சாத்தியமாக்கியது. இதனைச் சாதிய சமூகத்தின் சுயநிர்ணயத் தீர்வுக்கு பிரயோகிக்கும் போது நமது சமூகத்தில் தேசியம் ஆளப்படும் சாதியினதும் ஒடுக்கப்படும் சாதியினதும் எனத் தெளிவாகப் பிளவுபட்டுள்ளமையை எடுத்துக்காட்டியது. அந்த இரட்டைத் தேசியக் கோட்பாட்டை நீண்டகாலமாக அதனுள் ஊடாடி வந்தடைந்தேன். அதை வெவ்வேறு களங்களில் ஆழமாக இயங்கும் தோழர்கள் எடுத்த எடுப்பில் ஏற்றுவிட முடியாது. அந்த வகையில் ஏற்க முடியாமலிருந்த தோழர்களின் கடும் விமர்சனங்களுடனேயே என் எழுத்து முயற்சிகளைத் தொடர வேண்டியிருந்தது"(சாதி தேசம் பண்பாடு, 2014:15) என்று குறிப்பிடும் கருத்து கவனிக்கத்தக்கது. எப்போதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாள அரசியலின் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாக விளங்கும் "திணை அரசியல்" தொடர்பான விவாதங்களின் உச்சம் "திணைகளுக்கான சுய நிர்ணயம்" நோக்கி வளர்வது தவிர்க்கவியலாதது. இரவீந்திரன் அவர்களும் அதை நோக்கிய கருத்தாடல் களை வரலாற்றிலிருந்து பெறப்படும் நிகழ்வுகளை விளக்குவதன் வழியாக விவரித்துச் செல்கின்றார். விளக்கப்படும் வரலாற்று நிகழ்வுகள் இந்தியாவையும் அதனை அண்டிய இலங்கை, நேபாளம், பாகிஸ்தான் முதலான நாடுகளையும் மையப்படுத்தியதாக அமை கின்றன. இதனால் "ஒடுக்கப்பட்ட மக்கள்" என்பது பொதுவில் "தலித்" எனும் அடையாளத்துடன்தான் குறிப்பிடப்படுகின்றது. சாதிய ஒடுக்குமுறை, மதம் சார்ந்த ஒடுக்கு முறை, இன ஒடுக்குமுறை, பெண் ஒடுக்குமுறை எனப் பல தளங்களில் நிகழ்ந்துவரும் ஒடுக்குமுறைகளில் சாதிய ஒடுக்குமுறை பற்றிய விவாதம் இந்த நூலின் மைய உரையாடலாகின்றது.

தமிழ்த் தேசிய சிந்தனையின் உருவாக்கம் தமிழ்நாட்டுச் சூழமைவில் வளர்ந்த வகையினையும், இலங்கைச் சூழலில் வளர்க்கப்பட்ட வகையினையும் வரலாற்று நோக்குடன் விபரிக்கின்ற இந்த நூல், ஈழத்தமிழ்ச் சூழலில் அந்தத் தமிழ்த் தேசிய சிந்தனை யுள் உள்ளடங்கியுள்ள இரட்டை நிலையை "இரட்டைத் தேசியம்" என்று வரையறுத்து அதற்கான நியாயப்பாடு களை சாதிய ஏற்றத்தாழ்வின் வரலாற்று பின்புலத்தின் அடிப்படையில் விளக்குகின்றது. ஆயினும், இந்தியச் சூழலில் சொல்லப்படும் வரலாற்று நிகழ்வுகளையும் இலங்கைத் தமிழ்ச் சூழலில் சொல்லப்படும் வரலாற்று நிகழ்வுகளையும் ஒருங்கே வைத்து ஒப்பிட்டுப் பார்க்கும் ஆய்வாளர் ஒருவர் இந்திய "தலித் இயக்கத்தின் எதிர்ப்பு அரசியல்" நிலைப்பாட்டுக்கும் ஈழத்தில் நடைபெற்ற "சாதிய எதிர்ப்பு போராட்ட இயக்கங்களின் எதிர்ப்பு அரசியல்" நிலைப்பாட்டுக்கும் இடையிலான தீர்க்க மான வேறுபாடுகள் இருப்பதை உணர்ந்துகொள்வார். அந்த வேறுபாட்டை நிர்ணயித்த ஈழச் சூழலுக்கான தனித்துவமான மரபானதும், நவீனமானதுமான காரணிகள் இருக்கவே செய்கின்றன. அந்தக் காரணி களில் மிக முக்கியமானவையாக போராடத் தலைப்பட்ட வெவ்வேறு கொள்கை நிலைப்பாடுகளுடன் கூடிய இயக்கங்கள், அவற்றுக்கிடையிலான முரண்கள், விடுதலை எனும் நோக்கில் நிகழ்ந்த போரும் அந்தப் போரின் விளைவான புலப்பெயர்வுகள் அமைந்தன. இவை சாதிய ஒடுக்குமுறையின் வடிவங்களில் புதிய மாறுதல்களை ஏற்படுத்தியிருந்தன. இந்த மாறுதல்கள் நூலாசிரியர் குறிப்பிடும் "இரட்டைத் தேசியம்" எனும் கருத்தாக்கத்தில் எந்தளவுக்குச் செல்வாக்குச் செலுத்து கின்றன என்பது பற்றிய கருத்தாடல் ஒன்றும் இன்றைய சூழலில் அவசியமாகின்றது.

இந்தியத் தீண்டாமையின் போக்குக்கும் இலங்கையில் தமிழரிடையே நிலவிவரும் சாதிய ஏற்றத்தாழ்வின் போக்குக்கும் இடையில் இருந்துவரும் வேறுபாட்டின் பின்னணியில் நின்றுகொண்டுதான் "தலித்தியம்" தொடர்பான கோட்பாட்டுப் பிரயோகத்தை செய்யவேண்டிய கட்டாயம் உள்ளது. தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம், சிறுபான்மைத் தமிழர் மகாசபை போன்றவற்றின் வலுவான செயற்பாடுகள் அரசியல் நிலைப்பட்ட செயற்பாடுகளாக முன்னெடுக்கப்பட்ட நிலையில் தமிழ் தேசியத்தின் பிரதான எதிர்நிலையாக இடதுசாரிய சித்தாந்தப் பிரமாணங்களோடு வழிநடத்தப் பட்ட சாதிய எதிர்ப்பு இயக்கங்கள் அமைந்தன. இந்த எதிர்நிலையே "இரட்டைத் தேசியம்" தொடர்பான நூலாசிரியரின் சிந்தனைக்கான வலுவான பின்புலமாக அமைந்துள்ளது. அதனை உறுதிசெய்யும் வகையில் தான் "அம்பேத்கரும் எம்.சீ.சுப்பிரமணியமும்" பற்றி நூலாசிரியர் விரிவாக எழுதுகின்றார். இந்தச் "சமதை காணும்" முயற்சி இந்தியத் தேசியத்தின் அடையாள மான காந்தியின் எதிர்நிலையில் அம்பேத்கரை நிறுத்தியது போலவே, இலங்கைத் தமிழ்த் தேசியத்தின் எதிர்நிலையில் இடதுசாரிய-மார்க்சிய சித்தாந்தங் களோடு எழுச்சிபெற்ற இயக்கங்களையும் அவற்றின் தலைமைகளையும் நிலைநிறுத்தியது என்பதை வலி யுறுத்துகின்றது. "அம்பேத்கரும் எம்.சீ.சுப்பிரமணிய மும்", "தேசியம் பற்றிய மார்க்சியக் கோட்பாடு", "தேசிய எழுச்சியின் இன்றைய போக்கில் தலித் பிரச்சினை" போன்ற கட்டுரைகள் இந்த நோக்கில் அமைந்தவையே. "இலங்கையில் சாதியமும் அதற்கு எதிரான போராட்டங் களும்" என்ற நூலின் இணையாசிரியராக இருந்து, அந்த நூலின் வழியாக சாதிய ஏற்றத்தாழ்வுக்கு எதிராக முகிழ்த்த இயக்கநிலைப்பட்ட செயற்பாடுகளின் வலிமையை எடுத்துக்காட்டியிருந்தார். அதன் தொடர்ச்சியாக தமிழர்கள் தேசியத்தை முன்வைத்துக் கட்சி அரசியல் செயற்பாட்டுக்கு வரும் நிலையில் ஆதிக்கம் பெறும் கட்சியின் செயற்பாடுகளில் உள் ளமைந்து கிடக்கின்ற ஒன்றாகவே இரட்டை நிலையைக் காண்கின்றார். இந்த நிலையில்தான் தேசியம் எனும் பேரடையாளத்தின் உள்ளமைந்த சிற்றடையாளங்கள் பற்றிய விவாதத்தை இரவீந்திரனின் எழுத்துக்கள் கிளர்த்துகின்றன. அதற்கு பெண்ணிய நோக்கு நிலை களையும் துணைக்கு எடுக்கின்றார். முன்னாள் பெண் போராளிகள் குறித்த சமூகத்தின் பார்வை தொடர்பான கருத்தாடல்களைக் கொண்டு வருகின்றார். பேரடை யாளம் ஒன்றின் வலு மற்றும் வீச்சினுள் சிற்றடை யாளங்கள் மறைக்கப்படும் நிலையில் தேசியம் இரட்டைத் தன்மை பெறுகிறது என்ற வாதம் எழுப்பப்படு கின்றது. ஆயினும், அந்தச் சிற்றடையாளம் என்பது வெறுமனே ஒடுக்கப்பட்ட சாதி அடையாளமாக மாத்திரம் கருதப்படலாமா எனும் இன்னொரு கேள்வியும் எழுவது தவிர்க்கவியலாதது.

தேசியம் எனும் பேரடையாளம் இலங்கை அரசியலில் சந்தித்த சவால்கள், இடர்கள், அழிவுகள் தொடர்பான மிகக் காட்டமான கருத்துக்களை "தேசியம் பற்றிய மார்க்சியக் கோட்பாடு" எனும் கட்டுரையில் முன் வைக்கின்றார் இரவீந்திரன். இது தமிழ்த் தேசியத்தை ஆதரித்த அரசியல் கட்சிகள், அரசியல் தலைவர்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்ட இயக்கங்கள் மீதான விமர்சனமாகவும் அமைகின்றது. அந்த விமர்சனத்தின் இறுதி இலக்காக "சாதித் தேசியம்" எனும் கருத்துருவாக்கமே அமைந்துள்ளது. "சாதித் தேசியத்தின் சுயநிர்ணய உரிமை" என்பதை நிலைநாட்டுதல் தொடர்பான முடிவை வலியுறுத்திப் பேசுகின்றார். ஆயினும், அந்த விவாதம் விரிவாக்கப்படுவது அவசியம். ஏனெனில், இலங்கையில் மலையக மக்கள், முஸ்லிம் மக்கள் தொடர்பான சுயநிர்ணயம் பற்றிய கருத்தாடலே தெளிவாகவும் அக்கறையுடனும் நிகழ்த்தப்படாத தற்கால நிலவரத்தில், அந்த இனக்குழுக்களோடு ஒப்பிடும் நிலையில் சாதிகளுக்கான சுயநிர்ணயம் தொடர்பில் பேசுவது எந்தளவுக்கு "மையநிலை விவாதத்துக்கான" ஒரு விடயமாக அமைய முடியும் என்பது தவிர்க்க முடியாத வினாவாக படிப்போரிடத்தில் எழுகிறது. இந்த இடத்தில் "இன்று யதார்த்தமாகியுள்ள மேலாதிக்க சக்திகளின் ஊடுருவல்களுக்குக் காட்டிக் கொடுப்பதாக அல்லாமல், மக்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகளின் தீர்வுக்கான தேடல் எனும் அடிப்படையில் ஆரோக்கியமான விவாதங்களை முன்னெடுப்போம்" (சாதி தேசம் பண்பாடு, 2014:202) என்ற இரவீந்திரனின் முடிவான கருத்தையும் பொருத்திப் பார்ப்பது அவசிய மாகும். ஏனெனில், மேலாதிக்க சக்திகளின் ஊடுருவல் இன்றைய சர்வதேசப் பொருளாதார, அரசியல், பண்பாட்டுப் போக்குகளில் அடையாளங்களைச் சிதைத்து பொது அடையாளங்களுக்குள் உள்வாங்கி "உருகிக் கலந்துபோன" நிலைக்கு மாற்றிவிடவே எத்தனிக்கின்றது. இந்த நிலையில் சிற்றடையாளங்கள் ஒவ்வொன்றினதும் சுயநிர்ணயம் என்பது ஒரு "கிடைத்தளக் கூட்டாக" அமைவதை எவ்வாறு அந்த மேலாதிக்க சக்திகளின் ஊடுருவல் வரவேற்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும். இது சிற்றடையாளங்கள் யாவற்றினதும் பிரதிநிதித்துவமாக அல்லது பிரதிபலிப்பா கவே ஒரு பேரடையாளம் அமைய வேண்டியதன் அவசியத்தை மீள வலியுறுத்துகின்றது. இதனை "இன்று இலங்கை எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சனை, தேசிய இனங்களின் சுயநிர்ணயம் எவ்வாறு வென்றெடுக்கப்படலாம் என்பது தொடர்பிலானது. அதற்கான கவன ஈர்ப்பின்றி அரசு திசை திருப்பும் முயற்சிகளில் இறங்கியுள்ளமை தெளிவு. முன்னெடுக் கப்பட்ட பிரிவினை யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமையினால் இனிமேல் இனப்பிரச்சனை எழ இடமில்லை எனக் கருதுவர். தமிழ் மக்களை மிகப்பெரும்பான்மையாக கொண்டிருந்த கிழக்கினைத் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் சம அளவில் வாழும் விகிதாசாரத்துக்கு மாற்றி வடக்கிலும் திட்டமிட்ட குடியேற்றங் களால் தமிழ்ப் பெரும்பான்மை எனும் அடையாளம் அற்றதாக்க முடியும் என்று நம்புகின்றனர்" (சாதி தேசம் பண்பாடு, 2014:204) என்று நூலாசிரியர் குறிப்பிடும் கருத்தோடு இணைத்துப் பார்க்க வேண்டும். ஒரு பேரடையாள உருவாக்கம் தன்னைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமாயின், அது எவ்வாறு அதனுள் உள்ளடங்கும் சிற்றடையாளங்களுக்கு அவற்றுக்கான தனித்துவங்களோடு பிரதிநிதித்துவத்தை கொடுத்தாகவேண்டும் என்பதை இந்தக் கூற்று தெளி வாக புலப்படுத்துகின்றது. சிற்றடையாளங்களை அவற்றுக்கான தனித்துவங்களுடன் ஏற்று உள்ளமைத் துக்கொள்வதற்கான சரியான வழிமுறைகள் வகுக்கப் பட வேண்டும். அதனை இந்த நூல் மார்க்சியக் கண்ணோட்டத்துடன் விளக்குகின்றது. மார்க்சியம் அதற்கான வல்லமையை தன்னுள் கொண்டுள்ளதாக நூலாசிரியர் வலியுறுத்துகின்றார்.




சிற்றடையாளங்களை அங்கீகரித்தல் எந்த நிலையிலும் வெற்றிகரமாக கையாளப்படவில்லை. அரசியல் கட்சிகளில் பெண்கள் பிரதிநிதித்துவம், வேட்பாளர்களில் சாதிப் பிரதிநிதித்துவம், கட்சி அங்கத்துவத்தில் இளைஞர் பிரதிநிதித்துவம், சமூக நிலையில் விளிம்புநிலைக்கு உள்ளாக்கப்பட்டோருக் கான அரசியல் கட்சிகளிலான பிரதிநிதித்துவம் என்று பல்வேறு பிரதிநிதித்துவங்களுக்கான தகுந்த வாய்ப்புக் கள் அதிகரிக்கும்போதுதான் பேரடையாளம் உறுதிப் பண்புடையதாக திடப்படுத்தப்படும். இந்தத் திடப்பாடு ஒரு உறுதிமிக்க "கிடைத்தளக்கூட்டாக" உருவாக்கப்படும். அதுவே சுயநிர்ணயத்தின் அடிப்படைத் தேவையாகின்றது. நூலாசிரியர் குறிப்பிடும் இரட்டைத் தேசியம் பற்றிய கருத்தாக்கம் "நிரந்தரமாகப் பிளவு பட்டிருக்கும் இருவேறு பட்ட நலன்கள் என்ற புரிதலின் பேறாக வெளிப்படும் கோட்பாடுதான்" (இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும், 2014:62) என்ற நிலையில் தமிழினத் தேசியத் தின் எதிர்நிலையில் அல்லது சமாந்தர நிலையில் சாதித் தேசியத்தை நிறுத்தி, இந்த நூல் கூறும் கருத்துக்கள் தேசியம், சுயநிர்ணயம், மார்க்சியம், சாதியம், பண்பாட்டுப் புரட்சி போன்றன பற்றி சிந்தனைப் புள்ளிகளை இணைக் கின்ற ஒரு தொடருறு விவாதத்தை முன்வைத்தபடி நகரு கின்றன. உண்மையில் தீண்டாமை எதிர்ப்புப் போராட்ட இயக்கமும் அதன் கொள்கைகளும் ஒரு தடத்தில் அமைய, அதனை ஊடறுத்து மேற்கிளம்பிய தமிழ்த் தேசிய விடுதலை இயக்கமும் அதன் கொள்கைகளும் இன்னொரு தடத்தில் அமையும்போது, இவை இரண்டும் ஒன்று இன்னொன்றுக்கு ஊட்டமாக அமையத் தவறிய தன் சூழமைவின் விளைபொருளாகவே இரவீந்திரன் இரட்டைத் தேசியம் பற்றிய விவாதத்தை முன்னெடுக் கின்றார். இது அவரது ஏனைய எழுத்துக்களி லும் மிகுந்து வெளிப்படும் கோட்பாட்டு உரையாடலாக உள்ளது. இந்த உரை யாடல் இந்தியச் சூழலில் முனைப்பாக நடைபெறும் தலித்திய நோக்கிலான கருத்தாடல்களிலிருந்து வேறுபட்ட தாகத்தான் அமைய முடியும் என்பதும் புரிந்துகொள்ளப்பட வேண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கந்தர்மடம் அ.அஜந்தன்**



# கலாநிதி ந.இரவீந்திரனின் சமூக விடுதலைப் போராட்டங்களாக மாறிய வர்க்கப் போராட்டங்களின் வரலாற்று நூல்

உலகில் நடைபெற்ற வர்க்கப் போராட்டங்களின் பின்னணிகள், அவற்றின் தன்மைகள், உருமாற்றங்கள், விளைவுகள் என்பவற்றோடு எமது நாட்டின் வர்க்கப் போரட்டங்களையும் ஒப்பிட்டு நோக்கவேண்டியதும் மீள்பார்வைக்கு உட்படுத்தப்படவேண்டியதும் காலவோட்டத்தின் தேவைகள் ஆகின்றன. இலங்கையையும் பல்வேறுபட்ட போராட்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட ஆசியக் கண்டத்தின் தீவாக அடையாளப்படுத்த முடியும். உலக அரங்கில் வர்க்கப் போராட்டம், இனப் போராட்டம், அதிகாரப் போராட்டம், மதப் போராட்டம், எல்லைப் போராட்டம், நிலவுடமைப் போராட்டம், கொள்கைப் போராட்டம் என காலத்திற்குக் காலம் நடந்தவண்ணமே உள்ளது.

ரஷ்யாவில் நடைபெற்ற ஒக்டோபர் புரட்சியின் (1917) ஈர்ப்பின்பால் இலங்கையில் இடம்பெற்ற ஒக்டோபர் 21 (1966) எழுச்சியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவினை மனதிலேந்தி கலாநிதி ந.இரவீந்திரன் அவர்களால் "சாதிச் சமூக வரலாற்றில் வர்க்கப் போராட்டம்" என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தோற்றத்திற்கு வழிசமைத்த ஒக்டோபர் 21 எழுச்சிப் போராட்டம் புனிதம் - தீட்டென்ற குறுக்குச் சுவர்களைத் தகர்த்து பொதுவெளியில் சமத்துவத்தை வலியுறுத்தும் போராட்டமாக மாறியது. நாட்டில் சம அந்தஸ்த்தைக் கோரி நாடாளுமன்றத்தில் குரல்கொடுக்கும் போராட்ட வரலாற்றுக்குள் மறக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட போராட்டங்கள் இருந்துள்ளன. அந்தப் போராட்டங்கள் தேனீர்க் கடைகளிலும் ஆலயங்களிலும் சமத்துவத்தை வலியுறுத்தி நடாத்தப்பட்டவை என்ற வரலாற்றின் ஆவணப்படுத்தலாகவும், உலக நாடுகளில் நடைபெற்ற வர்க்கப் போராட்டங்களின் எழுச்சி, வீழ்ச்சி பற்றிய ஆய்வுக் கட்டுரைகளாகவும் இந்த நூலைப்பார்க்கலாம். மார்க்சியம், லெனினியம், ட்ரொட்ஸ்கியிசம், ஸ்டாலினியம், மாஒயிசம், சேகுவார இயக்கம் போன்றவற்றையும் ஒப்பிட்டு ஆய்விற்காக இந்தநூலில் இணைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

போராட்டங்களும், எழுச்சிகளும், அனர்த்தங்களும் பல புதிய சொற்களின் வார்ப்புக்களை எமக்கு விட்டுச் சென்றுள்ளன என்பதை இந்த நூல் தெளிவுபடுத்துகின்றது. நூல் முழுவதும் இழையோடி இருக்கும் ஒக்டோர் எழுச்சியும், அம்பேத்கர், மாஓசேதுங், மார்க்ஸ், லெனின் போன்றோரின் போராட்ட வடிவங்களையும், அவற்றிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களையும் தனது சுய ஆய்விற்கு உட்படுத்தி இந்தக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. இந்தக் கட்டுரைகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சி அல்லது சம்பவங்கள், அவை நடைபெற்ற கால எல்லைகள், அவற்றின் கொள்கைகள், அதன் பின்னணிகள், அவற்றின் தனித்துவமான பண்புகள், அவற்றின் விளைவுகள் என்பவற்றை எல்லாக் கட்டுரைகளிலும் தரிசிக்கமுடியும்.

மார்க்சிஸம் மற்றுமொரு மதமல்ல என்ற வாதமுன்மொழிவில் மார்க்சிஸம் என்பதை சமூக இருப்பைக் கண்டறியும் ஆய்விற்கும் - அதனை மாற்று கின்ற செயற்பாட்டிற்குமான மார்க்கமே மார்க்சியம் என்ற புரிதலின் அவசியத்தை வலியுறுத்துகின்றார். இந்துக்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர் கள் தத்தமது நம்பிக்கைகளுக்கு ஏற்ப மார்க்சிஸம் இயங்கவில்லை. அது ஒரு நாட்டின் சமூக அமைப்பின் பிரத்தியேகத் தன்மைக்கேற்பவே அவை பிரயோகப் படுத்தப்பட வேண்டும் என்றும் வாதிடுகின்றார். பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சிக்காக பெரும் பங்காற்றி யது சோவியத் யூனியன். அதன் வீழ்ச்சி வர்க்கப் போராட்ட வரலாற்றின் வேறு திசை இயக்கத்திற்கு வழி வகுத்துள்ளது. கடந்தகாலம் பற்றிய கசப்பான மறு வாசிப்புக்கள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியதென்ப தற்கு சிந்துவெளிப் பண்பாட்டின் குதிரை பற்றிய உதாரணம் முன்வைக்கப்பட்டுள்ளது. இனவாத தமிழர் களும் சிங்களவர்களும் அந்தக் குதிரையை வைத்துக் கொண்டு தத்தமது இருப்புக்களை நியாயப்படுத்த எல்லாளன் - துட்டகைமுனு என்ற முரண்பாடுகளை வளர்த்துக் கொண்ட வரலாற்றை சுட்டிக்காட்டியுள்ளது நூலாசிரியரின் ஆழமான தேடலின் விளைவு என்பதை வாசகர்கள் புரிந்துகொள்வார்கள்.

பதினைந்தாம் நூற்றாண்டில் முதலாளி வர்க்கத் திற்கும், பாட்டாளி வர்க்கத்திற்குமான போராட்டங்கள் ஐரோப்பியாவின் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கங்களும் தடைகளும் அறிவியல் வளர்ச்சிக்கும் வழிகோலியுள்ளது. அதற்கு உதாரணமாக வர்த்தகத் தரைப்பாதை தடைப்பட்டதும் கடல்வழிப் பயணத்திற் காக நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே புராதன அறிவியல் நூல்களை நோக்கி நகரத் தூண்டி யுள்ளது. இந்திய, சீன அறிவியல் நூல்களை மொழி பெயர்ப்புச் செய்து அறிவியலையும் தனதாக்கி ஆதிக்கம் செலுத்தியதோடு தனது பங்கிற்கு விஞ்ஞான வளர்ச்சிக் கும் தூண்டுதலாய் அமைந்திருப்பதாக கூறும் நூலாசிரி யர் இம்மூன்று நாடுகளும் வளர்த்த விஞ்ஞான அறிவு மதப் பிணைப்புக்களை மீறமுடியவில்லை என்றும் கூறுகின்றார். பிரான்சியப் புரட்சி நிலப்பிரபுத்துவத்தை முறியடிக்கும் வர்க்கப் போராட்டமாக முதலாளித்து வத்தின் வர்க்கப்போராட்டம் மேலோங்கியது. ஒரே மொழி, பொதுவான பண்பாடு, வரலாற்றுப் பிணைப்பு, ஆள்புலம் என்பவற்றைக் கொண்ட இறைமையுள்ள தேசங்களை உருவாக்கியதாகவும் வரலாற்றைப் பதிவிடு கின்றார். இவ்வாறான அறிவியல் சார்ந்த, புவியியல் சார்ந்த, ஆதிக்கப் போக்கின் வடிவ மாற்றங்கள் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் நூலாசிரியரின் ஆழமான அறிவுத் தேட்டத்தையும், பரந்த வாசிப்புப் பழக்கத்தையும் மீண்டும் எம்முன் நிரூபித்துள்ளது.

இன்றுள்ள உலகம் தேசங்களாக வரையறுக்கப் பட்ட பின்பு பிற தேசத்தின் ஊடுருவல்கள் தடுக்கப் பட்டுள்ளது. ஆட்சிப் பரப்பு வரையறுக்கப்பட்டு தனி நாடு களாக தமது இறையாமையுடன் வாழும் கட்டமைப்பு உருவாகியுள்ளது. இந்த நிலப்பரப்பில் ஜனநாயகத் தேர்தல் வாயிலாக ஆட்சியாளர்களைத் தெரிவுசெய்வது நடைமுறையில் உள்ளது. இதிலும் உள்ள குறைபாட்டை விளக்குகையில்: பெரும்பாண்மை வாக்குகளால் ஆட்சிப்பீடம் ஏறுபவர்களால் சிறுபாண்மையினர் புறக் கணிக்கப்படும் நிலை காணப்படுவதாகவும் கூறுகின்றார். இதனை ஒரு பூரண ஜனநாயகத்தின் வழியிலேயே நிவர்த்தி செய்யமுடியும். இது இலங்கைக்கானது மட்டு மல்ல உலகமெங்கும் நிகழ்வதே. இதற்கான காரணம் பூரணமான ஜனநாயகக் கட்டமைப்பு எங்கும் உயிர்ப்புடன் இருப்பதில்லை என்றும் “வரலாறும் வர்க்கப் போராட்டமும்” என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத்தீவில் நிலவிவரும் இனப்பிரச்சினை பற்றிய புரிதலை விரிவுபடுத்துவதற்கு ஏற்ற பல நுணுக்க மான வினாக்களையும் விளக்கங்களையும் பகிர்ந்து செல்லும் கட்டுரையாக “தேசியம் -இனத்தேசியம்” என்ற கட்டுரை எழுதப்பட்டுள்ளதாக கருதுகின்றேன். சிங்கள வர்கள், தமிழர்கள், இஸ்லாமியர்கள், மலையகத் தமிழர்கள் என்ற நான்கு தேசிய இனங்களையும், ஆட்சிமுறைமையையும் முன்னிறுத்தி பின்வரும் கேள்விகளை அவர் முன்வைக்கின்றார். அவற்றை நடுநிலையாகவும் ஆழமாகவும் கருத்திலெடுப்பது எமது அரசியல்சார் அறிவினை அகலப்படுத்தும்.

1. ஆட்சியுரிமை பெறமுடியாத முஸ்லீம், மலையகத்தமிழ்த் தேசியம் என்பவற்றுக்கான தீர்வு எத்தகையது?

2. சிங்கள சமஷ்டிக்குள் வாழும் தமிழர், தமிழ் சமஷ்டிக்குள் வாழும் சிங்களவர் ஆகியோரின் உரிமைகள் எவ்வகையில் பேணப்பட இயலும் ?

3. இரண்டு சமஷ்டி அலகை சிங்கள மக்கள் நிராகரிக்கக் காரணம் என்ன ?

4. பிரிவினை மட்டுமே தீர்வாகும் என தமிழ்த் தேசியத்தினர் கூறுவது ஏன் ?

5. சிங்கள, தமிழ் முரண்பாடு காலாகாலமாக இருந்துவருகின்ற ஒன்றா ?

6. முப்பது ஆண்டுகளாக நீடித்துவந்த யுத்தம் தமிழ் சிங்கள முரண்பாடுகளை மட்டுமே காரணமாக வைத்து இடம்பெற்றதா ?

7. இந்த யுத்தத்தில் வேறு காரணிகள் இல்லையா ?

8. இலங்கையின் இன நல்லிணக்கமும் தெற்காசியா முழுவதிலும் நாடுகளிற்கு இடையே பரஸ்பரப் புரிந்துணர்வு சாத்தியமில்லையா?

தமிழ்த் தேசியத்தை எந்தவடிவத்திலும் ஏற்றுக் கொள்ளத் தயாராகும் நிலைக்கு வழிகோலியது சிங்கள மார்க்சியர் நிலைப்பாடு என்பதை வலியுறுத்துகின்றார். அத்தோடு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த ஜே.வி.பியும் முள்ளிவாய்க்கால் படுகொலைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரித்து நின்றது கவனிக்கப்படவேண்டியதென்ற சிந்தனைத் தூண்டலை ஏற்படுத்தியுள்ளது. இந்த முப்பது ஆண்டுகால ஆயுதப்போரின் பின்புலத்தில் மறைந்திருந்த சாதியம் பற்றியும் இக்கட்டுரை அலசுகின்றது.

"சோவியத் யூனியனின் தகர்வும் தலித்தியவாதம் முனைப்படைதலும்" என்ற கட்டுரை தலித்திய வாதத்தின் எழுச்சியில் அம்பேத்கரின் பங்கினையும், தலித்தியவாதத்தின் வீழ்ச்சியையும், சோவியத் யூனியனில் சோசலிசம் பற்றியும் விரிவாக விபரித் துள்ளது. அம்பேத்கர், லெனின் ஆகியோரின் மறைவின் பின் அவர்கள் முன்னெடுத்த தலித்தியவாதமும் சோசலிச முன்னெடுப்புக்களும் எவ்வாறு மாற்றம் கண்டன. அவர்களின் பின் வந்தவர்கள் எப்படி அதைக் கையாண்டனர், மனித உயிரெடுப்புக்கள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதையும் இந்தக்கட்டுரை விபரிக்கின்றது. இவற்றிற்கும் மேலாக சோசலிச முகாம் உருவாக்ககமும் தகர்வும், தலித்திய வாதமும் மார்க்ஸிய மும், தேசங்களின் சோசலிசம் போன்றவற்றின் விரி வான விளக்கங்களைக் கொண்ட உப கட்டுரைகளும் இந்நூலிற்கு அணிசேர்க்கின்றன.

"ஒக்டோபர் இருபத்தொன்று எழுச்சி" என்ற கட்டுரையில் இந்தியாவில் சுதந்திரப் போராட்டத்தை வெகுஜனமயப்படுத்தியதில் காந்தி பிரதான பங்கினை வகித்திருந்தார். பிராமணர்களுக்கு எதிரான விட்டுக் கொடுப்பற்ற போராட்டம் இனத்தேசிய அரசியலை வடி வமைக்க பெரியாரின் அயராத உழைப்பு கைகொடுத் திருந்தது. சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களில் அம்பேத்கரின் ஆளுமை மிக்க முயற்சிகள் உறுதுணையாக இருந்தது. ஒரு கலப்புப் பொருளாதாரக் கொள்கை இந்தியச் சமூக விடுதலையை வென்றெடுக்கமுடியுமென்று நேரு நம்பியதால் அதனை அம்பேத்கரிடமே ஒப்படைத்தமை கவனத்திற் கொள்ளவேண்டும். ஏகாதிபத்தியத்தின் கரங்கள் ஓங்கியதால் அதன் தாக்கம் இன்னமும் மக்கள் விடுதலையை எட்டாக்கனியாகவே வைத்துள்ளது என்று நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இந்திய இலங்கை அரசியலானது ஒன்றுக்கொன்று இருமுனைத் தாக்கங் களையே அன்றும் இன்றும் கொண்டிருப்பதை இவரது கட்டுரைகள் தெளிவு படுத்துகின்றன. போராட்டங்கள் எப்பொழுதும் இரண்டு வகைக்குள் அடங்கி நின்றது. ஒன்று சாத்வீகப் போராட்டம் மற்றையது வன்முறைப் போராட்டம். இலங்கையிலும் இவ் இருவகைப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ந.சண்முக தாசன் தலைமையிலான இடதுசாரி அணி நான்கு தேசிய இனங்களையும் உள்வாங்கிய பெரும் சக்தியாக பரிணமித்தது. அதன் விளைவாக சாத்வீகப் போராட்டம் திருப்பி அடித்தல் என்ற வகையில் இளைஞர்களுக் கிடையில் மாற்றம் பெற்றதாகக் குறிப்பிடுகின்றார். வட்டுக்கோட்டை, சங்கானை, பொன்னாலை, காரை நகர், சுழிபுரம், சுன்னாகம் போன்ற பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட எழுச்சிகளையும் குறிப்பாக கே.ஏ.சுப்பிரமணியம் தலைமையில் "ஒக்டோபர் 21" என்ற சுன்னாகம் முதல் யாழ்ப்பாணம் வரை சென்ற ஊர்வலம் பற்றியும், விழிப்புணர்வு நிகழ்வுகள் பற்றிய தகவல்களோடு இந்தக் கட்டுரை நீண்டு செல்கின்றது.

"சாதி: ஒடுக்கப்படும் திணைகளும் திணை மேலாதிக்கமும்" என்ற கட்டுரையில் யுத்தகாலத்தில் சாதிபற்றிய பாகுபாடோ பேச்சோ இருக்கக்கூடாது என்ற சட்டம் இருந்த போதிலும் அவை மறைமுகமாக இருந்து வந்துள்ளதை விளக்குகிறார். யுத்தம், இடப்பெயர்வு, சுனாமியால் இடம்பெயர்ந்த மக்களிடையே சாதிப் பாகு பாடு இழையோடி இருந்ததை பரஞ்சோதி தங்கவேல் தனத நூலில் குறிப்பிட்டிருப்பதை பதிவிட்டுள்ளார். சாதி பேதம் என்பது வெறும் அடையாளப் பிரச்சனையல்ல. அது பொருளாதார அமைப்புச் சார்ந்து சுரண்டலுக்கு வாய்ப்பளிக்கும் சமூக வடிவம் என்று விளக்கியிருப்பது சாதி முறைமை பற்றிய வரலாற்றில் முக்கியமாகக் கருத்திற் கொள்ளவேண்டியது.

சாதியமைப்பு வரலாற்றை நோக்கினால், மத்திய ஆசியாவில் இருந்து தெற்காசியா மீது படையெடுத்த ஆரியர்கள் உள்ளூர் மக்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க சாதி அமைப்பென்ற ஆயுதத்தை கையிலெடுத்தனர். அதனூடாக மக்களை குழுக்களாக பிரித்தாண்டார்கள் என்பதும் அவை இன்றுவரை நம்மிடையே தொடர்ந்தும் காணப்படுகின்றது என்ற வாதமே மேலோங்கி நின்றது. இந் நூல் சாதித் தோற்றம பற்றி அலசுகையில் ஆரியர் சதிதான் சாதி, திராவிடர் களுக்கான வாழ்முறைதான் சாதி, திராவிட-ஆரிய இணைப்பின் பேறே சாதி, இந்தியாவின் இனக்கோட் பாட்டின் வெளிப்பாடே சாதி, தொழில் காரணியினால் தோன்றியது சாதி மற்றும் மதக்காரணியும் மத மோதல்களுமே சாதியை ஊக்குவித்தது போன்ற கருத்துக்களை விளக்கியுள்ளார்.

"சாதிகளிடையே அதிகார மாற்றம்" என்ற கட்டுரை "வர்க்கங்கள் தோன்றி வளர்ந்து அழிவன", "சாதிகளையன்றி சாதி ஆதிக்கங்களை ஒழித்தல்", "அதிகார மாற்றங்களைக் காண்பன சாதிகள்" என்ற மூன்று உபதலைப்பினூடாக எழுதப்பட்டுள்ளது. இந்திய மொழிகள் அனைத்தும் சமஸ்கிருதத்தை மூலமாகக் கொண்டிருப்பன என்ற வாதத்தை உடைத்து தமிழ் மொழியே அதிகளவில் தனது பண்பைப் பேணி வந்துள்ளது. தனக்கென ஒரு இலக்கியத் தொடக்கத் தைக் கொண்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டுகின்றார். வணிகமயமாக்கப்பட்ட கல்விமுறையில் வெளிக் கொண்டுவரப்படும் ஆய்வுகள் எமது சமூக கட்ட மைப்பை பிரதிபலிப்பதில்லை. அதேவேளை அப்படிச் செய்யாமல் விடுதலை நாட்டத்தோடு ஆய்வில் ஈடுபடுவோர் அவர்கள் அறியாமலேயெ சாதியவாதம், இனவாதம், மதவாதம் என்பன ஆதிக்கம் செலுத்தும் வகையில் முறையியல் மூலதனத்தால் கையாளப் படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

"பண்பாட்டுப் புரட்சியில் சாதியவர்க்கம்" என்ற கட்டுரையை "பண்பாட்டுப் புரட்சி", "சமூகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்பில் கருத்தியலின் முக்கியத்துவம்" போன்ற உபதலைப்புக்களின் வாயிலாக கட்டமைத்துள்ளார். இதில் சில சுவாரசியமான விடயங்களையும் அவர் உள்வாங்கியுள்ளார். குறிப்பாக ஒரே சாதிக்குள் அவர்களின் வர்த்தகத்தின் தன்மையால் அல்லது அதன் அளவினைக்கொண்டு இரண்டு பிரிவினராக தமக்குள் பிளவுபடுவதால் அதில் ஒரு சாரார் மேலாதிக்கச் சாதியோடு இணைவதை தவிர்க்க முடியவில்லை என்கின்றார். அதற்கு உதாரணங்களாக கோவலன் - கண்ணகி ஆகியோரின் பெற்றோர் நாடுதாண்டி வர்த்தகம் செய்த வரலாறு உள்ளதாகவும், இவ்வாறான பெரு வனிகர்களின் நலனில் அரசின் முன்னுரிமை இருந்துள்ளது. அதேவேளை காரைக்கால் அம்மையாரின் கணவர் சிறு வர்த்தகராக இருந்ததால் பெரு வர்த்தகர்களோடு ஏற்பட்ட முரண்பாட்டின் பின் காரைக்கால் அம்மையார் பக்திப் பேரியக்கத்தை ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டதையும் தந்துள்ளார்.

ஆண்டான் - அடிமைகள் என்ற வர்க்கங்களாகப் பிளவுபட்டபொழுது. யுத்தம், ஆக்கிரமிப்பில் வெற்றி கண்டவர்களால் பலர் கடத்தப்பட்டு அடிமைகளாக வைக்கப்பட்டிருந்தனர். அவர்களது குடும்ப அமைப்புக்களும் பண்பாட்டு அடையாளங்களும் தகர்க்கப்பட்டதால் பிற்காலத்தில் அவர்களும் புரட்சியின்மூலம் புதிய சமூகக் கட்டமைப்பை ஏற்படுத்தினர் என்று அவர் குறிப்பிட்டிருப்பது எமது வாழ்வியல் கட்டமைக்கப்பட்ட பாதையின் வழித்தடங்களாகவே பாரக்கவைத்துள்ளது.

"சமூக மாற்றக் கட்டத்தில் சாதி வர்க்கப் பிரிவினரிடையே சமநிலைக்குலைவு" என்ற கட்டுரை "இந்துமதம் சாதிச் சமயங்களின் சமயம்", "திணை அரசியலில் வர்க்கங்கள்", "மக்கள் ஜனநாயக சர்வதிகாரம்" ஆகிய உப தலைப்புக்களின் கீழ் நகர்த்தியுள்ளார். இந்து மதம் முன்னரைவிட அதிகமாக தலித் மக்களால் அங்கீகரிக்கப்பட்டு வருவதும். தீண்டாமை ஒழிப்புக்குக் குரல் கொடுத்தவர்களில் சிலர் மத ஒழிப்பு வாதத்திற்கும் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர். சாதிய வேறுபாடு மதத்தின் பேரால் நிராகரிக்கப்பட்டன. முப்பதாம் ஆண்டு கால எல்லையில் சாதி வேற்றுமையை ஒழிக்காதுபோனதால் அம்பேத்கர் தனது தொண்டர்களோடு பௌத்த மதத்தை தழுவிய வராற்றுப்பின்னணியைக் கூறியுள்ளார். இவ்வாறான வரலாற்று நிகழ்வுகள் நாம் அறிந்த அப்பேத்கர், காரைக்கால் அம்மையார், நேரு, பெரியார் போன்றோரின் இன்னொரு குறுக்குவெட்டுமுகங்களை காண்பித்துள்ளன.




இந்தியாவில் இந்துத்துவமும், இலங்கையில் பௌத்த சிங்களப் பேரினவாதமும் செய்கின்ற அட்டூழியங்களுக்கு எதிராக போராடித் தோற்றுவிடுகின்றோம். இந்தத் தோல்வி ஒடுக்கப்பட்ட சாதி மக்களுக்கானது மட்டுமன்றி ஆதிக்கவர்க்கத்தினால் சுரண்டப்பட்ட மக்களுக்குமானதென்ற தெளிவை முன்வைத்துள்ளார்.


"முடிவுக்குப் பதிலாக" என்ற இறுதிக் குறுங் கட்டுரையில் சாதிச் சமூகத்தின் இயக்கச் செயல்நெறியைத் தெளிவுறுத்தவும், சோசலிசத்தை கட்டியெழுப்ப மார்க்சிசம், லெனினிசம், மாஓசேதுங் சிந்தனை தீர்க்கத் தவறிய அம்சங்களையும் கண்டடையவேண்டும் என்று பரிந்துரைக்கின்றார். இது வெறும் வரலாற்று மீட்டெடுப்பு மட்டுமல்ல. இன்றைய வரலாற்று மாற்றச் செயற் திட்டங்களுடன் பொருத்திப் பார்க்கவேண்டியது அவசியமாகுவதாக கூறும் அவரது கூற்றை இந்நூலின் இறுதிப் பக்கத்தில் நின்றுகொண்டு ஆமோதிக்கின்றேன்.

"இந்நூல் புத்தகவாதச் சிந்தனைக்கு அப்பால் சமூக நடவடிக்கைகளின் ஊடாக பெறப்பட்ட நேரடி அனுபவம் மற்றும் நூல் ஆய்வுகளின் ஊடாகப் பெறப்பட்ட புலமைத்துவம் என்பவற்றை நமது காலச் சூழலோடு பொருத்திப் பார்ப்பதாக அமைந்திருப்பது இதன் தனித்துவமான பண்பாகும்" என்று தனது பதிப்புரையில் லெனின் மதிவானம் குறிப்பிட்டதை இங்கு சுட்டிக்காட்டுவது அவசியம்.


சில சம்பவங்கள் அல்லது கருத்துக்கள் மீண்டும் மீண்டும் வருவதை தவிர்க்கமுடியாமற் போனது வாசகருக்கு சற்றுச் சிரமத்தை ஏற்படுத்துவதுபோல் உள்ளது. வேறு வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்ட கட்டுரைகளாக அவை அமைந்திருக்கக் கூடும் அல்லது ஒரு விடயம் பல தலைப்பிற்கு பொருந்துகின்றது என்பதன் விளைவாகவும் இருக்கலாம். இருப்பினும் மிக ஆழமான சாதி, அரசியல், வர்த்தகம், பண்பாடு, மொழி, மதம், இனமெனப் பல தளங்களில் நின்று அதன் பரிமாணங்களை காண்பித்ததனூடாக இந்த நூலுருவாக்கத்தின் நோக்கத்தை நிறைவு செய்கின்றது. வர்க்கப் போராட்டம், தேசிய விடுதலைப் போராட்ட விளக்கங்களோடு இந்தியா, ரஸ்சியா, சீனா போன்ற நாடுகளில் ஏற்பட்ட போராட்ட எழுச்சிகளும் வீழ்ச்சிகளும் அதன் பின்னரான கட்டமைப்பு மாற்றங்களும் தெளிவாகக் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. சில கட்டுரைகளிற்கு இடையில் எழுப்பப்படும் வினாக்கள் எமது ஆழ்ந்த சிந்தனைக்கு தீனிபோட்டதோடு நாம் பார்க்கும் புள்ளிகளை விடுத்து வெளியே சென்றும் பார்க்கவேண்டும் என்ற புரிதலையும் இந் நூல் ஏற்படுத்தியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொ பிரபாகரன்



# ந.இரவீந்திரனின்
## "பின் நவீனத்துவமும் அழகியலும்"




*1997-ல் "பின் நவீனத்துவமும் அழகியலும்" என்ற தலைப்பில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்தான் ந. இரவீந்திரனின் இந்நூலைப் பதிப்பித்தது. தொடர்ந்து பிப்ரவரி 2001-ல் சென்னை சவுத் விஷன் பதிப்பகத்தினர், மேற்படி நூலுடன் இரவீந்தரனின் "பஞ்சமர் இலக்கியம்" மற்றும் "பிரதியும் உண்மையும்" என்ற இரண்டு புதுக் கட்டுரைகளை இணைத்து, மற்றொரு புதிய பதிப்பாக "பின் நவீனத்துவமும் அழகியலும்" என்ற அதே தலைப்பில், தமிழகத்தில் கொண்டு வந்தனர். தமிழின் பின்நவீனத்துவம் மற்றும் அழகியல் சம்பந்தமான கதையாடல்களுக்கு, மார்க்சிய செல்நெறியில் நின்று, சமர் புரிவதாக இக்கட்டுரைகள் அமைந்துள்ளன. 1991-ம் ஆண்டு ஏற்பட்ட சோவியத் யூனியனின் சரிவையொட்டி, தமிழகத்தில் பின்நவீனத்துவ வாதிகளும், அழகியல்வாதிகளும் சத்தம் போட்டு, பேசியதோடு மட்டுமல்லாது, பல மார்க்சியர்களுக்கும் பின்நவீனத்துவ சறுக்கல் ஏற்பட்டது.. சிலர் பொத்தாம் பொதுவான அழகியல் பேசினர். கலை மற்றும் இலக்கியத்தில், உருவத்தை உள்ளடக்கத்தைக் காட்டிலும், உள்ளடக்கமே இல்லாமலும் பிரமாண்டமாக கட்டி எழுப்ப முயற்சி நடந்து கொண்டிருந்தது. சோவியத் யூனியனின் சிதைவு என்ற புறநிலை யதார்த்தம் சோசலிச முகாமுக்கு ஏற்பட்ட ஒரு பின்னடைவு மட்டுமே என்பதை ஏற்றுக் கொள்வதில், கல்விபுலம் சார்ந்த இடதுசாரிகளுக்கும் கூட பெரும் குழப்பம் இருந்தது.*

அப்போது ஒரு தெளிவை ஏற்படுத்தும் முனைப்பாக இந்நூல் வந்தது எனலாம்.. நூல் வெளியான 27 வருடங்கள் கழித்து, இந்நூல் பற்றிய என் கருத்தை 25.05.2024க்குள், எழுதித் தருமாறு இரவீந்திரன் அவர்கள் 11.05.2024 சனிக்கிழமை இரவு 07.00 மணி வாக்கில், கைப்பேசி மூலம், நான் இளம் நண்பர்களுடன் தேநீர் கடையில் கதையாடிக் கொண்டிருந்த போது, தொடர்பு கொண்டு கேட்டார்..

எனக்கு இப்படி அவர் கேட்டது மகிழ்ச்சிதான். என்றாலும், இந்தப் பணி மிகவும் பொறுப்புணர்வுடன் செய்ய வேண்டியது என நான் முதலில் கருதாததால், எனக்குள் எந்த மனப்பாரமும் ஏற்படவில்லை. எனக்குத் தோன்றியதை நேர்மையாக சொல்லிட வேண்டுமென சங்கல்பம் செய்து கொண்டேன்.

தமிழகத்தில் சாதி மதங்களை ஊடறுத்து மார்க்சியத்தைப் பிரயோகிப்பதிலும், பண்பாட்டு ரீதியில் செயலாற்றுவதிலும், எனக்குப் பெரும் உந்துசக்தியாக இருந்தது இரவீந்திரன் அவர்களின் எழுத்து. எனக்கு அறிமுகமானது சோவியத் வீழ்ச்சிக்குப் பிறகுதான். அவரது எழுத்தை எனது அனுபவமாக சுவீகரிக்க முடியும் போது, அது எனக்குப் பெரும் தெளிவையும், சக்தியையும் அளித்தது, அளிக்கிறது... என்றாலும், அவருடன் நேரடி கதையாடல் இருந்தது எனச் சொல்ல முடியாது.. கூடுமான வரை, அவர் சொல்வதை அப்படியே கேட்டுப் போக வேண்டிய நிலையிலேயே எனது தாரதர்மியம் இருந்தது. எல்லா வகையிலும் அவர் எனக்கு Mentor-ராக இருக்க தகுதியானவர் என்றாலும், அவருக்கு நான் disciple ஆக தகுதியானவனா என்ற கேள்வி இன்று வரை எனக்குள் தொக்கி நிற்கிறது... மேலும் எங்களது செயற்படும் தளங்களும் வேறுபட்டவை. அவர் அறிவுஜீவியாக ஆராய்ச்சியாளராய் கல்விபுலத்தில் செயற்பட, நான் கலை இலக்கியத்தில் பங்காற்றினேன். அவர் எழுதிய புத்தகங்கள் பெரும்பாலும் என்னிடம் ஒரு பிரதி இருக்கும்.. "பின் நவீனத்துவமும் அழகியலும்", அவைகளுடன் சேர்ந்து இருந்தது சந்தோசமே.. மீள் வாசிப்புக்குத் தயாரானேன்..

என்னை மார்க்சியம் மயக்கியது என்றாலும், நடைமுறை மார்க்சியர்களுடனும், எனக்கு மார்க்சியம் கற்பித்த ஆசான்களுடனும், ஏதாவது ஒரு புள்ளியில் இணக்கமற்ற போக்கு தொடர்ந்தது. அந்த இணக்கமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கே மார்க்சியத்தின் மேல், மேலும் எனக்கு சுவாரசியத்தை ஏற்படுத்தியது. 1990-களில் மார்க்சிய புரிதலுடன் கலை இலக்கியம் மற்றும் தொழிற்சங்க செயற்பாட்டில் இருந்த போது, எனக்கு கிடைத்த ஈழத்தமிழ்ப்புத்தகங்கள், தமிழக பண்பாட்டுத் தளத்தில் பணியாற்றும் தெளிவைத் தந்தன. அதில் கைலாசபதி, சிவத்தம்பி போன்ற முந்தைய அறிஞர்களிலிருந்து, சுப்பிரமணியன் முதல் ந இரவீந்திரன் வரையுள்ள பிந்தைய அறிஞர்கள் வரை அறிமுகம் ஆயினர்.. அவர்களது எழுத்து எனக்குள் பாரிய பாத்திரமாற்றியது.

படைப்புத்திறன் சமூக பொறுப்புள்ளவர்களுக்கே அமையும், சமூக பொறுப்பை ஏற்கத் தயங்குபவரிடம் படைப்புத் திறன் எளிதாக அண்டாது. படைப்புத்திறனை கலை இலக்கியத்துடன் மட்டும் சுருக்கி விடாது, நமது வாழ்க்கையின் ஒவ்வொரு செயலுடனும், அன்றாட செயற்பாட்டுடனும், படைப்பாக்கம் என்ன பங்கு வகிக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். சமூகஜீவிதான் அறிவையும் உணர்வையும் சரியாக பிரயோகித்து, புறநிலை யதார்த்தத்தைச் சரியான அனுபவமாக உள்வாங்கி, அதனை அகநிலைக்குக் கொண்டு போய் மாற்றம் செய்து, படைப்பாக்கமாக வெளிபடுத்த முடியும்.. அந்த படைப்பு ஊக்கம்தான், மனித சமூகத்தை அடுத்த நிலைக்கு உயர்த்தும்.. அதற்கு மாறாக, தங்கள் அகநிலை ஆசையை புறநிலை யதார்த்தம் போல் முன்வைக்க முயன்றால், அது பெரும் அனர்த்தமாக தான் இருக்கும்..

புராதான பொதுவுடமை சமூகத்தில் கவிதைக்கு மந்திரசக்தி இருப்பதாக மனிதர்கள் நம்பினர். மந்திரக் கவிதை இயற்கையை வசியம் செய்ய, நோய்களைக் குணப்படுத்த உதவும் எனக் கருதினர்.. இயற்கையைப் புரிந்து, புரிந்த அளவுக்கு அதனுடன் வினையாற்றி, விவசாயத்தை வளர்தெடுத்த போது, நிலவுடமை சமூகம் தோன்றியது. கூடவே அந்த வளர்ச்சியுற்ற சமூகத்தைக் கட்டுக்குள் வைக்க, அரசு வேண்டியிருந்தது.. இயற்கையை கடவுளாய் கருதிய புராதன பொதுவுடமை மனிதன், தற்போது இயற்கைக்கு மேலான ஒரு சக்தியாக, அரசனுக்குப் பிரதியீடாக கடவுளைக் கண்டான்.. அப்போதைய கலை இலக்கி யங்கள் தன்னிகரற்ற தலைவர்களால், தலைவர்களுக் காக படைக்கப் பட்டன. “கடவுளைப் பாடும் வாயால் மனிதரைப் பாட மாட்டேன்,“ எனும் மக்கள் நாட்டமற்ற போக்கு வளர்ந்து சுடர் விட்டது.. நிலவுடமை சிதைந்த நாயக்கர்கள் காலத்தில், கலை இலக்கியம் நிலவுடமையாளர்களின் காம கேளிக்கை வஸ்துவானது... உடைமை அமைப்பில் அதன் நலன் சார்ந்த பயன்பாடு, பொழுதுபோக்கு என்ற செல்நெறியில் செயலாற்றிய கலை இலக்கியம், ஆங்கிலேய முதலாளித்துவத்தின் போது, விற்பனைச் சரக்காயின.. கலை மற்றும் இலக்கியங்களைச் சரக்குகளாக்கி விற்கத் தயாராய் இருந்தது, நவீன முதலாளித்துவம்.. இந்த வரலாற்றின் ஊடே, மக்கள் கலை இலக்கியத்தைக் கண்டு, அதற்கான அழகியலை கண்டடைய வேண்டிய நிலைக்கு நாம் வந்துள்ளோம்... இதை இந்நூல் சரியாக அலசுகிறது...

கலை இலக்கியம் மக்கள் சார்ந்து இயங்கும் போது, சமகால மக்களின் வாழ்க்கையை மூலாதாரமாகக் கொண்டு, முன்னோர் வளர்த்தெடுத்த அறிவியற் கருவூலங்களையும், அழகியற் தாரதம்மியங்களைச் சரியாகப் பயன்படுத்தி நிராகரிக்க முடியாத படி படைத்து நிற்கும்.. அதன் உள்ளடக்கத்திற்கு ஏற்ற உருவத்துடன் சிறந்த அழகுடன் மிளிரும்.. உள்ளடக்கமற்ற உருவத்திற்கு எந்த மதிப்புமில்லை என்பதை மக்கள் படைப்பாளிகள் சிறப்பாக புரிந்து வைத்துள்ளார்கள் என இப்புத்தகம் சிறப்பாக விளக்குகிறது..

இலக்கியத்தின் பயன்படுதன்மை முக்கியமான அம்சமாகும். அதன் படைப்புத்திறன், மனித சமூகத்தை மறுஉருவாக்கம் செய்து விடுதலைக்குப் பாதை சமைக்க உதவவேண்டும். சமூகம் முடங்கி போய் இருக்கும் போது, அழகியல்வாதிகள் இலக்கியத்தின் பயன்பாட்டு அம்சத்தையும், படைப்பாற்றலையும் நிராகரித்து, அரூபமான அழகியவாதங்களில் முடங்குவர். இதனை இந்நூல் ஈழ அனுபவங்கள் ஊடாக தோலுரித்துக் காட்டுகிறது...

இன்றைய முதலாளித்துவத்தின் பயன்பாட்டு வாதமும், அதிலிருந்து ஒதுங்கியுள்ள அழகியல்வாதமும், பின்நவீனத்துவவாதிகளின் அழகியலை நிராகரித்த அரசியலும் ஒருங்கே செயலாற்றுகிற கால கட்டத்தில், இவற்றுடன் உறவும், தனித்துவமான அழகியல் அம்சங்களுடன் மக்கள் இலக்கியம் பரிணமித்து வருவதை இந்நூல் எங்கும் பரவலாகச் சொல்லிச் செல்கிறது.

அதிகார வர்க்கங்கள் தமதாக்கிக் கொண்ட இலக்கியங்கள் பால் கூட, அவற்றுள் இருக்கும் எதிர்ப்புக் கூறுகளுக்காக, அது நோக்கி உழைக்கும் மக்கள் ஈர்க்கப் பட்டார்கள். இவ்வாறாக ஒரு பிரதி வெவ்வேறு தரப்பினரால், வெவ்வேறு காரணங்களால் போற்றப்படுவதை இந்நூல் விளக்குகிறது.

“மன்னன் எவ்வழி, மக்கள் அவ்வழி” என்று மக்களை மந்தைகளாக காணும் நிலவுடமை கருத்து உதிர்ந்து, “எல்லோரும் இந்நாட்டு மக்கள்” எனும் கருத்து கோலோச்சிய இக்கால மாறுதல், மக்கள் கலை இலக்கிய பங்களிப்பில் வாய்த்தது என்பதை உணரும் வகையில் உள்ளது இந்நூல். மக்கள் கலை இலக்கிய அழகியல் தனித்துவமானது என்பதால், அதை உள்வாங்க, அதன் மொழியை, அதன் பண்பாட்டைக் கற்று, அதனுடன் முழுஈடுபாட்டுடன் இருப்பது அவசியமாகிறது என்கிறது இந்நூல்...

பின்நவீனத்துவவாதிகள், அதிகாரத்துக்கு எதிராக மக்கள் எந்த தலைமையும் இல்லாது போராட வேண்டும் என அறைக்கூவல் இடுகிறார்கள்.. அப்படி செய்தால், குழப்பம்தானே மிஞ்சும் என்றால், அதற்காக குழப்படைய வேண்டியதில்லை, ஏனென்றால் குழப்பம்தான் சர்வவியாபக நியதி என்பார்கள் அவர்கள்.. சமூகமாற்றம் இயங்கியல் விதிப்படி சோசலிசமாகவும், கடைசியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கமற்ற கம்யூனிசமாக மாறும் என்னும் மார்க்சிய சிந்தாந்தத்திற்கு, மாற்றாக குழப்பக் கோட்பாட்டை பின்நவீனத்துவத்தினர் முன்வைக்கிறார்கள்... அவர்களைப் பொறுத்த வரை, அனைத்து வகையான அமைப்புகளும் அதிகார பீடங்கள்தான், அவைகள் தகர்க்கப்பட வேண்டும். மாற்றம் முரண்களின் மோதலால் ஏற்படுகிறது என்றும், அது எத்திசையில் போவது என்பதற்கு ஒரு பொருளாதார ரீதியான தர்க்கம் உள்ளது என்பதை இயக்கவியல் ரீதியில் பார்க்காமல், எல்லா மாற்றத்தையும் விழுங்குவது என்றால் தெளி வற்ற குழப்பத்தை நாமே வரவழைத்துக் கொள்வது தான்... அந்த அம்சங்களைத் தெளிவாக புரிந்து கொள்ளாததுதான், சோவியத் வீழ்ச்சிக்குப் பின் நேர்ந்த பெரும் பின்னடைவு. அதைச் சரியாக புரிந்து கொண்டு, முன்போக சரியான முன்பயிற்சியும், அதற்கான தத்துவார்த்த பண்பாட்டு புலமும் வேண்டும்... அதைத் தரவல்லது இப்புத்தகம்..

டிசம்பர் 2022-ல் வெளியான “ராமசேஷன் என் நண்பன்” என்ற எனது நாவலில், பின்நவீன முகாமைச் சார்ந்தவர்களுக்கும், மார்க்சிய முகாமைச் சார்ந்தவர் களுக்கும் மோதல் ஏற்படுவதாக வடிவமைத்திருந்தேன்.. பின்நவீன முகாமைச் சார்ந்தவர்கள் இடதுசாரி கட்சியில் இருந்து கொண்டு பின்நவீன சறுக்கலில் சிக்கியவர்கள். மார்க்சிய முகாமைச் சார்ந்தவர்கள் பல கேள்விகளை எழுப்பவதினால், கட்சிக்குள் சேர்க்கப் படாதவர்கள்.. இந்நாவலை முனைவர் ரவீந்திரன் படித்து, அவரது முகநூலில் ஒரு மதிப்புரையும் எழுதிக் கொடுத்தார். என்னை “பின் நவீனத்துவமும் அழகிய லும்” என்ற அவரது நூலுக்கு விமர்சனம் எழுதச் சொன்னதும், எனது நாவல் சம்பந்தமாக நான் திருத்திக் கொள்ள வேண்டிய பிசகிய இடம் எதுவும் இருக்குமோ என்ற சந்தேகம் எனக்குள் எழுந்ததும், எனது மனப்பாரம் அதிகரித்து விட்டது.. மறுபடிவும் எந்நாவலை ஒரு முறை மறுவாசிப்பு செய்து, பெரிய குளறுபடி எதுவும் செய்து விடவில்லை என்று நிதானம் வந்த பின்புதான் மனம் அமைதியானது...

இந்நூலில் பெரியார் தமிழ் கலாச் சாரத்தில் ஏற்படுத்திய தாக்கம் குறித்து ஒரு கட்டுரை இருக்கிறது.. அது பின்நவீனத்துவத்துக்கும், அழகி யலுக்கும் சம்பந்தம் இல்லாதது, சம்பந்தம் இல்லாது இந்நூலில் இடம் பெற்றுள்ளது என்று வாசகர்கள் கருதினால் அது பிழையாகும். பின்நவீனர்கள் போற்றும் பெரியாரிய கூறுகள் ஆங்கிலேய, காங்கிரஸ் மற்றும் திமுகவினரால், விலை பேசப் பட்ட வரலாற்றை உடையது.. பெரியா ரியத்தின் பல கூறுகளைப் புனிதமான வழிபடும் பொருளாக பின்நவீனர்கள் மடை மாற்றினார்கள்.. இன்றைய சூழலில் பெரியாரியத்தை எப்படி



உள்வாங்கு வது என்பதற்கு, இந்நூலை வாசிப்பது அவசியமாகும்.. பிரதி கோட்பாட்டாளர்கள், ஒரு படைப்பை ஆசிரியர் வடிவமைத்துத் தந்ததும் அவரது பணி முடிந்து விடுகிறது எனவும், ஒவ்வொரு வாசகனும் பிரதி மூலம் என்ன பொருள் கொள்கிறானோ அதுவே முக்கியம் என்றும், ஆசிரியர் என்ன கருதியிருப்பார் என்று ஆய்வது தேவையற்றது என்ற கருத்தை முன்வைக் கிறார்கள்.. பிரதியின் மூலம் ஒவ்வொரு வாசகனும் பெறும் பொருள் அவனளவில் ஏற்புடையது, அவ்வளவு தான், ஆனால் அதை உண்மை என மயங்க வேண்டிய தில்லை என்று பிரதி கோட்பாளர்கள் முன்வைக்கும் கருத்து, வாசித்தல் என்பதையே கேள்விக்குள்ளாக்கி விடுகிறது. இந்நூல் அதற்குச் சரியான விளக்கத்தை அளிக்கிறது.. பிரதியை அதன் பண்பாட்டுத் தளத்தில் வைத்து அணுகுதல் அவசியம் என்கிறது.. தன்னிச்சை யாக பொருள் கொள்ளும் வாசக சுதந்திரம், வாசகனின் அகநிலை விருப்பு வெறுப்புகளை அங்கீகரிப்பதாய் அமையும்.. புறநிலைரீதியான இயங்கியல் பொருள்முதல்வாத நோக்கில் பிரதி வாசிக்கப்பட்டு உட்செரிக்கப்பட்டால் தான் உண்மையை அறிய முடியும் என்று மிகச்சரியாக இந்நூல் விளக்குகிறது...

அழகியலை மறுத்து, அரசியலைதான் மாற்று கலாச்சாரம் முன்வைக்கிறது என்று பின்நவீனர்கள் வாய்சவடால் விடும் போது, மக்களுக்கான அழகியல் குறித்து இந்நூலில் உள்ள கட்டுரைகள் பேசுகின்றன.. உழைப்பாளிகளின் நோக்கில் இயற்கையை மனிதவயப் படுத்துகிற அழகியலுக்கும், உழைப்பைப் பிரிந்தவரின் மேட்டுநிலை வகைப்பட்ட அழகியல் முடக்கத்தையும் ஒருவர் வேறுபடுத்த தெரிந்து கொண்டாலே, இந்நூல் வெற்றியடைந்து விட்டது என்று கருதுகிறேன்..

கடந்த கால் நூற்றாண்டில் உலகம் முழுதும் ஏற்பட்ட அறிவுப்புரட்சி, அதைத் தொட்டு எழுந்த தகவல் தொழில்நுட்ப யுகம், செயற்கையறிவு யுகம் எல்லாம் சேர்ந்து, உள உழைப்பாளிகளின் எண்ணிக்கையை பெரிதும் அதிகரித்துள்ளது.. உடல்உழைப்பாளிகளின் பங்கு குறைந்துள்ளது.. அத்துடன் பின்நவீனத்தின் தாக்குதல் சோவியத் வீழ்ச்சியுடன் இருந்தது போல் தற் போது வீரியமாக இல்லை. அமெரிக்க மற்றும் மேற்குலக மேலாதிக்கம் கேள்விக்குள்ளாவது போல், பூவுல அரசியல்(Geopolitical change) மாற்றம் நடந்து வருகிறது.. இந்த மாற்றத்தை உள்வாங்கி, இந்நூலை மறுபடியும் மேன்மைப் படுத்த வேண்டிய அவசியம் உள்ளது எனக் கருதுகிறேன். கூடவே தமிழகத்து வாசகர்கள் இப்புத்தகத்தை வாசிக்க இலங்கைத் தமிழுடன் தங்கள் புலமையை வளர்த்துக் கொள்வது சாலச் சிறந்தது மட்டுமல்ல, அது வாசகர்களுக்கு பயனுள்ளதும் ஆகும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.பௌநந்தி




# சமூகப் பெயர்ச்சிக்கான அடிப்படைகளாக அமையும் உழைப்பு, மொழி, கல்வி ஆகியவற்றிடையேயான இணைவுப் பரிமாணங்களைப் புரிதல்

மனித சமுதாய மாற்றத்தின் அடிப்படையே அவனது கூட்டு வாழ்வியலில் இருந்து உருவானது என சமூகவியலாளர்கள் கருதுகின்றனர். பாதுகாப்புக்காகவும் வேட்டைக்காகவும் கூடிவாழத் தலைப்பட்ட மனிதர்கள் சிறு சிறு குழுக்களாகி, இனக்குழுக்களாக பலவேறு பரிமாணங்களுடன் உலகளவில் வாழ்கின்றனர். "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" என்ற குறள் இங்கு கனத்துக்குரியது. வள்ளுவரின் இக்கூற்றுப்படி அவருக்கு முன்னரே பலவேறு நூலாசிரியர்கள் இருந்துள்ளனர் என்பதும் அவர்கள் பலவேறு கருத்துகளை எழுத்தாதாரங்களாக (நூல்களாக) வெளியிட்டுள்ளனர் என்பதும் அவை தொகுக்கப்பட்டுள்ளன என்பதும் இக்குறளின் மூலம் உய்த்துணரக் கூடியது. எனவே, வள்ளுவரின் காலத்துக்கு முன்பிருந்தே பகுத்துண்டு வாழும் பண்பு முதன்மைப்படுத்தப் பட்டுள்ளது. ஆனாலும் அக்காலத்தை அறுதியிட்டு அவர் கூறவில்லை. அதேவேளை, பகுத்துண்டு வாழும் பண்பை அவர் ஏன் தனது நூலில் முதன்மைப்படுத்த வேண்டிய சூழல் உருவாகியிருக்க வேண்டும் என்று கருதுகின்றபோது அவர் வாழ்ந்த சூழலில் அப்பண்பு நலிவடைந்து சென்றிருக்க வேண்டும், அதனை முதன்மைப்படுத்திப் பின்பற்ற வழிப்படுத்தும் நோக்கில் இவ்வாறு கூறியிருக்கலாம் எனவும் ஊகிக்கலாம்.

உலகளவில் பலவேறு பின்னணியில் தனித்துவமான சமூகக் குழுக்கள் தோற்றம் பெற்றுள்ளன என்பதை விளங்கிக்கொள்வது கடினமாக இருக்காது. ஒவ்வொரு சமூகக் குழுவுக்கும் அவர்களது வாழ்வியல் முறைக்கேற்ப முதன்மைப்படுத்தப்படும் விடயங்களில் வேறுபாடுகள் காணப்படுவது இயல்பு. தமது சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப சமூகமோ தனிமனிதனோ இருக்கும் நிலையிலிருந்து அடுத்த நிலைக்குச் செல்வது தவிர்க்க முடியாததாக இருந்தது - இருக்கின்றது. அவ்வாறு ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு மாறிச் செல்வதனை சமூகப் பெயர்ச்சி (Social Mobility) என்று சுருங்கக் கூறலாம். மேல்நோக்கிய பெயர்ச்சி மட்டுமன்றி புறநிலையாக கீழ்நோக்கிய சமூகப் பெயர்ச்சி என்னும் அபத்தமும் நிகழ்ந்து விடலாம் என்பதை சமூகவியலாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

சமூகப் பெயர்ச்சியின் முக்கிய விடயமாக உழைப்பு விளங்குகின்றது. மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு உழைப்பு மட்டுமன்றி அவனது மொழியும் அதன் வழியாக விரிவாக்கம் பெற்ற கல்வியும் எவ்வாறான தாக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதை ஆதாரங்களோடு முன்வைக்கும் நூலாக ந.இரவீந்திரன் எழுதியுள்ள "உழைப்பு மொழி கல்வி" என்பது காணப்படுகின்றது. சமூக அடுக்குமுறையின் அடிப்படை ஏற்றத்தாழ்வுகளுக்கான புரிதலோடு ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கம் நின்று குரல்கொடுக்கும் படைப்பாளியாக ந.இரவீந்திரன் அவர்களை அவதானிக்க முடியும். சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கான காரணங்களை உலகளாவிய சமூகத் தளங்களின் புரிதலோடு எழுதிவருபவர். அந்த வகையில் மேற்படி நூலும் கவனிப்புக்குரியது. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடாக 2017 இல் இது முதல் பதிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துள்ளது. முகவுரை மற்றும் முடிவுரை நீங்கலாக ஆரியச் சமூகம்: திணை மேலாதிக்கம், மேற்குலகு: தொழில்நுட்ப மேலாண்மை, பொதுமைச் சமூகம்: இயற்கையுடன் போராட்டமும் இயற்கையை வயமாக்கலும் எனும் மூன்று உப தலைப்புகளைக் கொண்ட சிறிய நூலாகக் காணப்படுகின்றது. எனினும் அது அலசுகின்ற விடயத்தால் அவதானிக்கப்பட வேண்டியதொன்றாகவும் அமைந்துள்ளது.

உலக உயிரிகளில் பகுத்தறிவுடையதாக படைக்கப்பட்டது மனித உயிர் ஒன்றே. அது எல்லா வற்றைக் காட்டிலும் உன்னத உயிரியாகவே படைக்கப் பட்டது என்ற பொதுப்பார்வையை இந்நூலாசிரியர் சான்றுகளுடன் மறுக்கிறார். இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கையில் திருப்தியற்ற மனநிலையிலிருந்தான அடுத்த நகர்வு (சமூகப் பெயர்ச்சி) பற்றிய அவாவின் உந்தலும் உழைப்புமே பகுத்தறிவுப் பரிணமிப்பின் பட்டறை என்ற கருத்தை வலியுறுத்துகின்றார். தனிப்பட்ட மனிதன் ஒருவனின் சிந்தனையாகவன்றி கூட்டிணைவின் வெற்றியாகவே இது பார்க்கப்பட வேண்டும். இன்றைய உலகளாவிய போக்கு என்பது கூட்டிணைந்த சிந்தனைகளின், செயற்பாடுகளின் கோர்வையாகவே அமைந்துள்ளன. இந்தக் கோர்வைக்கு வேண்டிய முந்தைய தலைமுறையின் கொடுத்தலையும் அடுத்த தலைமுறையின் கொள்ளலையும் சாத்தியப் படுத்திய முக்கிய கருவியாக மொழி அமைந்துள்ளது. மொழி என்பது சிந்தனைக் கருவூலம், பண்பாட்டுக் காவி, கருத்துப் பரிமாற்ற ஊடகம் என அதற்கான பரி மாணங்களை மொழியியலாளர்கள் முன்வைக்கின்றனர்.

கற்றல் என்பது "நடத்தையில் ஏற்படுகின்ற நிரந்தர மாற்றம்" என்று கருதப்படுகின்றது. அந்தக் கற்றலில் கற்பவனிடத்தில் ஏற்படுகின்ற தேர்ச்சி மிக முக்கிய மானது. இன்றை கல்வியியலாளர்கள் தேர்ச்சி (competency), மற்றும் தேர்ச்சி மட்டங்களை (competency level) முதன்மைப்படுத்திய கற்றல் - கற்பித்தல் செயன் முறையை (Teaching learning process) திட்டமிட்டு நடைமுறைப்படுத்தலின் அவசியம் பற்றிக் கவனம் செலுத்துகின்றனர். இதனை தேர்ச்சி மையக் கல்வி (Competency Based Education) என்கின்றோம். இன்றைய உலகளாவிய கற்பித்தல் செயன்முறையில் இதுவே முதன்மைச் சிந்தனையாக உள்ளது. இலங்கையில் கலைத்திட்டமும் இதற்கு விதிவிலக்கன்று. தேர்ச்சி என்பது அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளிடைத் தொடர்பு ஆகியவற்றில் கற்போனிடத்தில் ஏற்படுகின்ற மாற்றம் ஆகும். கல்விச் சிந்தனையாளர் புளூம் என்பவரின் பகுப்பியல் (Bloom's Taxonomy) அறிகை ஆட்சி (Cognitive domain), எழுச்சி ஆட்சி (Affective domain), உளவியக்க ஆட்சி (Pyschomotor domain) என மூன்று ஆட்சி களை முன்வைத்து வலியுறுத்த முற்படுவதும் இதனையே ஆகும். நூலாசிரியர் இந்த விடயத்தின் தெளிவுடைய வராகத் தனது கருத்துகளை முன்வைத்துள்ளார். ஒரு தலைமுறையினர் தமது அனுபவங்களை அடுத்த தலைமுறைக்குக் கையளிப்பதற்கு மொழி அவசியம் - உதவுகின்றது. அந்தக் கையளிப்புச் செயன்முறையே கல்வி என்கிறார். அறிவை, திறனை, விழுமியங்களை, உணர்வுகளை ஒரு தலைமுறை தமக்குள்ளும் அடுத்த தலைமுறைக்கும் பரிமாற்றும் செய்முறையை கல்வி என்கிறார். இவ்வகையில் மொழியும் கல்வியும் மனித சமுதாயத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன என்பது வலியுறுத்தப்படுகின்றது.

ஒவ்வொரு குழுக்களும் வெவ்வேறு மொழிகளை உருவாக்கி வளர்த்தெடுத்துள்ளன. தாய்வழிச் சமுதாயத்தின் முதன்மை கருதி தாய்மொழி என்கிறோம். உளவியலாளர்களும் தத்துவவியலாளர்களும் தாய் மொழியிலேயே கல்வி வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். ஆனால், உலகமயமாதல், சந்தை சக்திகளின் முனைப்பு, புலப்பெயர்வு போன்ற காரணி களால் கல்விக்கும் தாய்மொழிக்கும் இடையிலான நெருக்கத்தில் தொய்வுநிலை தோன்றிவிட்டது அபத்த நிலை காணப்படுகின்றது. ஆதிக்க சக்திகளுக்கு ஆட் பட்டு கல்விக்கான கேள்வி நிரம்பல் நிலைமை மாற்ற மடைந்துள்ளது. இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சி குரங்கி லிருந்து மனிதன் தோற்றம் பெற்றான் என்பதை மறுப்ப தற்கான ஆதாரங்களை முன்வைக்கத் தலைப்பட்டாலும் நூலாசிரியர் அதற்கு முந்தைய பரிணாம வளர்ச்சி பற்றிய கொள்கையில் உறுதியாக உள்ளார் என்பதற்கு ஆதாரமாக ஏங்கெல்ஸின் கருத்தை முன் வைக்கிறார்.

ஆபிரிக்காவில் தோற்றம் பெற்ற மனித சமூகம் அங்கு காணப்பட்ட வளநெருக்கடிக்குத் தீர்வு காண முற்பட்டு ஆசியா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்க கண்டங்களை நோக்கி நகர்ந்தமையும் தாம் புலம்பெயர்ந்த தேசங்களின் களநிலவரங்களுக்கு ஏற்ப தமது உழைப்பை வரித்துக்கொண்டமையும் வரலாற்று உண்மை பலவேறு விடயங்களை எமக்கு உணர்த்து கின்றது. அதாவது உழைப்பு முதன்மைப்படுத்தப்பட்ட தோடு அவ்வப் பிரதேசங்கள், குழுக்களை அடிப்படை யாகக் கொண்டு மொழிகளும் தோற்றம் பெற்றுள்ளன. எனவே உழைப்புக்கும் மொழிக்கும் இடையிலான தொடர்பு தவிர்க்க முடியாததாக அமைந்திருந்தது. நிலத்தை, உற்பத்திக் கருவிகளை அடிப்படையாகக் கொண்டு உழைப்புக்கான ஊதியம், சுரண்டல், வர்க்க ஏற்றத்தாழ்வு ஆகிய விடயங்கள் முதன்மைபெறத் தொடங்கிய பின்னணியும் விவரிக்கப்பட்டுள்ளமை இந்நூலுக்கான மற்றொரு சிறப்பம்சமாகும். இரு சாராரும் கல்வியை முதன்மைப்படுத்தியிருந்தனர். உழைப்போர் உழைப்பை விருத்திசெய்யும் கல்வியையும் சுரண்டுவோர் ஆன்மிக விருத்தியுடன் கூடிய கல்வியை முதன்மைப்படுத்திக் கற்றனர். இந்தவகையில் மும் முனைப்பு விடயங்களான உழைப்பு, மொழி, கல்வி ஆகி யவை ஒன்றோடொன்று பிரிக்க முடியாத நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தன என்பது வெளிப்படை. விஞ்ஞான தொழில்நுட்ட வளர்ச்சியின் தொடர்ச்சியாக உழைப்பை அடிமைப்படுத்தும் சூக்குமம் நிகழத் தொடங்கிவிட்டது. உழைப்பைக் காட்டிலும் மூலதன மேலாதிக்கம் சமூக இயங்கு நிலையில் பாரிய மாற்றத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திவிட்டிருக் கின்றது. இலாபமீட்லை கூர்மைப்படுத்தி இயற்கை வளங்களைச் சூறையாடி வாழ்வதில் முனைப்புக் காட்டத் தொடங்கியுள்ள சமூகத்தில் இயற்கையைச் தெய்வமாகக் கருதுகின்ற கருத்தியல் அடிபட்டுப்போய் விட்டிருக்கின்றது.

தமிழ் இலக்கியங்கள் ஐந்திணை மரபு பற்றிப் பேசுகின்றன. தமிழ் நாட்டின் நிலங்களை குறிஞ்சி, முல்லை. மருதம், நெய்தல் அடிப்படைப் பண்புகளோடு நான்காகவும் குறிஞ்சியும் முல்லையும் தம்மியல்பில் திரிந்த பாலையை ஐந்தாகவும் கொண்டு ஐந்திணைப் பகுப்பியல் பேசப்படுகின்றது. நிலங்களும் அவற்றின் வளமும் வாழ்க்கை முறையும் எவ்வாறு அமையப் பெற்றன என்பது ஆழமான பார்வைக்குரியது. அகம், புறம் உட்பட்ட அனைத்து நெறிமுறைகளும் நிலத்தின் தன்மையை அடியொற்றியே வகுக்கப்பட்டது. அந் நிலத்தவர்களின் தொழிலும் அவ்வகையிலே அமைந்தது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து தமிழ் நாட்டின் துறைமுகங்கள் முதன்மைபெற்று விளங்கியதோடு பலவேறு பட்டினங்களில் சர்வதேச வர்தகம் நடைபெற்றமைக்கான ஆதாரங்களும் இலக்கி யங்களில் காணப்படுகின்றன என்பது ஆராய்ச்சிகள் பலவற்றினூடாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதன்பின்னர் பக்திப் பேரியக்கம் ஆரம்பிக்கப்பட்டு அதன்வழி திணைக் கருத்தியல் விரிவாக்கம் பெற்றது. இதுவே நீண்டகாலமாக நிலைத்திருந்தது. இவற்றினடிப் படையில் கல்வி பற்றிய தேடலையும் மொழி பற்றிய நோக்கையும் இனக்குழுவின் பின்னணியில் தோன்றிய சமய சிந்தனைப்போக்கு கட்டுக்குள் வைத்திருந்த ஆசியச் சூழலை தெளிவாக விவரித்துச் செல்கின்றவிதம் கவனிக் கத்தக்கதாக உள்ளது. தமிழ் இலக்கியப் போக்கில் பக்திக் கோட்பாடு, இறைவனுக்கும் ஆன்மாவுக்குமுள்ள உறவு முறை, இலக்கியங்களின் பாடுபொருள் ஆகியனவும் இத்தகைய வர்க்க ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்து வனவாக அமைந்துவிட்டன. மொழி ஏற்றத்தாழ்வு பற்றிய கொள்ளை இன்றும் இந்தியாவில் வலுவாக உள்ளமையை அவதானிக்கலாம்.

ஐரோப்பியர் வருகையின் பின்னர்தான் ஆசிரிய நாடுகளின் வர்க்க ஏற்றத்தாழ்வு ஏற்பட்டதென்ற கருத்தை ஆசிரியர் மறுதலித்து அதற்கான ஆதாரங்கள் பலவற்றை முன்வைத்துள்ளார். ஐரோப்பியர்களின் உலகளாவிய ஆதிக்க வாஞ்சையும் படையெடுப்பும் ஏனைய கண்டங்களின் வாழ்க்கைமுறையை வெகுவாகப் பாதித்து நில உடமையாளர்களை வலுப்படுத்தியது என்கிறார் நூலாசிரியர். அதுவே சுரண்டலுக்கான அடிப்படையாகவும் அமைந்தது. நிலவுடைமைக்கான பத்திர முறையை ஆசிய நாடுகளிலும் அறிமுகப்படுத்திய ஐரோப்பியர். ஆனால் அதற்கு முன்னரே திணையினை அடிப்படையாகக் கொண்ட இனமரபுக் குழு முறைமை தமிழ் சமூக அமைப்பில் காணப்பட்டுள்ளது. சீன, அரபுச் சமூகத்திலும் இனமரபுக்குழு விலக்கப்பட முடியாத தொன்றாக நிலைபெற்று அவற்றின் வழி ஆசிரியச் சமூகங்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தியச் சமூக அமைப்பில் சாதிய அடிப்படையிலான குழுக்கள் கூடி அந்தவகையில் தோன்றி வளர்ந்துவருகின்றமை கண்கூடு. இவை மட்டுமன்றி ஐரோப்பிய சமூகத்தின் உழைப்பு, மொழி, கல்வி என்ற போக்கு தொழில்நுட்ப மேலாண்மையை அடியொற்றியதாகக் காணப்பட்டிரு கின்றது. திணை மரபின் ஏற்றத்தாழ்வுகளோடு பயணித்த ஆசிரியச் சமூகத்தில் இஸ்லாத்தின் எழுச்சி அறிவுத் தேடலுக்கான ஆர்வத்தை விசாலித்திருந்தது. அதே வேளை ஐரோப்பிய சமூகத்தில் புதிய முதலாளித்துவ வர்க்கத்தின் கட்டமைப் பில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. குறிப்பாக மதச் சார்பற்ற அரசியல், சமூக, பண்பாட்டு நியதிகளை வளர்த் தெடுப்பதில் கவனம் செலுத்தும் போக்கு காணப்பட்டது. ஆனாலும் முதலாளித்துவத்தின் எழுச்சிக்கு தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து ஆகிய வற்றின் தவிர்க்கப்பட முடியாத நிலைமை அவற்றினைக் கற்றுக் கொண்டு தனதாக்கும் ஆர்வத்தை ஐரோப்பிய சமூகத்தில் ஏற்படுத்தியிருந்தது என்கிறார். சீன மற்றும் அரபுச் சமூகம் மொழி மற்றும் கல்வியில் காட்டிய ஆர்வ வீச்சு தொய்வடையும் நிலையை எட்ட ஐரோப்பிய சமூகத்தில் இவற்றினை கற்பதில் வீரியம் காட்டப்பட்டது. வணிகத்தை சந்தை வாய்ப்புகளை விருத்தி செய்வதற்கான மூலோபாயமாக வும் இது பார்க்கப்பட்டது.

இவற்றின் பின்னணியில் ஐரோப்பாவில் நீராவி இயந்திரம், தொலைத்தொடர்பு சாதனங்கள் உட்பட பலவேறு தொழில்நுட்ப சாதனங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. இவற்றின் தொடர்ச்சியாக உலகளவில் பலவேறு தொழில்நுட்ப சாதனங்களை ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களே கண்டுபிடித்து பெரும் புரட்சியை ஏற்படுத்தினர். அவர்களிடத்தில் புத்தாக்க சிந்தனையில் பேரார்வம் ஏற்பட்டிருந்தது வெளிப்படை யானது. இந்நிலையில் அவர்கள் கல்வி முறையிலும் பலவேறு மாற்றங்கள் ஏற்படலாயின. இத்தொழில் நுட்பப் புரட்சி அவர்களின் போர் முறைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தி பல நாடுகளுக்குப் படையெடுத்து வெற்றிகொள்ளும் ஆர்வத்தைத் தூண்டியது எனலாம். அதேவேளை விவசாய உற்பத்தி முறையிலும் தொழில் நுட்ப சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு உபரி உற்பத்தியை அதிகரித்து சந்தைக்கான தேடலை நிர்ப்பந்தப்படுத்தியது. மறுபுறத்தில் தொழில்நுட்ப சாதனங்களை இயக்க வல்லவர்களை உருவாக்கும் கல்வி முதன்மைப்படுத்தப்பட்டு அவர்களின் உழைப்புக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டது. ஆகவே தொழில்நுட்ட வளர்ச்சி ஐரோப்பிய சமூகத்தில் உழைப்பிலும் படிப்பி லும் மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதை தெளிவு படுத்துகின்றது. இப்பின்னணியில் மொழிப் பரம்பலி லும் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஸ், ஜெர்மன் மொழிகள் உலகளவில் ஆதிக்கத்தைப் பெறலாயின. அதிலும் குறிப்பாக காலணித்துவ ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளில் ஆங்கிலம் கனதியாக செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது. அதேவேளை அந்நாடுகளில் புழக்கத்தி லிருந்து மொழிகளை கற்பதிலும் பரப்புவதிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாதுகாப்பதிலும் ஆர்வம் ஏற்பட்டிருந்தமையையும் மறுக்க முடியாது. ஆகவே ஐரோப்பிய சமூகத்தில் தொழில்நுட்பத்தின் வழி உழைப்பிலும் அதன்வழி கல்வியிலும் மொழியிலுங்கூட மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பது தெளிவு.

ஏகாதிபத்திய - முதலாளித்துவ - சுரண்டல் எதிர்ப்புகள் உலகளவில் வெளிப்படத் தொடங்கின. மூலதனத்தின் பெரும் பகுதியும் தொழிற்சாலைகளும் ஒரு சிலரினால் கையகப்படுத்தப்பட்டன. இவற்றுக்கு எதிரான புரட்சியை ஏற்படுத்துவதில் ஏங்கெல்ஸ் அதி அக்கறை காட்டினார். தொழிலாளர் புரட்சிக்கு வித்திடும் கருத்துகளைப் பரப்பினார். முதலாளித்து வத்துக்கு எதிரான குரல் மேலெழத் தொடங்கி பொதுவுடைமைக் கருத்துகள் பரவலடைந்தன. முதலாளித்துவம் சூழலுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் அறிஞர்கள் பலர் கருதினர். அவர்களது கருத்துகள் பலரதும் கவனத்தைப் பெற்றன. எனினும், மார்க்சியக் கொள்கையைப் பின்பற்றிய பிற்பட்டவர்கள் சூழலியல் குறித்து அக்கறை குன்றியவர் களாக அல்லது அக்கறையற்றவர்களாகக் காணப் பட்டனர். ஆனாலும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும் அதன்வழி தொழிற்சாலைகளின் பெருக்கமும் உலகள வில் சூழலியல் தொடர்பான அக்கறை அதிகரிக்கச் செய்திருந்தது. இந்நிலைமைகள் கல்வியில் ஏற்படுத்திய தாக்கங்கள் எவ்வாறிருந்தன என்பதை சீனா, சோவியத் ஒன்றியம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பொதுக் கல்வி, சுய கல்வி, கூட்டாகக் கற்றல், உழைப் பில் ஈடுபட்டவாறே கற்றல், மூளை உழைப் பாளர்களை உருவாக்கல் போன்றவை வலுப்பெற்றன. இவற்றோடு இணைந்த வகையில் பெண்ணை வீட்டுக்குள் அடக்கி வைத்திருப்பதற்கு எதிரான கருத்துநிலைகளும் வலுப் பெறலாயின. இவை பெண் விடுதலை, பெண் கல்வி, பெண் தொழிலாளர்கள் என்ற வகையில் விரி சிந்தனையை ஏற்படுத்தின.

இத்தகைய போக்குகளின் மத்தியில் சூழல் சார்ந்த விடயங்கள் கவனிப்பற்றுப் போயின என்பதை ஜான் பெல்லமி ஃபாஸ்டர், ஏங்கெல்ஸ், மார்க்ஸ், சேகுவேரா போன்றோரது கருத்தியல்களினூ டாக ஆசிரியர் முன்வைத்துள்ளமை மிக முக்கியமான விடயமாக அமைகின்றது.

முதலாளித்துவப் பின்னணியில் போக்குவரத்து, தொடர்பாடல் என்பவற்றின் இணைவால் தோற்றம் பெற்ற நவீன சமூகத்தில் உழைப்பும் மற்றும் கல்வியும் எவ்வாறு இணைவு பெற்றுள்ளன என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். குறிப்பிடப் பட்ட உழைப்பு மற்றும் கல்வி ஆகியவற்றிடையேயான இணைவு கருத்தியல் அடிப்படையில் பாரியளவில் இணையவில்லை எனினும் தொழில் கல்விக்கான கேள்வி அதிகரித்திருந்தது. உலக மயமாதலின் (Globalisation) செல்வாக்கினால் கல்வியும் வணிகப் பண்டமாக மாற்றம் பெற்றது. பொறியியல், மருத்துவம், கணினி, தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்ற துறைகளுக்கான கேள்வி அதிகரிக்க கல்வியும் அவற்றை நோக்கியே மடைதிருப்பப்பட்டன. உழைப்பை நோக்கிய கல்வியாக மாற்றம் பெற்றது மட்டுமன்றி உலகளவில் ஆங்கில மொழியே இவற்றுக்கான ஊடகமாக வலுப்பெறத் தொடங்கியது. இத்தகைய சூழல் ஏனைய பல மொழிகளின் இருப்புக்கு குந்தகமாக அமைந்து விட்டமையையும் சுட்டிக் காட்டியுள்ளார். உலகமயமாதல் கருத்தியல் மேலைத்தேச அல்லது வளர்ச்சியடைந்த நாடுகளின் துரித வளர்ச்சிக்கு வித்திடுவதாகவும் ஏனைய நாடுகளை துருவமயமாதல் (Polarisation) என்னும் அபத்தத்துக்குள் தள்ளப்படு வதாகவும் பலர் எடுத்துரைத்தனர். இதனால் உலகமய மாதல் கருத்தியல் காலாவதியாகும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளதையும் உணரமுடிகின்றது. மூன்றாம் உலக நாடுகளின் தாய்மொழிக் கல்விக் கொள்கை வலுவிழந்து போதல், மாணவர் மையக் கல்வி கொண்டாடப்படுதல், மாணவர்களது தனியாள் வேறுபாடுகளைக் கவனத்திற் கொள்ளல் என கல்வியில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் உழைப்பால் ஏற்பட்ட மாற்றங்கள். இவை மொழி தொடர்பான விடயத்தில் கனதியான தாக்கத்தைச் செலுத்திவருகின்ற பின்னணியில் இந்நூலின் பார்வை விரிந்து செல்கின்றது.

உழைப்பு மொழி கல்வி என்னும் நூல் தொன்மைச் சமூகத்தில் மனித தோற்றம், கூட்டு வாழ்க்கையின் தேவைப்பாடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உழைப்பு எவ்வாறு காணப்பட்டது என்பதையும் அதன்வழி மொழி எவ்வாறு தோன்றி வளர்ந்தது என்பதையும் மொழிவழி கல்வி எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதையும் விளக்குகின்றார். கீழைத்தேச - குறிப்பாக ஆசிய சமூகத்தில் திணையை அடிப்படை யாகக் கொண்டு உழைப்பு, சுரண்டல், மேலாதிக்கம் என்பன எவ்வகையில் மாற்றம் கண்டன என்பதையும் மேலைத்தேச ஆதிக்கம் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியின் பின்னணியில் உலகளவில் முனைப்புப் பெற்றன என்பதையும் அவற்றின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதனையும் இந்நூலினூடாக பயணிக்கும்போது விளங்கிக் கொள்ளலாம்.




நுனிப்புல் மேய்தலன்றி ஆழமான வாசிப்புக்கேற்ற கருத்தாழ மொழியைக் கையாண்டு செல்வது ஆசிரியரின் மொழிதல் பற்றி ஆளுமை யைக் காட்டிநிற்கின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்கோட்பாட்டை வெறும் இலக்கிய இலக்கண விவகாரமாக மட்டுப்படுத்திவிடாமல் சமூக இயக்கச் செல்நெறியோடு அதனைப் பொருத்திப் பார்ப்பது அவசியமென பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டதுபோல சாதிய மேலாதிக்கத்தினாலும் பேரினவாதத்தாலும் உலக மேலாதிக்க சக்திகளாலும் ஒடுக்கப்படுகின்ற இனங்கள் - தேசங்களின் விடுதலைக்கு ஒரு புதிய பரிமாணத்தை இலங்கைத் திணை அரசியலில் வர்க்கப் போராட்டம் என்ற நூலில் கலாநிதி ந. இரவீந்திரன் அவர்கள் முன்வைத்துள்ளார். அந்நூல் குறித்த சில குறிப்புகளை இக்கட்டுரையில் நோக்குவோம்.





பல்வேறு வர்க்கங்களை ஒன்றுதிரட்டியவாறு சாதி தேசம் எனும் முழுச் சமூக சக்திகளது நலன்களை வெற்றிகொள்ளும் அதேவேளை உழைக்கும் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்கிப் பாட்டாளி வர்க்கச் சிந்தனை வழிகாட்டலுடன் சமூக மாற்றத்துக்கு அனுசரணையாக அமையும் வகையில் சாதி தேசிய இன விடுதலைகளை வழிநடாத்திச் செல்வது விடுதலைத் திணை அரசியலாகும். இதனை இந்நூலில் எட்டு இயல்களில் எடுத்துக்காட்டியுள்ளார்.

இதன் முதலாவது இயலாக அமைவது **இன்றைய உலக நிலவரமும் இலங்கை அரசியலும்** என்ற பகுதியாகும். யாழ்ப்பாண வாழ்க்கைமுறையானது இலங்கையைப் பொறுத்தவரையில் குடியேற்ற காலம்முதல் கட்டமைக்கப்பட்டதாக அமைந்துள்ளது. சிங்கப்பூர் பென்சனியர், மணியோடர் பொருளாதாரம், அதற்குப்பின்னர் டொலர்மீதான நாட்டம் என அரச உத்தியோக நாட்டமும் செயற்பாட்டு வேகமும் வெளித்தோற்ற மாற்றமாக இருந்தாலும் அடிப்படை மனப்பாங்கில் சாதிய வாழ்வுமுறை நீடிக்க வேண்டும் என்ற பழமைவாதக் கொள்கையும் மனப்பாங்கும் கூடவே இருந்து வந்துள்ளது.

# கலாநிதி ந. இரவீந்திரனின் இலங்கைத் திணை அரசியலில் வர்க்கப் போராட்டம் சில குறிப்புகள்

■ கலாநிதி சு.குணேஸ்வரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஆட்சியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான இடதுசாரிக் கூட்டு அரசாங்கம், ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, பின்னர் இளைஞர் இயக்கங்களின் எழுச்சி, இந்தியா அவர்களைக் கையாண்ட விதம் ஆகியவற்றை இந்தப் பிரிவில் விரிவாக எழுதியுள்ளார்.

சோவியத் யூனியன் உடைவுடன் BRICS அமைப்பு அமெரிக்காவின் ஒற்றை உலக ஆதிக்கத்திற்குச் சவாலாகியுள்ளமையை மாறிவரக்கூடிய உலக சமநிலைகளையும் பிரித்தானியா இலங்கையைக் கையாண்ட விதம், இந்தியா மலையக மக்களுக்கு ஊடாக இலங்கையைக் கையாள்வதற்கு எடுத்த முயற்சிகள் ஆகியனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான கூட்டரசாங்க ஆட்சியின்போது ஏகாதிபத்திய உடமைகள் பலவற்றை தேசிய உடமையாக்கியமை, பொதுச்சேவைகளை அரசுடமையாக்கியமை, தேசியக் கல்வியில் புதிய பாதையை அறிமுகப்படுத்தியமை, சுயசார்புப் பொருளாதாரத்தை முன்னெடுத்தமை ஆகியவை காரணமாக முற்போக்குப் பாத்திரத்தை வகித்ததாகப் பாராட்டப்பட்டது என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். இதன் பயன்கள் மக்களிடம் குறைந்த அளவிலேயே எட்டியதால் 1977 இல் ஜே.ஆர் ஜெயவர்த்தனா தலைமையிலான ஐ.தே.க பெரும் வெற்றியீட்டியது. அதனால் 80 இல் திறந்த பொருளாதாரக் கொள்கையை ஜே.ஆர் அரசு ஆரவாரத்துடன் ஏற்றுக்கொண்டது.

ஜே.ஆர் அரசின் அமெரிக்க நாட்டத்தில் அதிருப்தி கொண்ட இந்திராகாந்தி, ஜே. ஆர் ஜெயவர்த்தனாவுக்கு நெருக்கடியைக் கொடுக்கும் நோக்கத்துடன் தமிழீழ அமைப்புகளுக்கு இந்தியாவில் பயிற்சிக் களங்களை ஏற்படுத்திக் கொடுத்தார். இவ்வாறான தவறான இராஜதந்திரக் கையாளுகைகளினால் ஐ.தே.க அரசு இன யுத்தம் ஒன்று வலுப்படுவதற்கு இடமேற்படுத்தியது. இதனால் வர்க்க அரசியல் சார்ந்து இயங்கி வந்த இலங்கை வரலாற்றை இனத்துவ சக்திகளிடையிலான மோதலோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் மாற்றுத் தடத்திற்கும் ஆட்படுத்திக் கொண்டது. இவ்வாறாக 70களின் முடிவுவரை நவீன அரசியல் வர்க்க சக்திகளிடையான மோதலையே பிரதானப்படுத்தியிருந்தது.

தொடர்ந்து வருகின்ற மூன்று இயல்களிலும் தேசிய இன முரண்பாடுகள், மத அடிப்படை வாதங்கள், சாதியம் ஆகியவற்றைப் பற்றி எழுதுகிறார். இவை சார்ந்த அடையாள மேலாண்மை நாட்டங்களின்போது அருகில் உள்ள அல்லது எதிர்நிலையில் உள்ள சக்திகளோடு ஒன்றுபடுவதற்கு இருந்த வாய்ப்புகள் மறுக்கப்பட்டு தனிமைப்பட்ட வரலாற்று அனுபவங்கள் கூறப்படுகின்றன. தமிழ் சிங்கள முஸ்லிம் மலையக உறவுநிலைகளும் அவற்றில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களும் இங்கு கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளன.

அவ்வகையில் **தேசிய இன முரண்பாடுகள் வலுத்தமை** பற்றிய இரண்டாவது இயலில் தமிழ் இடதுசாரிகள் ஆரம்பத்தில் தம்மை இலங்கைத் தேசத்துக்குரியவர்கள் என்பதாகவே புரிந்து கொண்டு வாழ்ந்தனர். சிங்கள தமிழ் முஸ்லிம் மலையக மற்றும் சிறுபான்மையின மக்கள் மத்தியிலிருந்து பலரும் மார்க்சிய வழிகாட்டலுடன் ஒன்றுபட்டுப் போவதற்கான இலட்சிய உணர்வுடன் இடதுசாரிக் கட்சிகளில் இணைந்திருந்தனர். இன முரண் யுத்தமாகக் கூர்மைப்பட்ட தொடக்க நிலையிலே இலங்கைத் தேசியத்துக்குள் தமக்கான சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட வேண்டிய தமிழினத் தேசியம் உள்ளது என்பதை உணர்ந்துகொண்டனர்.

உலக நிலவரத்தை மீட்டுப்பார்ப்பது என்ற அம்சத்தில் சோவியத் யூனியனின் தலைமையிலான பல தேசங்கள் இணைந்து சோசலிச முகாம் உருவாகியிருந்தமை, மக்கள் சீனமும் சோசலிச முகாமில் வலியதொரு சக்தியாக மிளிர்ந்தமை ஆகியன 70களில் எமது நாட்டு கொம்யூனிஸ்டுகளை உத்வேகப்படுத்தின. இந்நிலையில் உள்நாட்டில் முதலாளித்துவத்திற்கு எதிராக அவர்கள் போராடிய அதேவேளை இன்னும் அதிகமாகவே ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போர்களங்களையும் விரிவுபடுத்தினர்.

சோவியத் இராணுவம் ஆப்கானிஸ்தானில் வீழ்ச்சியைத் தழுவியதைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோசலிசத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க ஆளுமை பெற்றிருக்காத நிலையிலே முதலாளித்துவப் பாதையை வரித்துக் கொண்டன. அமெரிக்க மேலாதிக் கம் உலகமயமாதலில் மாற்றம் ஒன்றே மாறாதது என்று கூறிக்கொண்டு தனது பாணிக்குரியதாக உலகை வடிவமைக்க முயன்றது.

ஒடுக்கப்படுகின்ற இனங்களுக்கு இடையில் ஆரம்பத்தில் புரிந்துணர்வு இருந்தாலும் அவை காலப்போக்கில் சிதைக்கப்பட்டிருக்கின்றன. 70களில் மூவின மக்களும் ஊடாடி வாழ்ந்தமையை சுபைர் இளங்கீரனின் நாவல்கள் பதிவுசெய்துள்ளமையையும் ஆசிரியர் உதாரணங் காட்டுகிறார். அதுமட்டுமன்றி அரசியல் சமூக ரீதியில் அளுத்கம, அம்பாறை முஸ்லிம்கள் மீதான கலவரத்தின் பின்னர் சிங்கள மக்கள் அவற்றுக்கு எதிரான ஆரோக்கியமான கருத்தாடலை முன்வைத்தமை, கண்டிக்கலவரம் தொடர்ந்து பரவவிடாது தடுத்தமை, வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தமது அயலவரது உதவிகளைச் சிலாகித்துப் பேசியமை முதலான சிலவற்றை ஆசிரியர் பொருத்தம் கருதி உதாரணங் காட்டுகிறார். ஆனால், இலங்கையில் இனங்களுக்கு இடையில் பகைமையை மூட்டி தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்தும் செயற்பாட்டைப் பேரினவாதம் செய்தது. முத்தரப்பிலும் (சுதந்திரக் கட்சி, ஐ.தே.க, பொதுஜன ஐக்கிய முன்னணி) இருந்த அதிகாரக் கும்பல் தமது ஆதாயத்தின் பொருட்டு இன நல்லிணக்க வாய்ப்பை நச்சுவட்டமாக்கிச் சீரழித்தன. குறைந்த பட்சம் ஒடுக்கப்படுகின்ற இந்தத் தேசிய இனங்களுக்குள் புரிந்துணர்வும் ஒன்றுபடுவதற்குரிய வாய்ப்பும் தொடர்ந்து வளர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

**மத அடிப்படைவாதங்கள்** என்ற பிரிவில் நிலப் பிரபுத்துவ சமூக அமைப்பு அரசைக் கடவுளின் பிரதி நிதித்துவமிக்க சக்தியாகச் சித்திரித்தது. மூலதன அபகரிப்புக்கு உள்ளாக்கப்பட்ட பின்தங்கிய நாடுகளில் மக்களின் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் நீடிக்கவே செய்தன. நிலத்தோடு பிணைக்கப்பட்ட கடவுளுக்குப் பிரதியீடாக மூலதனத்தோடு பேரப் பேச்சுக்கு உட்பட ஏற்ற கடவுளையுடையதாக மதங்கள் தம்மைப் புனரமைத்து இருப்பைத் தக்க வைத்துள்ளன. ஆனால் சோவியத் யூனியன் வீழ்ச்சியைத் தழுவிய போதும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப் பட்டிருந்தபடியால் அங்கு மதத்திற்கு எந்த வடிவினையும் வழங்கவேண்டிய தேவை இருக்கவில்லை. தலிபான் உள்ளிட்ட முஸ்லிம் அமைப்புக்கள் இஸ்லாமிய அரசு களை நடைமுறைப்படுத்த முற்பட்டபோது இஸ்லாமிய அடிப்படை வாதத்தை இனங்காட்டியது, வர்க்கப் போர்க் களமும் உலக அரங்கில் பலவீனப்பட்டபோது இனி பண்பாட்டு மோதல்களே உலக அரங்குக்குரிய நிகழ்ச்சி நிரலாக மாற்றம் பெற்றது. இஸ்லாமிய அடிப்படை வாதத்தில் பிளவுபட்ட மார்க்கப் பிரிவினரிடையேயான மோதல்கள் இவற்றால் அரபுலகிலும் பாகிஸ்தானிலும் ஷியா - சன்னி முஸ்லிம் பிரிவினரின் மோதல்கள் நடைபெற்ற வகையினையும் காட்டுகிறார்.

அவசியப்படுகின்றபோது மக்களைக் கொன றொழித்தேனும் உலக முதலாளித்துவச் சுரண்டலைப் பேணவேண்டும் என்பதனை மேலாதிக்க சக்திகளின் விருப்புக்கு உதவும் கைங்கரியத்தையே உண்மையில் அடிப்படைவாதிகள் செயற்படுத்துகின்றனர்.

ஒரு பக்கம் உலக முதலாளித்துவம் தன்னை நிலைநிறுத்தும் முயற்சியாக அடிப்படை வாதத்துக்கு எதிரான பண்பாட்டுத் தாக்குதலையும் பயங்கரவாத ஒழிப்பு யுத்த முன்னெடுப்பையும் செயற்படுத்தியபடி மறு பக்கம் அவரவர் புரிதலுக்குரிய சரியான இஸ்லாத்தை நிலை நிறுத்தும் பண்பாட்டு மோதலும் பயங்கரவாத முன்னெடுப்புகளுமாக அண்மைக்கால உலக இயக்கமாக அமைந்திருக்கிறது.

அமெரிக்க மேலாதிக்கம் இஸ்லாமிய எதிர்ப்பை உலகளவாக்கியபோதும் மறுபுறத்தில் இந்தியா- பாபர் மசூதி இடிப்பு, புலிகளினால் முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டமை, பௌத்த பேரின மேலாதிக்கத்தால் ஏற்படு கின்ற காரியங்கள் ஆகியவற்றை பௌத்தம் மக்களின் மதமும் பேரினவாதமும் என்ற பகுதியில் எடுத்துக் காட்டுகிறார்.

முப்பது வருட யுத்தத்தில் மூன்று இனங்களும் பாதிக்கப்பட்டு உள்ளன. மற்றைய இனத்தின் மீதான பாதிப்புகளை ஒவ்வோர் இனமும் நிகழ்த்தியும் உள்ளன. தத்தமது தரப்பின் தவறுகளைச் சுய விமர்சனத்துக்கு உள்ளாக்காமல் மற்றவர் மீதான தவறுகளையே தொடர்ந்து பேசுவோமாயின் பகை மறப்பும் நல்லிணக்க மும் எவ்வாறு சாத்தியமாக இயலும்? என்ற வினாவை யும் எழுப்புகிறார்.

**சாதியம்** என்ற பகுப்பில் ஏகாதிபத்தியப் பிடியி லிருந்து விடுதலைப் போராட்டத்தில் சிங்களத் தேசியம் ஒருங்கிணைந்த சக்தியாக ஒன்றுபட்டு இயங்க இயலா பௌத்த சிங்கள மக்களிடையேயான தடையாக இருந்தது. ஆதிக்க சாதிப் பிரிவினர் தம்மைக் கடவுளின் பிரதிநிதிகளாகச் சித்திரித்து ஏனைய சாதிப்பிரிவுகளில் தாழ்ந்து வரும் புனித மட்டப் படிநிலைகளை வரை யறுத்தன.

சாதி என்பதற்கு ரொமிலா தாப்பரின் கருத்தை மேற்கோளாகக் கொண்டு "சமமற்ற உரிமைகளுடன் திருமண விதிகள். உணவுமுறை, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் விலக்குகள் கடைப்பிடிக்கப்படுவதும் தமது குடியிருப்புப் பகுதிக்குள் பிறர் இடம்பெற வாய்ப்பளிக்காத தடைகளுடனும் பிரிக்கப்பட்டு பிறப்பின் அடிப்படையில் படிநிலை வரிசைப்படுத்தப்பட்ட குழுக்களே சாதிகள்" எனக் குறிப்பிடுகின்றார்.

பௌத்த சமூகங்களிலும் படிநிலைகளில் ஏற்றத் தாழ்வு இருந்துள்ளது. சிங்களச் சமூகத்தில் ஆதிக்க சக்தியினரான முதலாளித்துவ உருவாக்கத்துடன் எழுச்சி "கராவ" சாதியினருக்கு அரசியல் ஆதிக்க முன்னுரிமை வழங்கி விடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வும் குறிப்பிடப்படுகின்றன. இவற்றை குமாரி ஜயவர்த்தனா, சம்ஸ் ஆகியோரின் கட்டுரைகளை ஆதாரமாகக் கொண்டு காட்டுகிறார். இதற்கூடாக சிங்கள தேசம் ஒரே சக்தியாக அணி திரண்டு இருக்க வில்லை. மாறிமாறி அதிகாரத்திற்கு வந்த பெரு முதலாளி வர்க்க ஐ.தே.க தேசிய வர்க்க சுதந்திரக் கட்சி என்பவற்றில் பல்வேறு சாதிப்பிரிவுகளின் முதலாளித்து வப் பிரிவினர் தமது நலன்களை வெற்றி கொண்டபோது புறக்கணிக்கப்பட்ட "கராவ" தேசிய நலன் ஜே.வி.பி தலைமையில் ஆயுதமேந்திய போராட்டத்தை முன் னெடுக்கும் அணியாக பகை முரண்பாட்டைக் கொண்டிருந்தது.

இந்நிலையிலேயே தத்தமது வர்க்க நலன்களை வெற்றி கொள்ள முனையும் அச்சக்திகள் ஒவ் வொன்றும் ஏனைய தேசிய இனங்களைக் கையாள்வ தில் ஒரே பண்பைக் கொண்டிருக்கவில்லை. அனைத்துத் தளங்களிலும் ஆதிக்கத்தை இறுக்கமாக வலுப்படுத்தியிருக்கும் "கொவிகம" சாதியினரது அதிகாரங்களில் சமபங்கெடுக்கும் ஆற்றலுடனேயே "கராவ" சிங்கள தேசிய எழுச்சி அமைந்தது. இது பற்றியும் இப்பிரிவில் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

சாதிவாதம், மதவாதம், இனவாதம் என்பன மக்களை ஏய்த்துப் பிழைக்கும் சக்திகளின் புகலிடம் என்ற தொடக்கத்துடன் **அடையாள அரசியல்** என்ற பகுதி ஆரம்பிக்கின்றது. அடையாள அரசியல் குறித்த தெளிவைப் பெறுவதும் இவை தொடர்பில் மார்க்சிய வழிகாட்டல் எத்தகையது என இனங்காண்பதும் அவசியமானது எனக் குறிப்பிடுகிறார்.

தனது அணிக்குரிய நலனை வென்றெடுப்பதைக் குறிக்கோளாகக் கொண்டதே அடையாள அரசிய லாகும். தத்தமது அடையாள மீட்புக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாண்மைக்கும் முற்படுதலாக அரசியல் இயக்கம் தொடரும் பட்சத்தில் மக்கள் விடுதலை எட்டப்படாமற் போவதுடன் இருப்பதையும் இழப்பதற்கான நிலைக்கு மாறக்கூடும்.


மார்க்சியம் அனைத்துவகை ஒடுக்குமுறை களையும் தகர்த்து சுரண்டலற்ற சமூகத்தைப் படைக்கும் சிந்தனைமுறை என்பதாகப் புரிந்து கொள்வது அவசியம். இவ்விடத்தில் மார்க்சிய கருத்தியல், பின்நவீனத்துவக் கருத்தியல் ஆகியவற்றின் முரண்பாடுகள் பற்றியும் குறிப்பிடுகிறார்.

70களில் இடதுசாரிக் கட்சிகளின் பங்கேற்புடன் கூட்டரசாங்கம் கொண்டுவந்த முதலாம் குடியரசு யாப்பு முற்போக்குக் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமது ஏகாதிபத்திய சார்பைத் தமிழ்த்தேசியத் தலைமை முன்னிறுத்தியது. பின்னர் ஐ.தே.க அரசாங்கம் மாவட்ட சபையைத் தந்தபோது அதனை ஏற்று இணக்க அரசியலை முன்னெடுக்கத் தலைப்பட்டதுமுதல் தற்போது வரை தொடர்வதையும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழக் கனவோடு எதிர்ப்பு அரசியலை முன்னெடுப்பவர்களும் பேரினவாதிகளோடு இணக்க அரசியலை முன்னெடுப்பவர்களும் இன்றைய அரசியல் செல்நெறியைப் புரிந்து கொள்ளவில்லை. எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்து மக்களது வாழ்வாதார நலன் களுக்கு எதனையும் செய்யாத தமிழ்த்தேசியர்களை மக்கள் ஆதரிப்பது ஏமாளிகள் என்பதால் அல்ல. பேரினாவாதத்தை எவ்வகையிலும் மன்னிக்க இயலாது என்பதனால் ஆகும். அடிப்படையில் எதிர்ப்பு இணக்க அரசியல் இரண்டையும் மக்கள் நிராகரிக்கும் மனப் பாங்குடனேயே உள்ளனர். எனவே, விடுதலையையும் வாழ்வாதார விருத்தியையும்வெற்றிகொள்ள வகைசெய்வ தாக மக்கள் அரசியல் அமையவேண்டும் என்ற கருத்தை முதன்மையாக இந்நூலில் வலியுறுத்தியிருக்கிறார்.

தொடர்ந்து வருகின்ற **திணை அரசியல்**, உலகப் புரட்சி செய்தக்க அல்ல செய்தலின் கேடுகள் ஆகிய இயல்கள் அடையாள அரசியலைக் கடந்து எத்தகைய மேலாதிக்க மனநிலைக்கும் ஆட்படாது விடுதலையை வென்றெடுக்க ஒன்றுதிரட்டிப் போராடும் திணை அரசியலுக்கான வடிவம் பற்றியும் ஏற்கனவே இயங்கி வருகின்ற மேலாதிக்க திணை அரசியல் பற்றியும் பேசுகின்றன.

சாதி, இனம், மதம், நிறபேதம், தேசம், பாலினம் என்பவற்றில் தமது அடையாளம் சாராத பிறர் தமது அக்கறைக்கு அப்பாற்பட்டவர் அல்லது எதிரி எனும் நிலைப்பாட்டுடன் இவற்றில் ஏதாயினும் ஒன்றின் அடிப் படையில் முன்னெடுக்கப்படும் அடையாள அரசியல் தனது அணிக்குரிய நலனை வென்றெடுப்பதைக் குறிக் கோளாகக் கொண்டு இயங்கும். வர்க்க அணிதிரட்டல், சாதி, மதம், இனத்தேசியம் எனும் அடையாளத்துக் குரியதான நலன்களைப் பேணும் வகையில் அடையாள அரசியலுக்கான அணிச்சேர்க்கை என்பதாக சுதந்திரத் திற்கு முன்னும் பின்னருமான இயங்குநிலை இருந்திருக்கின்றது.



நாடு சுதந்திரம் அடைந்தபின்னர் தமிழீழத் தேசத்தில் பேரினவாதத்தால் ஆக்கிரமிப்புகளும் ஒடுக்குமுறைகளும் நிகழ்ந்தன என்னும் தமிழின அடையாள அரசியல் இதுவரையான அனுபவங்களில் இருந்து விடுதலைக்கான திசைமார்க்கத்தில் அரசியலை முன்னெடுக்கவில்லை என்று குறிப்பிடுகிறார்.

கூட்டமைப்பினர் தமிழ்த்தேசிய அடையாள அரசியலை முன்னெடுப்பதை விடவும் சிங்களத் தேசியத் தினுள்ளே செயலாற்றும் வர்க்கப் போராட்டத்தைக் கவனத்தில் எடுத்து சிங்களத் தேசிய நலனுக்கு விரோதமானதும் ஏகாதிபத்திய நலன் பேணுவதுமாகிய மேலாதிக்கவாத ஐ.தே.கவுடன் மிகுந்த ஆர்வ மேலீட்டுடன் ஐக்கியப்பட்டுக் கொள்கின்றனர். தமிழ்த் தேசியத்தின் மேலாதிக்கத் திணை அரசியல் போக்கி னின்றும் வேறுபட்ட வகையில் ஜே.வி.பியின் திணை அரசியல் குணாம்சம் செயற்படு கிறது. பொருளா தார நெருக்கடிகளுக்குத் தீர்வு கண்டு விட்டால் இனப் பிரச் சினை தீர்ந்து விடும் என ஜே.வி.பியும் எண்ணுகிறது. இதனையே தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தேடுவதன் வாயிலாகவே பொருளாதார விருத்தியை எட்ட ஏற்றதாக ஆட்சியைக் கைப்பற்ற இயலும் என்ற புரிதல்கூட இன்னமும் இடதுசாரிகளுக்கும் கைவர வில்லை.

ஜே.வி.பி தனது வலுவான அடித்தளமாகிய "கராவ" சாதியினர் தலைமையில் அரசியல் அதிகாரம், உயர்கல்வி, வேலைவாய்ப்பு, என்பவற்றில் புறக் கணிப்பை சந்தித்தவர்களது எழுச்சியின் ஊடாகத் தொடர்ந்தும் போராடியாவாறு இருந்தாலும் அது ஒரு போதும் தன்னைச் சாதி அடித்தளம் சார்ந்த அமைப்பாக வெளிப்படுத்திக் கொண்டதில்லை. இந்நிலையில் மேலாதிக்க சாதியான "கொவிகம"வின் உழைக்கும் வர்க்கம் உட்பட ஐக்கியப்படத்தக்க அனைத்து சக்தி களையும் ஒன்றுபடுத்திப் போராட ஜே.வி.பி முற்படு கின்றது. என்பதை மறுத்துவிட இயலாது.

எனவே, ஆதிக்க சாதி, பேரினவாதம், ஏகாதி பத்தியம் என்பன சுரண்டும் முழுச் சக்திகளாக அமைந் துள்ளன. திணை மேலாதிக்கத்தால் ஒடுக்கப்பட்டு சுரண்டப்படுகின்ற இன்றைய வாழ்முறையைத் தகர்த்து விடுதலைக்கென ஒடுக்கப்பட்ட சாதி தேச சக்திகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடுகின்றபோது ஒடுக்கும் சாதி தேசத்தினுள் செயற் பட்டவாறுள்ள வர்க்கப் போராட்டத்தை மனங்கொண்டு அவற்றிலுள்ள விடுதலை நாடும் தரப்போடு ஐக்கியப் பட்டபடி போராடிச் சமூக மாற்றத்தை வெற்றிகொள்ளும் மார்க்கம் விடுதலைத்திணை அரசியல் என்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

**உலகப் புரட்சி செய்தக்க அல்ல செய்தலின் கேடுகள்** என்ற பிரிவில் இரண்டாம் உலக யுத்தமானது குடியேற்ற வாத ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் தொடர்ந்தும் ஏகாதிபத்திய அபகரிப்புக்கு கட்டுப் பட்டிருந்த நிலையிலே சுதந்திரம் அர்த்தமுள்ளதாக அமையவேண்டும் என்ற விருப்பத்ததை வலுப்படுத்தின. அதற்குள்ளும் போரினவாத ஒடுக்குமுறை புறக்கணிப்பு ஆகியவற்றில் இருந்து விடுபடுவதற்கு ஏற்ற சுயாட்சி அமைப்பு வடிவங்கள் கண்டறியப்படவும் வேண்டும்.

மேலாதிக்க சக்திகள் தமது சுரண்டலைத் தொடர்வதற்கு நாட்டிற்குள் இனமோதல்கள் இருப்பது அவசியம் எனக் கருதி இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்து இருக்கிறாரகள். இந்நிலையிலே சிங்கள இனவாதத்திற்கு எதிராக உருப்படியான ஒரு சிறுகல்லைத்தானும் வீசுவதற்கு சிங்கள இடதுசாரிகள் தயாரில்லாமல் இருப்பது சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு விட்டுக் கொடுக்கும் அம்சமாகவே இருக்க முடியும்

அறுபதாம் ஆண்டுகளின் முடிவுவரை தமிழ்த் தேசியம் சிங்களப் பேரினவாத ஐதேக அரசுடன் இணக்க அரசியலை மேற்கொண்டு வந்தது. நாற்பதாம் ஆண்டுகளில் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் எழுச்சி முதல், அறுபதுகளின் பிற்கூறில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் வரை சாதியத் தகர்ப்புத் தேசியம் முன்னெடுத்த போராட்டங்கள் சமூகப் பாய்ச்சலுக்கு உரிய பிரதான செல்நெறியாக இங்கு வளர்ந்தபடி இருந்தன. எழுபதுகளில் தமிழ்த் தேசியம் எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கத் தொடங்கிய பின்னர் பேரினவாத ஒடுக்குமுறை ஒடுக்கப் பட்ட சாதிகளையும் கொன்றொழிக்கும் நிலைவரை வளர ஆரம்பித்தபோது தமிழின் இரட்டைத்தேசிய மோதல் மௌனித்துப் போக வேண்டியதாயிற்று என்கிறார். இங்கு இரட்டைத்தேசிய மோதல் என்பதன் ஊடாக சிங்கள கொவிகம – கராவ மோதல் 80 களின் இறுதியில் பின்னடைவுக்குள்ளானதைக் குறிப்பிடுகிறார்.

இப்பகுதியில் தமிழ் இடதுசாரிகளின் பங்கு, சாதியத் தகர்ப்புத் தேசியம் முன்னெடுத்த போராட்டங் கள், தமிழ்த் தேசியம் எதிர்ப்பு அரசியலை முன்னெடுக் கத் தொடங்கியமை, பேரினவாத ஆட்சி முறை முதலானவை பேசப்படுகின்றன. இந்நிலையில் மார்க்சியர்கள் திணை அரசியல் வடிவத்தையே பிரயோகிக்க வேண்டும் என்பதனை இக்கட்டுரைத் தொகுதி குறித்துக்காட்டுகிறது, தொடர்ந்து வருகின்ற இறுதி இரண்டு இயல்களும் திணை அரசியலுக்கு பாதகமாகவுள்ள அம்சங்கள் பற்றி ஆராய்ந்து மார்க்சிய வழிகாட்டுதலுடன் விடுதலைத் திணை அரசியலை எவ்வாறு வெற்றிகொள்ள முடியும் என்பதனை விளக்குகின்றன.

**தக்கன பிழைக்கும்** என்ற இறுதிப்பகுதில் பொருளியல் தீர்க்கதரிசனமும் மானுடம் பேணுதலில் கரிசனமும் என்ற விடயத்தைப் பேசியுள்ளார். இன்றைய முதலாளித்துவ சமூக வாழ்முறை இலாபத்தைக் கருத் தாகக் கொண்டது. மனிதாபிமான பிரபஞ்ச ஆத்மார்த்த நலன்கள் எதையும் கருத்திற்கொள்ளாது அவற்றையும் மூலதனமாக்கவும் முதலாளித்துவம் தயங்குவதில்லை. இவ்வகையில் இதயமற்ற ஆன்மாவற்ற மூலதன உலகில் நாம் வாழ்கிறோம் என்கிறார்.

தொடர்ந்த மார்க்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனைகளைக் குறித்துக் காட்டியவர் வரலாற்று மாற்றப்போக்கின் பண்பை உரிய வேகத்தில் கிரகித்துக் கண்டறிந்து நடைமுறையில் ஏற்புடைய மாற்றங்கள் பிரயோகம் பெறாமல் போனதில் உலகின் முதலாவது சோசலிசத் தாயகம் தகர்ந்து போக நேர்ந்தது. மக்கள் சீனம் மிகுந்த தடுமாற்றங்களோடு சோசலிச முன் னெடுப்பை மேற்கொள்ள வேண்டியதாகி உள்ளது.

மூலதன வாய்ப்பைப் பெற்று ஒடுக்கும் தேசங் களாக மேலைநாடுகள் உருப்பெற்று ஏனையவற்றை ஒடுக்கப்பட்ட தேசங்களாகக் கட்டமைத்ததைப்போல விவசாய வாய்ப்பைப் பெற்று முன்னேறிய இனமரபுக் குழுக்கள் ஆதிக்க சாதிகளாகி ஏனைய இனமரபுக் குழுக்களை தொண்டுழியம் செய்து உழைக்கும் சாதி களாக ஒடுக்குமுறைக்கு ஆட்படுத்திய வரலாறு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எமக்குரியதாக இயக்கம் பெறத் தொடங்கியிருந்தது, மருதத்திணை மேலாதிக்கத்தின் வாயிலாக ஏனைய திணைகளை ஆக்கிரமித்து ஒடுக்கியதிலிருந்து வரலாறு தொடங்கப் பட்டது. இதனை வடஇந்தியா, தமிழகம் வடஇலங்கை ஆகிய புவியியற் பிரதேசங்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கிறார்.

தலித்தியவாதிகள் முன்னெடுக்கும் சாதி அரசியல் இனவாதிகளின் தேசியவாத அரசியல் ஆகிய வற்றுகக்கு மாறாக இப்பிரச்சினையை மார்க்சியர்கள் கையாளும்போது திணை அரசியல் எனும் புதிய பரிமாணம் ஒன்றை எட்டவேண்டியுள்ளது.

விடுதலைத் திணை அரசியல் என்பதனூடாக எதிரிச்சாதி என எதையேனும் அழித்தொழிப்பது என்றில்லாமல் அனைத்துச் சாதிகள் மத்தியிலும் உள்ள சமூக மாற்றத்தை வேண்டி நிற்கின்ற வர்க்கப் பிரிவின ரோடு ஐக்கியப்பட்டு ஏற்றத்தாழ்வுச் சமூக முறையைத் தொடர்ந்தும் பேண முற்படுகின்ற சக்திகளுக்கு எதிராகப் பேராடுவதாகவே அமையும். இன்று திரைகடலோடித் திரவியம் தேடியதால் பொருளாதாரத் தீர்க்க தரிசனத்தில் முன்னணியில் இருக்கிறோம். எனவே அடையாள அரசியலுக்குப் பதிலாக விடுதலைத் திணை அரசியலை முன்னெடுத்து மானுடம் பேணுதலே தேவையானது என்பதனை இலங்கைத் திணை அரசிய லில் வர்க்கப்போராட்டம் என்ற நூல் முதன்மையாக வலியுறுத்த முனைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ இ.சர்வேஸ்வரா

# திருக்குறளில் கல்விச் சிந்தனை - சமூக நோக்கில் ஒரு மறுவாசிப்பு ஆய்வூடாக வெளிப்படும் இரவீந்திரனின் சிந்தனை வெளியின் ஆளுமை

அறிமுகம்

இலங்கையின் தமிழ்க் கல்விப் புலத்தின் ஆசிரியர் கல்விப் பரப்பில் நன்கு அறியப்பட்ட ஆசிரிய கல்வியிலாளர் திரு.ந.இரவீந்திரன் அவர்கள். தர்க்காநகர் தேசிய கல்வியியல் கல்லூரியில் நீண்ட காலமாக விரிவுரையாளராக கடமையாற்றி ஓய்வுபெற்றவர். அவரது கல்வியியல் சார் சிந்தனை வெளி தமிழர்களின் பண்பாட்டு மரபுசார் சிந்தனை வெளிக்குள் அதிகம் கரிசனை கொண்டிருக்கின்றது. குறிப்பாக அவர் தமிழ் இலக்கியங்கள் மற்றும் இந்துத்தத்துவக் கோட்பாடுகள் என்பவற்றுக்குள் கல்வியியல் சிந்தனைகளை தேடிக்கொண்டிருக்கும் ஒரு சிந்தனையாளர். தனது தேடலின் வழியாகவும் புதிய சிந்தனாக்கோட்பாடுகள் வழியாகவும் பல நூல்களை பிரசவித்தவர். தனது தேடல்களை நவீனத்துவச் சிந்தனைகளுடன் பொருத்தி மரபுசார் சிந்தனைகளின் பரவலாக்கத்துக்கும் விரிவாக்கத்துக்கும் பங்களிப்புச் செய்பவர் இரவீந்திரன் அவர்கள். அவர் தனது கலாநிதிப்பட்ட ஆய்வுக்காக தெரிவு செய்த தலைப்புத் தான் திருக்குறளின் கல்விச் சிந்தனை- சமூக நோக்கில் ஒரு மறு வாசிப்பு என்பதாகும். அவர் இந்த ஆய்வை சென்னைப் பல்கலைக் கழகத்தில் தஞ்சாவூர் தமிழ்ப் பல் கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்களின் நெறிப்படுத்தலில் 2005இல் பூர்த்தி செய்திருந்தார். ஒரு ஆய்வின் கண்டறிவுகள் அறிவுப் பரவலாக்கம் செய்யப்படவேண்டும் என்பது பொதுவான நடைமுறையாகும். அதற்காக பல்வேறு வடிவங்கள் நுட்பங்கள் பின்பற்றப்படுகின்றன. அவற்றுள் நிலைபேண் தன்மை கொண்ட தலைமை நுட்பம் ஆய்வை ஒரு நூல் வடிவில் வெளிக்கொணர்வது. ஆனாலும் இதில் பல நடைமுறைச் சவால்கள் உண்டு. ஆய்வின் வடிவம் நூலாக்க கட்டமைப்புக்கு பொருந்தி அமைதல் வேண்டும் என்பதற்கு அப்பால் ஆய்வை நூல் வடிவில் பொதுவெளிக்கு ஒப்படைக்கின்ற துணிச்சல் ஆய்வாளருக்கு வாய்க்கவேண்டும். இந்தத் துணிச்சல் இரவீந்திரனுக்கு வாய்த்தமையால் ஒரு பெறுமதியான நூல் தமிழ்க் கல்விப் புலத்துக்கு கிடைத்திருக்கின்றது.

விஞ்சு மற்றும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினரால் 2009ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந் நூல் 175 பக்கங்களை கொண்டது. கலாநிதிப் பட்டக் கற்கைக்கு சமர்ப்பிக்கப்பட்ட





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுக்கட்டுரை பெரிதாக எவ்வித மாற்றங்களும் இன்றி அதற்குரிய கல்வியியல் பண்புகளுடன் நூலாக்கப் பட்டுள்ளது. இதனால் சில சந்தர்பங்களில் ஒரு நூலுக் குரிய அடிப்படைப் பண்புகளில் இருந்து சிறு விலகல் களைக் காண்பித்தாலும் ஆழ்ந்த தேடலுடைய அறிவார்ந்த வாசகச் சூழலுக்கு மிகவும் நேயத்துக்குரிய நூலாக இரவீந்திரனின் திருக்குறளின் கல்விச் சிந்தனைகள் எனும் நூலை வலுவாக பரிந்துரைக்க முடியும். ஐந்து அத்தியாயங்களில் திருக்குறளின் கல்விச் சிந்தனை எனும் தடத்தைப் பின்பற்றி ஒரு நீண்ட அறிவுப் பயணத்தை அவர் மேற்கொண்டிருக்கின்றார். அவரது இந்த நூலுடன் நாமும் பயணிக்கும் போது ஆழமான பல விடயங்களைக் கற்றுக்கொள்ள முடிவதுடன் புதிய சிந்தனைகளுக்கான வெளிகளும் முகிழ்க்கின்றன.

நூலின் (ஆய்வின்) தனித்துவம்

இந்த நூலின் தனித்துவங்கள் என பலவற்றைப் பட்டியலிட முடியும். அவற்றுள் முதன்மையாக கருதத்தக்கது தலைப்பின் உள்ள அழுத்தமான தெளிவு. அதாவது திருக்குறளில் கல்விச் சிந்தனை (Educational Thoughts in Thirukural) என்பதாகவே பொதுவாக ஆய் வாளர்கள் மற்றும் கட்டுரையாளர்கள் சிந்திப்பதுண்டு. இந்தப் பின்னணியில் நூற்றுக்கணக்கான விடயங்கள் நம் தேடலில் கிடைக்கின்றன. ஆனால் இரவீந்திரன் அவர்கள் திருக்குறளின் கல்விச் சிந்தனை (Educational Thoughts of Thriukural) என்றவாறு சிந்திப்பது அவரது தனித்துவமாகவே காண்கின்றேன். இந்த சிந்தனைப் பின்னணி அவரது தொழில்துறை சார்ந்த வாண்மைத்து வப் பயிற்றுவிப்பில் இருந்து உருவாகியிருக்க வாய்ப்புண்டு. கல்வியியல் துறையில் சிந்தனாகூடங்கள் குறித்த கற்கைகள் உளவியல் மற்றும் தத்துவம் உள்ளிட்ட பரப்புக்களில் மிகவும் முக்கியமானவை.

இச் சிந்தனாகூடங்கள் ஒரு குறித்த பண்பாட்டு ஆணிவேரில் இருந்து மேற்கிளம்பி ஏனைய பண் பாட்டுப் பரப்புக்களுக்குள் கிளைபரப்பும் தன்மை மிக்கன. கி.மு நான்காம் நூற்றாண்டில் கிரேக்கப் பண் பாட்டு ஆணிவேரில் இருந்து மேற்கிளர்ந்த சிந்தனா கூடங்களும் அவற்றின் தழுவல்கள் அல்லது மறுதலிப் புக்களாக பின் எழுந்த சிந்தனைகளுமே அனேகமான கல்வியியல்,உளவியல் மற்றும் தத்துவ வெளிகளை ஆளுகை செய்யும் சிந்தனைகளாகவுள்ளன. இதற்கான பிரதான காரணம் இவ் மேலைப்புல சிந்தனைகள் மீண்டும் மீண்டும் பயிற்றப்பட்டு, பயிலப்பட்டு மற்றும் பரிசீலனைக்கு உட்பட்டு புதிய வடிவங்களில் மீளச் சுழல்வதால் அவற்றின் தாக்கம் வலுவானதாகவுள்ளது. இருந்தும் அறிவுச் செறிவிலும் ஞானத் தெளிவிலும் தனித்துவம்மிக்க, பல நூற்றாண்டு பழமைமிக்க கீழைப்புல சிந்தனைமரபு அறிவின் மீள்சுழற்சிக்குள் அதிகம் உட்படாமையால் அவை உலகப் பெருவெளிக் குள் பரவலாக்கப்பட்டமை மிகவும் குறைவு.

இருந்தும் காலத்துக்கு காலம் பல கீழைப்புலச் சிந்தனையாளர்கள் தமது மரபின் சிந்தனைகளை மீள்வாசிப்புக்கு உட்படுத்தி தம் வாசிப்பனுபவத்தின் கண்டறிவுகளை உலகுக்கு கொடுத்துள்ளார்கள். குறிப்பாக கல்வியியல் சிந்தனை மரபில் சில முக்கியமான ஆளுமைகள் இத்தகையவர்களாக அடையாளப் படுத்தப்படுகின்றார்கள். அவர்களுள் முதன்மையானவர் வணக்கத்துக்குரிய தனிநாயகம் அடிகள். அவர் தனது கல்வியியல் துறை சார்ந்த கலாநிதிப் பட்டப்படிப்புக் காக இலண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் தமிழ் இலக்கியங்களில் கல்விச் சிந்தனைகள் என ஆங்கிலத்தில் ஆய்வுசெய்துள்ளார். பின்னர் இவ் ஆய்வு நூல் வடிவிலும் வெளிவந்தது. தமிழிலும் இத்தகைய முயற்சிகள் பல நடந்துள்ளன. அத்தகைய ஒரு முயற்சி யின் அறுவடை தான் இரவீந்திரனின் திருக்குறளின் கல்விச் சிந்தனை எனும் ஆய்வு ஆகும்.


இரவீந்திரன் கல்விச் சிந்தனைகளை திருக் குறளுக்குள் தேடுவதைத் தவிர்த்து திருக்குறளின் கல்விச் சிந்தனைகளைத் தேட விழைந்தமை திருக்குறளின் தனித்துவம் குறித்தும் அதன் உள்ளடக்கச் செறிவு குறித்தும் அவர் கொண்டுள்ள தெளிவைக் காண்பிக் கின்றது. இரவீந்திரனின் இந்தத் தெளிவை பேராசிரியர் சுந்தரமூர்த்தி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“ஒரு குறித்த காலத்துக்கான கல்விக் கோட் பாட்டை திருக்குறள் வகுத்து வழங்கவில்லை. வளர்ந்து வரும் இன்றைய கல்விச் சூழலுக்கு ஏற்பவும் மாறிவரும் சமூக வளர்ச்சிக்கு ஏற்புடையதுமான கல்விச் சிந்தனை யைத் திருக்குறள் வழங்கியுள்ளது. அறிவைப் பற்றி அறிந்து கொள்ளும் புதிய துறையாக கல்விப் புலத்தைத் திருக்குறள் காட்டும். இன்று உலகம் எதிர்பார்க்கும் கல்வி முறைமைக்குத் திருக்குறளின் கல்விச் சிந்தனை பெரிதும் பொருத்தப்பாடு உடையது என்பதை நூலாசிரியர் கல்வியியல் பின்னணியில் நின்று நன்கு விளக்கியுள்ளார்”

பேராசிரியர் சுந்தரமூர்த்தியின் மேற்குறிப்பிட்ட கருத்து. இரவீந்திரன் அவர்களின் திருக்குறளின் கல்விச் சிந்தனை எனும் நூலின் தனித்துவத்தை வலுவாகப் பதிவுசெய்கின்றது. அத்துடன் முன்னுரையில் இரவீந்திரன் “திருக்குறள் தன்னகத்தே காத்திரமான கல்விச் சிந்தனையைக் கொண்டிருக்கின்றது என்பதைப் பெரும்பாலான கல்வியியலாளர்கள் இப்போது ஏற்றுக் கொள்கின்றார்கள். இந்த ஆய்வுக்கு முனைந்த 2001 ஆம் ஆண்டில் இத்தகைய நிலை இருக்கவில்லை” குறிப்பிடு வது அவர் தனது ஆய்வுநோக்கில் கொண்டிருந்த தெளிவைப் புலப்படுத்துகின்றது. அவர் குறிப்பிடுவது போல் திருக்குறளின் கல்விச் சிந்தனை குறித்த தெளிவும் விழிப்பும் இன்று ஏற்பட்டிருக்கின்றது. இதற்கு அவரது ஆய்வும் துணைசெய்திருக்கும் என்பதை மறுப்பின்றி பதிவுசெய்யமுடியும். எனவே யாரும் சிந்திக்காத பரப்பில் யாரும் சிந்திக்காத கோணத்தில் புதிதாகச் சிந்திப்பவனே உண்மையான சிந்தனையாளன் மற்றும் ஆய்வாளன் எனும் வரையறைக்குள் தன்னை உட் படுத்திக்கொள்வதன் ஊடாக இரவீந்திரனின் சிந்தனை வெளியின் ஆளுமை காலம் கடந்தும் நிலைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரவீந்திரன் வெளிப்படுத்தும் புதிய சிந்தனைகள்

அமைப்பும் உலகப் பார்வையும் எனத் தலைப்பிடப்பட்ட முதலாவது அத்தியாயத்தில் திருக்குறளின் சிந்தாந்தப் பின்னணி குறித்து இரவீந்திரன் குறிப்பிடும் கருத்துக்கள் மிகவும் காத்திரமானவை. தனது பரந்துபட்ட ஆழமான வாசிப்பு அனுபவம் மற்றும் திறனாய்வுச் சிந்தனை என்பவற்றின் கூட்டிணைவாக திருக்குறள் குறித்துப் புதிய பார்வைகளை அவர் முன்வைக்கின்றார். திருக்குறள் எழுந்த காலப்பின்னணியை வணிகச் சார்பு மேலோங்கி உழைப்பும் உழைப்பவர்களும் இழிவாக பார்க்கப்படும் சூழல் என அவர் அடையாளப்படுத்துவது வழமையான சிந்தனைகளில் இருந்து வேறுபட்டதாக அமைகின்றது. பொதுவாக திருக்குறளை ஒரு நீதிநூலாகவும் அறம் ஒழுக்கம் வலுவிழந்த காலத்தில் அறத்தைப் போதிக்க ஆக்கப்பட்ட அறிவுரைக் கோப்பாகவுமே அனேகர் பதிவுசெய்வர். இரவீந்திரன் இத்தகைய வரலாற்றுப் போக்கான சிந்தனைகளுக்கு மேலாகவும் சென்று திருக்குறளின் தனித்துவத்தை பதிவுசெய்வதன் ஊடாக பல புதிய சிந்தனைகளைத் தோற்றுவிக்கின்றார்.

ஒரு இலக்கியவியல் வரலாற்று ஆய்வு எனும் அடிப்படையில் இந் நூல் அமைந்திருப்பதால் ஆய்வின் மையமான திருக்குறளின் பல பரிமாணங்களை தனது முதலாவது அத்தியாயத்தில் பதிவுசெய்கின்றார். அந்த அத்தியாயம் திருக்குறள் குறித்த பல புதிய ஆய்வுகளுக்கான தடங்களை தோற்றுவிக்கின்றது. எப்போதும் ஒரு கனதியான ஆய்வு என்பது புதிய ஆய்வுகளுக்கான சிந்தனை வெளிகளை உருவாக்க வேண்டும். அப்போதே எத்தகைய ஆய்வும் கற்பவர்களின் கவனத்தை ஈர்க்கும். இரவீந்திரன் அவர்கள் முதலாவது அத்தியாயத்தில் திருக்குறளின் கருத்தியல், அதன் சாதியச் சார்பின்மை, சாதியம் என்பது பிறப்பினால் அமைவதல்ல எனும் நியாயித்தல், ஒழுக்கமும் கல்வியுமே குலத்தின் அளவு கோலாக அமையும் மாண்பு என திருக்குறளின் தனித்து வங்களை தனது கண்டறிவுகளினால் மேலும் வலுவூட்டுகின்றார்.

அத்துடன் ஆண் மையச் சமூக நியதியில் பெண் எனும் விடயப்பரப்புக்கூடாக திருக்குறள் பெண்ணியம் குறித்து கொண்டிருந்த சிந்தனைகளை பல கோணங்களில் ஆராயும் இரவீந்திரன் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் மற்றும் ராஜம் கிருஸ்ணன் ஆகியோரின் இரு துருவங்களாக அமையும் கருத்துக்களின் மூலம் திருக்குறளின் பெண்ணியப் போக்கை தனது நோக்கு நிலையில் மெய்ப்பிக்க முனைந்திருக்கின்றார். குறிப்பாக இன்று அறிவுச்சூழலுக்குள் ஆழமாக பேசப்படும் பால்நிலைச் சமத்துவம் குறித்தான கருத்துக்கள் வள்ளுவரிலும் இழையோடிருக்கின்றது என்பதை மெய்ப்பிக்க முயலும் இரவீந்திரன் அவற்றை கல்வியல் கோட்பாடுகளுடன் மிக நெருக்கமாக பிணைத்திருப்பின் பெண்ணியம் குறித்த பகுதி மேலும் முதன்மை பெற்றிருக்கும். திருக்குறளுக்குள் அரசுக் கோட்பாடுகள் மற்றும் அவற்றின் பிரயோக நிலை, வள்ளுவம் உணர்த்தும் கடவுள், பன்மைத் தொழில் வேறுபாடுகளிடையே சமத்துவம், உலகப்பார்வை எனும் தலைப்புக்களில் ஆராயப்பட்ட விடயங்களிலும் இத் தன்மையை அவதானிக்கக்கூடிய தாக வுள்ளது.

இரவீந்திரன் திருக்குறளின் கல்விச் சிந்தனைகள் என தனித்துவமாக திருக்குறளை அணுகியபோதும் நவீன கல்விச் சிந்தனைகள் மற்றும் கோட்பாடுகளுடன் அதனை ஒப்பீட்டு ஆராய்கின்றார். இத்தகைய போக்கு மரபுசார்ந்த சிந்தனைகளை நவீனப்படுத்துவத்திலும் சர்வதேசமயப்படுத்துவதிலும் அவசியமானது. அத்துடன் மேலைப்புலம் சார்ந்த கோட்பாடுகளையும் சித்தாந்தங்களையும் காய்தல் உவத்தல் இன்றி ஏற்றுக் கொள்வதும் அபத்தமானது. கல்வி என்பது முகத்தோற்ற அளவில் உலகப் பொதுமையானதாகவிருப்பினும் அது ஒரு மக்கள் குழுமத்தின் வாழ்விடம், பண்பாடு, தொழில்தன்மை, பொருளாதார அடிப்படைகள், ஆட்சி முறைமைகள், கல்வியின் ஈற்று நோக்கு பற்றிய புரிதல் என்பவற்றின் அடிப்படையில் வேறுபட்டதாகவே அமையும். இதனை ஏற்றுக்கொண்டும் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுமே கல்வி குறித்த சிந்தனைகளையும் தத்துவங் களையும் அணுக வேண்டும். இந்தப் புரிதலுடன் திருக்குறளின் கல்விச் சிந்தனைகள் எனும் தனது நூலில் சோக்கிரட்டிஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில், ரூசோ, ஜோன்டுயி, பிரோபல் போன்றவர்களின் கல்விச் சிந்தனைகள் குறித்தும் இரவீந்திரன் மேலோட்டமாக அணுகுகின்றார். ஆனாலும் இக் கோட்பாடுகளை திருக்குறளுடன் ஆழமாக தொடர்புறுத்தி ஆராய்வதில் சற்று இடைவெளியிருப்பதை உணர முடிகின்றது. ஆய்வில் திருக்குறள் முதன்மை பெறுகின்றதன்மை யினால் அவற்றுக்கு முந்திய சோக்கிரட்டிஸ் போன்ற வர்களின் கருத்தியலின் ஆழம் விபரிக்கப்படாமல் போயிருக்கலாம் என உய்த்தறிய முடிகின்றது.

திருக்குறள் மதச்சார்பற்ற நூல் எனப் பிரகடனப் படுத்தப்பட்டது. இருந்தும் நுணுக்கமாக வலிந்து ஆராயும் ஆராய்ச்சியாளர்கள் திருக்குறளில் மதக் கோட் பாடுகளைக் முன்வைக்கின்றார்கள். இரவீந்திரனும் இத்தகைய அணுகுமுறையை சற்று பிரயோகிக்க எத்தனிக்கின்றார். இருந்தும் அதனை ஆழமாக ஆராய்வது ஆய்வின் நேரடி நோக்கத்துடன் உடன் படாது என்பதனால் இவ் விடயப்பரப்பில் விரிவை கட்டுப்படுத்தியுள்ளார்.

ஏற்கனவே குறிப்பிட்டதன் பிரகாரம் கல்விச் சிந்தனைகளை சர்வதேச மயப்படுத்துவது அவசிய மானது. அதனால் இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்தின் பாதியில் செய்யப்பட்ட ஆய்வு எனும் அடிப்படையில் கல்வியின் நான்கு தூண்கள் என அடை யாளப்படுத்தப்பட்ட விடயங்களுடன் திருக்குறளை தொடர்புறுத்தி ஆராய்கின்றார். அதாவது அறிதலுக்காக கற்றல், செயலாற்றுவதற்காகக் கற்றல், சேர்ந்து வாழ்வதற்காகக் கற்றல், வாழக்கற்றல் எனும் நான்கு பரப்புக்களில் திருக்குறள் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்பதை இவ் ஆய்வு ஆராய்கின்றது.

மேலைப்புல சித்தாத்தங்களில் கல்வியின் ஈற்று இலக்கு குறித்த கருத்தியல்களில் மாற்றங்கள் ஏற் பட்டுள்ளன. தொழில்சந்தையை மையப்படுத்தியதாக கல்வி மறுசீரமைக்கப்பட்டுள்ளது. புதிய தொழில் நுட்பங்களின் செல்வாக்கு காரணமாக கல்வி சார் இடைவினையுறவின் பங்குதாரர் களில் மாற்றம் நிகழ்ந்திருக்கின்றது. மேலைப்புலத்தில் ஏற்பட்ட மாற்றங் கள் கீழைப்புல கல்விச் செல்நெறி களுக்குள்ளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இச் செல்வாக்கு என்பது ஒரு தரப்பால் சிதைத்தல் ஆகவும் மறுதரப்பால் செதுக்கல் ஆகவும் பார்க்கப்படுகின்றது. சிதைத்தல் எனக் கருதும் தரப்பு முன் வைக்கும் பிரதான குற்றச் சாட்டு கல்வியின் பிரதான நோக்கங்களாக இருக்க வேண்டிய விழுமிய விருத்தியும் சமூகமயமாதலும் புதிய முறையிலான அணுகுமுறைகளால் இழிவளவாக்கப்படு கின்றன அல்லது இல்லாது செய்யப்படுகின்றன என்பதாகும். இதில் உண்மை இல்லாமலும் இல்லை. புதிய நூற்றாண்டின் இத்தகைய மாற்றத்தால் கீழைப்புல கல்விச் சித்தாந்தங்கள் ஈருடக நிலைக்கு திரிபு பெறுகின்றன. இந்த தன்மை குறித்த விமர்சனங்களுக்கு விடைகிடைப்பதாக இரவீந்திரனின் திருக்குறளின் கல்விச் சிந்தனை ஆய்வு அமைகின்றது.




குறிப்பாக திருக்குறள் விபரிக்கும் அகத்திணைக் கல்வி, குறித்து புதிய நியாயம் கற்பித்தலை செய்கின்றார் இரவீந்திரன். இன்று முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்படும் பாலியல் கல்வி குறித்து வள்ளுவர் இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்னரே விபரித்துள்ளார் என எண்பிக்க முயல்கின்றார். பண்பாட்டுக் கையளிப்பு என்பது கல்வியின் பிரதான பண்பு எனக் குறிப்பிடும் அவர் ஒருவரை சமூகவியல்பினராக ஆக்குவது கல்வியின் பிரதான குறிக்கோள் என அழுத்தமாக பதிவு செய்கின்றார். இவையனைத்தையும் திருக்குறளின் பல்வேறு குறள்களின் வழியாக ஆதாரப்படுத்துகின்றார்.

நிறைவாக திருக்குறனை ஒரு கற்பித்தல் சாதனமாக பிரகடனப்படுத்தும் இரவீந்திரன் அவர் களின் ஆய்வு முரண்பாடுகளைத் தீர்க்கும் கருவியாகவும் திருக்குறளை அடையாளப்படுத்துகின்றது. கற்றல் கற்பித்தல் செயன்முறையின் பிரதான பொறுப்புதாரர் களில் ஒருவரான ஆசிரியரின் வேறுபட்ட வகிபாகங் களை எடுத்துக்காட்டி அவற்றின் முக்கியத்துவத்தை குறள்களின் உதவியுடன் ஆதாரப்படுத்த முயல்வது ஆய்வாளரின் தேடலினதும் பரந்துபட்ட வாசிப்பனுப வத்தின் ஆறுமையையும் பிரதி பலிக்கின்றது.

நிறைவுரை

திருக்குறளின் கல்விச் சிந்தனை என்கின்ற ஆய்வுநூலின் வழியாக திருக்குறளின் பல பரிமாணங்கள் வெளிக்கிளம்புவது போன்று ஆய்வாளர் இரவீந்திரனி னது பன்முகப்பட்ட ஆளுமையும் மெய்ப்பிக்கப்படு கின்றது. அடிப்படையில் ஆசிரியர் களுக்குக் கற்பிக்கும் ஆசிரியன் எனும் வகையில் அவரது ஆய்வனுபவ அறிவும் தமிழ் இலக்கியப்புலம் சார்ந்த அவரது பரீட்சயமும் இந்த நூலின் வழியாக பிறரின் சிந்தனைக்குரிய கவனத்தை ஈர்க்கின்றது. இவரது சிந்தனைவெளி என்பது புதிதாகச் சிந்தித்தல், மாற்றுக் கோணத்தில் சிந்தித்தல், விமர்சன மூடாகச் சிந்தித்தல், ஆதாரங்களில் இருந்து புதிய அறிவைக் கட்டமைப்பது குறித்து சிந்தித்தல் என பல தளங்களில் விரிகின்றது. இந்த தளங்களில் அவரது ஆளுமையை அளவிடும் போது சுதேசிய உணர்வுமிக்க ஒரு கல்வியியலாளனாக அவரைத் தரிசிக்க முடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ.தேவராஜா

# விடுதலைத் தேசியத்துக்கான முன்நிபந்தனை புதிய பண்பாட்டுப் புரட்சி ந.இரவீந்திரன் எழுதிய "சாதி தேசம் பண்பாடு" ஆய்வு நூல் தொடர்பான ஓர் உரையாடல்

இந்நூலை வாசிக்கின்ற போது எழுதுகின்ற வினாக்களை பின்வருமாறு வெளிப்படுத்து கின்றேன்.

மாக்ஸிசத்தில் பயன்படுத்தும் வரலாற்றுப்பொருள் முதல் ஆய்வினை மேற்குலக வரலாற்றுக்கு பிரயோகிக்கும் அதே முறையில் கீழைத்தேசத்தின் குறிப்பாக இந்திய வரலாற்றுக்குப் பிரயோகிக்கையில் தோன்றும் வேறுபாடு என்ன?

வர்க்கப் போராட்டமே வரலாற்று வளர்ச்சியின் ஆதார சுருதியெனில் கீழைத்தேச வரலாற்றுக்கேயுரிய விசேடமான திணை அரசியல் ஆதிக்கத்தின் பங்கும் பாத்திரமும் எத்தகையது?

இந்திய சமூகத்துக்கேயுரிய சாதியச் சமூகத்தின் தோற்றமும் வரலாற்று மாற்றமும் அதன் விசேட குணாம்சமும் எத்தகையது?

தேசியம், தேசம் என்பதன் வரையறைகளின் வளர்ச்சி நோக்கில் சாதியச் சமூகம் என்பது தனித்த தேசியப் பண்புடையதெனத் தேசம் எனக் கருதல் சாத்தியமா?

இவ்வாறாக இந்திய, இலங்கை வரலாற்று வளர்ச்சியில் சாதியச் சமூகத்தை தனித்தேசிய இனமாகக் கருதி இரட்டைத் தேசியக் கருத்தியலை முன்வைப்பது பொருத்தமாகுமா?

மரபுக்குழுவின் நீட்சியும் நிலைத்தலுமே சாதியச்சமூகமாயின் இந்திய வரலாற்று வளர்ச்சியில் தோன்றிய தலித்திய தேசியம் இலங்கை வரலாற்றுக்கும் வளர்ச்சிக்கும் சமூகமாற்றத்துக்கும் ஏற்புடையதா?

இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற **1966** ஒக்ரோபர் **21** எழுச்சி சாதித்த வெற்றியின் படிப்பினைகள் இந்திய தமிழக வரலாற்றுப் பின்புலத்தில் ஏற்புடையதாகுமா?

இலங்கைத் தமிழ்தேசியம் தோல்வியிலிருந்துபெற வேண்டிய படிப்பினைகள் எவை? அவற்றைக் கடந்த செல்வதில் வெற்றிபெற்ற ஒக்ரோபர் எழுச்சியின் படிப்பினைகளைப் பயன்படுத்துவதன் மூலம் முற்போக்கு முனைப்புடன் விடுதலைத் தேசியத்தை வெற்றிகொண்டு நடாத்துதல் சாத்தியப்படுமா?

விடுதலைத் தேசியத்தை வென்றெடுப்பதாயின் அதன் முன் நிபந்தனையாக புதிய பண்பாட்டுப் புரட்சியைக் முன்னெத்தல் இயலுமா?

இலங்கையின் சமகால அரசியல் பொருளாதார சமூக வரலாற்றில் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் தமிழ் - முஸ்லீம் - மலையகம் என்பது அங்கீகரிக்கப்படுமா? அவ்வாறாயின் அவை ஒன்றுபட்டுத் தமது விடுதலைத் தேசியத்தை வென்றெடுக்கும் சமூக மாற்றுச் சிந்தனைக்கும் செயற்பாட்டுக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிசமைப்பது எப்படி? எப்பொது? யாரால் சாதிக்க இயலும்?

மேற்குமைய அமெரிக்க ஏகாதிபத்திய உலகமய மோகத்திலிருந்தும் தமிழ் நாடுடை இந்தியத் தொப்புள் கொடி உறவிலிருந்தும் இலங்கை தனது இறைமையைக் காக்குஞ் சந்தர்ப்பம் இனிமேலும் ஏதும் உண்டா?

உலகமய நுகர்வுப் பண்பாட்டு நுகத்தடியிலிருந்து இலங்கைத் தமிழ் - சிங்கள முஸ்லீம் - மலையக மக்களால் மீள முடியுமா? சமூகமாற்றச் சிந்தனையும் செயலூக்கமும் தோன்றுமா?

இவ்வாறாக என்னுள் எழுந்த வினாக்கள் பலப்பல.

2.

இந்நூல் 254 பக்கங்களுடன் தமிழகத்தில் 2013 ல் “முகம்” பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலை “நிச்சாமம்” கிராமத்துக்குச் சமர்ப்பணமாக்கியுள்ளார்.

ஆசிரியர் தனது சமர்ப்பணத்தில் “கே.ஏ.சுப்பிரமணியம் வாயிலாக என் கருத்தியலை வடிவப்படுத்திய 1966 ஒக்ரோபர் 21 எழுச்சி மார்க்கத்தின் முன்னணிப் படையாகத் திகழ்ந்து. எச்சாமம் வந்து எதிரி நுளைந்தாலும் நெருப்பெறிந்து நீறாக்கித் தீரமுடன்போராடி நிச்சாமத்துக்கு” எனத் தெரிவித்துள்ளார்.

இந்நூலில் 1. பஞ்சமர் இலக்கியம் (ஈழத்தமிழ்த் தலித் இலக்கியம்) 2. சுயநிர்ணய உரிமைத் தீர்வில் இரட்டைத் தேசியம் 3. தேசிய எழுச்சியின் இன்றைய போக்கில் தலித் பிரச்சினை 4. அம்பேத்கரும் எம்.சி.சுப்பிரமணியமும் 5. சாதியச் சமூகத்தில் தேசியம் 6. சாதி தேசம் பண்பாடு 7. தேசியம் பற்றிய மாக்சியக் கோட்பாடு, சாதியச் சமூகத்தில் மார்க்சியம் - சமூக மாற்றத்துக்கான மாற்றுவழி என்பவற்றுடன் 2010 ஆசிரியரின் என்னுரை முதலிலும் பின்னுரை இறுதியிலும் இணைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் தனது என்னுரையில் “சவுத் விஷன் பாலாகி... எனது இந்த நூலையும் துணிவுடன் வெளியிடுகின்றார்” என்று குறிப்பிடுகிறார்.

ஆசிரியர் தனது முதலாவது கட்டுரையில் இரட்டைத் தேசியம் நோக்கிய வளர்ச்சிக்கான அருட்டுணர் வெளிப்படும் என்றும்இரண்டாவது கட்டுரையின் பேசு பொருள் இரட்டைத் தேசியம் என்றும் குறிப்பிடுகின்றார்.

மூன்றாவது கட்டுரை 2007 லண்டன் தலித் மாநாட்டுக்காக எழுதப்பட்டது.

நான்காவது கட்டுரை, “மல்லிகை” 45வது ஆண்டு மலரில் வெளியானது.

ஐந்தாம், ஆறாம் கட்டுரைகள் ஆதவன் தீட்சண்யாவின் வேண்டுகோளுக்காக “புதுவிசை” சஞ்சிகைக்காக எழுதப்பட்டவை.

ஏழாவது கட்டுரையின் முதற்பகுதி “தேசியம் பற்றிமாக்சியக்கோட்பாடு” என்பது “மல்லிகை” 46வது ஆண்டு மலரில் வெளிவந்தது. இது தவிர்ந்த அடுத்து வரும் இருபகுதிக் கட்டுரைகளும் இந்நூலுக்காக எழுதப்பட்டவை என ஆசிரியர் தனது என்னுரையில் குறிப்பிடுகின்றார்.

3.

இந்நூலாசிரியர் வர்க்கப் போராட்ட அடிப்படையில் வரலாற்றுப் பொருள் முதலாய்வில் புராதன பொதுவுடமைச் சமூகம், அடிமைச் சமூகம், சில மானியச் சமூகம், முதலாளித்துவ சமூகம் என்ற வளர்ச்சிப் போக்கினை இந்தியாவுக்கு அப்படியே பொருத்த இயலாதெனக் கருதுகிறார்.

இந்தியாவில் வணிகச் சமூகமும் வீரயுகமுமாக சங்க காலம் விளங்கியதென்றும் நிலமானியச் சமூகமாக விவசாயவர்க்கமும் பல்லவர் காலப் பக்திப் பேரியக்கமும் எழுச்சி பெற்று சோழர்காலத்தில் வர்ணக் கோட்பாடம் சைவசிந்தாந்தமும் உறுதிப்படுத்தப்பட்டதென்றும் நிலமானிய சமூகமாற்றத்தைக் குறிப்பிடும் ஆசிரியர் இன மரபுக் குழுவிக் அடிமைதனம் சமூகப் போக்கு “பழையன கழியாமல்” சாதியச் சமூகமாக நிலமாகிய காலத்தில் நீடித்து நிலைத்தன வென்றும் செய்யப்பட்டன வென்றும் விவசாய வர்க்கமாகிய மருதத் திணையினரின் அரசியல் ஆதிக்கம் மூலம் ஏனைய திணையினரை அடக்கி அடிமைச் சமூகமாகவே சாதியச் சமூகம் நீடித்ததென்றும் தனதுகருத்தை முன்வைப்பதாகத் தெரிகின்றது.

முதலாளித்துவ மாற்றத்திலும் கொலனித்துவத்திலும் இத்தகைய இனமரபுக்குழு சாதியச்சமூகமாக நிலைத்து நீடித்ததென்பதாலும் சாதியச் தேசியமாகக் கணிக்கப்பட்டு நாட்டுத் தேசியம், இனத்தேசியம் போல் சாதித்தேசியம் மதிக்கப்பட வேண்டும்மென்பதும் இந்நூலாசிரியரின் தர்க்கக் கருத்தியலாகும். எனவே சாதித்தேசியத்துடன் தேசிய விடுதலைக் கருத்தில் நோக்கப்படும் போது இரட்டைத் தேசியம் தோற்றம் பெறுகிறது என்பது ஆசிரியரின் தீர்மானமாக வெளிப்படுத்துகிறது. சுயநிர்ணய உரிமைத் தீர்வில் இரட்டைத் தேசியம்“ என்ற கட்டுரைஇது பற்றி பின்வருமாறு எழுதுகிறார்.

“சாதியத் தகர்ப்பு தேசியத்தை ... இனக்குழுக் குலங்கள் சாதிகள் ஆக்கப்பட்டன.” (பக்120 121 வரை)

மேலும் சாதிய மரபுக்குழுவின் தேசியம் பற்றி “சாதியச்சமூகத்தின் தேசியம்“ என்ற கட்டுரையில் அ.மார்க்ஸ் தீராநதியில் எழுதி வரும் “பேசாப் பொருளை பேச நான் துணிந்தேன், என்பதிலும் தமிழவன் “தீராநதி” யில் எழுதிய கட்டுரைகளினையும் குறிப்பிடுகின்றார்.

“பா.ம.க நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் (தமிழகத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும்) தமிழடையாளம் ஒன்று அரசியல் ரீதியில் கட்டமைக்கப்பட வேண்டியதருணத்தில் டெல்லி மத்திய அரசாங்கத்தை வலிமைப்படுத்தும் தவறான அதிர்ச்சி தரத்தக்க சிந்தனையை முன்வைக்கிறார் எனக் குறைப்பட்டுக் கொள்கிறார் தமிழவன்” (பக் 172) என ஆசிரியர் சுட்டிக்காட்டி வடதமிழகத்தில் “வன்னியர்” சாதியினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையென்றும் தென் தமிழகத்தின் பெரும்பான்மைச் சாதியினரின் கையில் தமிழகத்தின் அரசியல் ஆதிக்கமுள்ளதென்ற தகவலைத் தருகின்றார்.

"தெலுங்கானா கோரிக்கையும் திணைநிலை உருவாக்கமும்" என்ற தலைப்பில் அ.மார்க்ஸ் எழுதிய கட்டுரையில் "இத்தகைய ஒரு பேரடையாளத்தை கற்பித்துக் கொண்டவர்களாயினும் புவியியல் அமைப்பு பண்பாடு, உணவு, உற்பத்திமுறை என எல்லாவற்றிலும் வேறுபட்ட ஐந்து திணைகளை உள்ளடக்கிய பாரம் பரியம் நம்முடையது. இந்த உள்ளடக்கம் பாரம்பரி யத்தை(undusive tradition) காப்பாற்று வோம் என்பது அ.மார்க்ஸ் கருத்து" (பக் -174)

"சாதி மற்றும் பழங்குடி அடிப்படையிலான அடையாளங்களும் இன்று தம்மை உறுதிசெய்யத் தொடங்கியுள்ளன. இந்த வேட்கைகளை இன்று இனம், மொழி ஆகிய மேலிருந்து கட்டப்படும் பேரடையாளங் களால் நசுக்கிவிட இயலவில்லை என அ.மார்க்ஸ் கூறுவதில், இதனைக் கண்டுகொள்ள முடியும். பின் நவீனத்துவப் பேரடையாளக் கதைகளில் மினைக் கெடுவதால் மார்க்ஸிய அடிப்படையிலான தேசியப் பிரச்சினையின் இன்னொரு வடிவமாக இதனை அவரால காணமுடியாதுள்ளது" என்பது ஆசிரியரின் விமர்சனமாகும் (பக் 178)

"திணை மேலாண்மையிலான சமூக ஏற்றத் தாழ்வையுடையசாதியச் சமூக உருவாக்கம் குறித்த ஆய்வுகள் வெளிப்பட்டுள்ளன; "தீண்டத் தக்கவர்களும் தீண்டப்படாதவர்களும் சந்திக்கும் பொது அவர்கள் மனிதருடன் மனிதர்அல்லது நதனிநபர் என்ற முறையில் சந்திப்பதில்லை. குழுக்களின் உறுப்பினர்களாக அல்லது இரண்டு தனி நாடுகளின் குடிமக்கள் போலத்தான் சந்திக்கிறார்கள்" என்று கூறும் அம்பேத்கர் "ஆரம்ப காலச் சமுதாயத்தில் பல்வேறுகுழுக்களிடையே இருந்த உறவைப் போல் இந்த உறவு காணப்படுகிறது" என அதற் கான அடிப்படையையும் எடுத்துக்காட்டியுள்ளார்" (பக் 176)

"இவ்வாறு அதன் தனித்தன்மைமிக்க பண்பு வேறுபாடுகளின் பரிமாணங்கள் சரியாக இனங்காணப் படவில்லை. இத்தகைய சமூக முறைக்கான சமூகமாற்றப் புரட்சிகளுக்கான வடிவ வேறுபாடு குறித்துப் பேசப் பட்டுள்ளது. அந்த வகையில் விரிவாக இங்கு அவை குறித்து விவாதிப்பதைத் தவிரித்து சாதியிருப்புக் கொள்ளும் தேசியவடிவம் குறித்து அலசுவது அவசியம்" (ப்க 177)

"சாதிகள் தேசியப் பண்புமிக்கவை என அம்பேத்கர் வலியுறுத்தியதை இங்கு பொருத்திப் பார்ப்பது அவசியம். அம்பேத்கரது இக்கருத்தினை எடுத்துக் காட்டுகிறவர்களும் கூட மேலே நாம் பார்த்து வந்தவாறான சாதித் தேசியம் என்பதோடு தொடர்புறுத் திப் பார்ப்பதில்லை" எனக் குறைப்படும் ஆசிரியர் "சாதியப் பிரச்சினைகள் குறித்த செயற்பாடுகளில் பற்றார்வத்துடன் மார்க்சிய அமைப்புள் இன்று ஈடுபடத்தொடங்கியமையினால் எதிர் காலத்தில் சரியான கோட்பாட்டுருவாக்கமும் நடைமுறைப் பிரயோகமும் சாத்தியமாகும்."

"இங்கே தான் மார்க்சிய நிலைப்பட்ட வர்க்கப் பார்வை அவசியமாகின்றது." (பக் 177) என ஆசிரியர் கூறுவது கவனிக்கத் தக்கதும் உரையாடப்பட வேண்டிய துமாகும்.

"சாதித் தேசத்துக்கான சுயநிர்ணத்தை நேபாளத்தில் மாவோயிஸ்டுகள் நடைமுறையாக்கும் முயற்சிக்கானதொடக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை கவனிப்புக்குரியது."

"நேபாள அரசியல் இதற்கு இன்னொரு சான்று. அங்கே 12 ஆண்டுகளாக ஆயுதப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த மாவோரிஸ்டுகள் அங்கு புதிதாக உருவாகியிருந்த அடையாள உறதியாக்கங்களை (Hentity Affirmations) புரிந்து, உள் வாங்கி ஏற்றுக் கொண்டனர். இருபதாண்டுகளுக்கு முன் அங்கே மாதேசி, ஜனஜாதி, தலித் முதலான அடையாள உருவாக்கங்கள் வலுவாக்கச் செயற்படடதில்லை. ஜனஜாதி, தலித் முதலான சொற்கள் நேபாளி மொழியில்லாதவை. முன்னது வங்கமொழிச்சொல். பின்னது மராத்தி மாதேசி இந்திய வம்சாவழியினரைக் குறிப்பது. ஆயதப் பேராட்டத்தின் மூலம் சுமார் 9 மாவட்டங்களை மாவோயிஸ்டுகள் விடுதலைப் பிரதேசங்களாக அறிவித்தபோது ஒன்று தலித் தலைமையில் உருவாக்கப்பட்டது. (பக் 181, 182)

"சாதித்தேசியம் குறித்து தமிழகத்தில் மிகக் காத்திரமான பங்களிப்புகள் உண்டு. பிராமணியத்துக் கெதிரான திராவிடஇயக்க எழுச்சி அதற்கான களம் அமைத்துக் கொடுப்பதாக அமைந்தது. தவிர, திணை களாக இயங்கிய தமிழக வரலாற்றுத் தொடக்கத்தில் மருதத்திணை ஏனைய திணைகளை வென்றடக்கி அரசுருவாக்கத்தை ஏற்படுத்தியதை அறிவோம். இது சாதித் தோற்றத்தை விளக்குவதான கோட்பாட்டுரு வாக்கத்தை வழங்க ஏற்றதாக அமைந்துள்ளமையும் கவனிப்புக்குரியது. திணைக் கோட்பாடு சார்ந்து சிவத்தம்பி முன்வைத்துள்ள கருத்துக்கள் சாமி குறித்த ஆய்வில் ஏற்கனவே தாக்கம் செலுத்தியுள்ளன." (பக் 182)

"தமிழகத்தின் வரலாற்றுத் தொடக்கம் உலகின் ஏனைய பகுதிகள் போல விவசாய எழுச்சியைத் தொடர்ந்து வணிக எழுச்சியைக் காட்டுவதில்லை. விவசாய எழுச்சிக்கு முன்னரே வணிகம் சாத்தியப்பட்ட வரலாற்றுத் தொடக்கம் தமிழின் பல தனித்துவங்களுக்கு வழிவகுத்துள்ளது. ஐந்து திணைகள் ஆளுமையோடு அடையாளங் காணப்படுவதற்கு அதுவே வாய்ப்பளிப்ப தாக அமைந்தது. விவசாயத்துக்கு முந்திய வணிக சாத்தியம் சுமேரிய வணிகக் குழுக்களின் குடியேற்றங் களாக இருக்கும் வாய்பை இந்திரமான "தமிழினத்தவ உருவாக்கம்" பற்றிய நூலில் காட்டியுள்ளார்.

"பிந்திய வணிக எழுச்சி சங்கமருவிய காலத்துக் குரியது. இதற்கு நெடுங்காலம் முன்னதாக, சுமேரிய வணிகக் குழுக்களின் வருகைக்குக் காரணமான குறிஞ்சித் திணையின் ஏலம், கறுவா, கராம்பு, நீல மணிக்கல் மற்றும் நெய்தலின் முத்து வணிகம் சார்ந்த அந்தத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைகள்பெற்ற ஆளுமை பிரத்தியேக கவனிப்புக் குரியது. இவை விவசாய எழுச்சிக்கு முந்தியவை. இக்காரணத்தினாலேயே வீரயுக இலக்கியத்தில் வணிகக் கருத்தியலுக்கான சமண, பௌத்த, ஆன்மிக கவிதைகள் இடம் பெற முடிந்துள்ளன" (பக் 183)

"சேர அரசுருவாக்கத்தின் போது அதன் சின்ன மாக உள்ளஅம்பு, வில் முல்லையைக் குறிப்பதாக சொல் வோருளர். அதுமுல்லைக்குரியதல்ல, குறிஞ்சிக்குரியது. சேர அரசுருவாக்க நகர்கள் குறிஞ்சித் திணையோடு தொடர்புபட்டிருக்கக் காணலாம். பாண்டிய அரசு உருவாக்கத்தில் மீள்கொடி நெய்தல் திணையை நினைவு படுத்தியது. அதன் முத்துவணிகம் கவனிப்புக்குரியது" (பக்189)

"ஆயினும், குறிஞ்சி, நெய்தல் திணைகள்... (பக் 194 - 186) கிராம எல்லை கடந்து சாதிய உறவை கட்டமைக்க வலியுறுத்துகிறது."

"யாதும் ஊரே யாவரும் கேளிர் எனத் தமிழகம் மூவேந்தர் மூவரது பேரரசு எல்லைக்குள் "கொணரப் பட்ட போது வெள்ளாளர் ஆதிக்கத்துள் அனைத்துச் சாதிகளும் கொண்டுவரப்பட்டார். இரண்டாயிரம் வருடங்களின் முன்னர்வெறும் அரசு இயந்திர அடக்குமுறையாய் மட்டம் இதனைச் சாதித்துவிட முடியாது. அதுவம்ஒர பகுதியாக அமைய வேண்டி இருந்ததாலேயே வீரயுக யுத்தகப் பெரிகை, அதற்கு உணர்வூட்டும் வீரயுகப் பாடல்கள், மூவேந்தர்கள் இவ்வகையில் பேரசுகளாக எழுச்சி பெற்ற போதும் வென்றெடுத்த நிலங்களைப் பிராமணர்களுக்கு வழங்கி ஏற்றத் தாழ்வை வலியுறுத்தம் சாதியக் கருத்தியலுடைய பிராமணியத்தை இந்த மண்ணுக்குரியதாக்கினார். இவ்வாறு கருத்தியல் ஏற்பை சாத்தியமாக்கியதன் வாயிலாகவே வெற்றிபெற்ற சாதி தனது அதிகாரத்தை நிலை நிறுத்த முடிந்தது. (பக்186)

இவ்விடத்தில் குடியியல் சமூகம் வரித்துக் கொண்ட கருத்தியல் தளம் ஆதிக்க சாதியின் அரசுரிமைக்குச் சாதகமாக அமைவது பற்றி அந்தொனி யோகிராம் தீயன் குடியியல் மேலாண்மை முக்கியம் பெறுகிறது.

அண்ணாத்துரை தலைமையில் தி.மு.க.வில் வெள்ளாளர், முதலியார், நாயக்கர்கள் சேர்ந்தனர். என்பதுகளில் அ.தி.மு.கவில் கள்ளர் மறவர், அகம்படி யார் தலைமையில் முக்குலத்தோர் இணைந்தார். பா.ம.க.வில் வன்னியரும் விடுதலைச் சிறுத்தைகள், புதியமலையகம் கட்சிகளில் தலித் மக்களும்அணி சேர்க்கப்பட்டனர். "இதனை சாதிவாத நோக்கில் அணுகக் கூடாது. வர்க்க அடிப்படையிலான காரணி களும் புறக்கணிக்கத்தக்கன வல்ல" என்பது ஆசிரியர் கருத்து.

"20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தி யாவை ஒன்றுபடுத்த கோகலே, திலகர் போன்றோரின் பிராமணம் தேசியம் பயன்பட்டது. காந்தி நேரு தலைமையில் தாராளவாத அரைப் பிராமணித் தேசியம் என வேறுபடுத்தியவர் போத்து ரெட்டி காங்கியின்



பிராமணத் தேசியத்தால் இந்தியாவை ஒன்றுபடுத்த இயலாதன ஜோதி ராவ் புலேர அம்பேத்கர் குறிப் பிட்டனர். எனினும் தலித் மக்கள் காங்கிரசுடன் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பற்றினர்."

"அம்பேத்கர் காங்கிரசின் பிராமணத் தேசியத்துக்கு எதிராக தலித் மக்களின் எதிர்தேசியத்தை முன்வைத்து இயங்கினார்."

"ஒரு தேசத்தை வடிவப்படுத்தித் தலைமை ஏற்க வாய்ப்புள்ள ஆதிக்க சாதித்தேசியம் ஒடுக்கப் பட்ட உரிமைகள் முழுமையாக மறுக்கப்பட்ட தலித் தேசியம் எனும் இரட்டைத் தேசியம் எதிரும் புதிருமாக இங்கு வலுவாயுள்ளமை கவனிப்புக்குரியது" (பக்190)

இவ்வாறாக இரட்டைத் தேசியத்தைக் கருதின் இலங்கையில் பெருந்தேசிய சிங்கள ஆதிக்க இனத்துக் கெதிராக தமிழ்த் தேசியத்தை எதிர்தேசியமாகக் கருத லாம். எனவே இரட்டைத் தேசியமென சிங்கள தமிழ் இனத் தேசியங்களை இலங்கையின் வரலாற்று வளர்ச்சி யில் கருதல் இயலுமானதா என்பது விவாதத்துக் குரியது.

"பெரியாரோ, அம்பேத்கரோ ஏகாதிபத்திய சக்திகளிடம் விலைபோனவர்களல்ல." இலங்கையில் தமிழ்தேசியம் எதிர்தேசியமெனக் கருதினும் குறுந் தேசியமாக ஏகாதிபத்திய பிராந்திய வல்லரசுகளிடம் சரணடைந்தமையே தோல்வியின் குணங்குறியெனலாம்.

இது வரை முதலில் எழுப்பிய ஆறுவினாக் களுக்கும் முழுமையான விடை கிடையாவிடினும் விவாதத்துக்கும் இவ்வினாக்களின் விரிவாக்கத்துமுரிய விடயதானங்களை "சாதி தேசம் பண்பாடு" என்ற நூலின் வழியே கவனித்துள்ளேனெனினும் பல்வேறு கருத் தாடல் தளத்துக்கும் கருத்தியல் களத்திலும் மென் மேலும் உரையாடல் தொடவேண்டிய தேவையுள்ள தெனலாம்.

*4.*

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் எழுப்பிய பிற வினாக்களுக்குரிய விடயப் பொருளையும் இந்நூலின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் ஆராய முனைகின்றேன்.

இலங்கையில் யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகளால் வழிநடாத்தப்பட்ட சிறுபான்மைத் தமிழர் மகாசபை அதன் தொடர்ச்சியாக தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கமும் அவற்றின் போராட்ட மார்க்கங் களும் வெற்றியை ஈட்டின.

சாதித்திமிருடன் வாழுந் தமிழனோர் பாதித் தமிழனடா" என்ற சுபத்திரனின் போர்க்குரல் ஓங்கி ஒலித்தது. கவிஞர் பசுபதி முதல், சுபத்திரன், முருகையன், சிவானந்தன், சில்லையூர் செல்வராசன், புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை, சாருமதி, புதுமை இரத்தின துரை, முருகு, கந்தராசா வரை கவிஞர் படையும்;

பேராசிரியர் கா.சிவத்தம்பி, சி.சிவசேகரம், இ.முருகையன், எஸ்.பொ போன்ற ஆய்வறிஞர்களும், செ.கணேசலிங்கன், இளங்கீரன், அ.ந.கந்தசாமி, என்.கே.ரகுநாதன், டானியல், டொமினிக் ஜீவா, பெனடிக்ற் பாலன், கதிர்காமநாதன், செ.யோகநாதன், ஈழத்துச்சோமு, க.தணிகாசலம் வரையான எழுத்தாளர் களும்சிறுகதைகளும், நாவல்களும்.

கடூழியம், கந்தன் கருணை, ஏகலைவன், கோடை, சங்காரம், காகிதப்புலிகள் போன்ற நாடக மேடையேற்றங்களும்;

ஆற்று வெள்ளம்போல் 1966 ஒக்ரோபர் 16 எழுச்சியின் முன்னும் பின்னுமாக பண்பாட்டுத்தளத்தில் - ஈழத்து இலக்கியத்திக்கு அடையாளமும் இழிசனர் இலக்கியம் எனக் கருதிய பஞ்சமர் இலக்கிய எழுச்சிக்கும் வித்தாகி வேராகி விருட்சமாகிய வீர வரலாறு கணிப்பிற்குரியது.

தீ.ஒ.வெ இயக்கப் போராளிகள் சங்கானையில் மட்டுவிலில், வடமராட்சியில், கொடிகாமத்தில், அரியாலையில், ஆரியகுளத்தில், அச்சுவேலியில், ஆவரங்காலில், புத்தூரில், புங்குடுதீவில், பொன்னாலை, யாழ்ப்பாணத்தில், இளவாலையில், மாதகலில் எனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தீண்டாமைக் கெதிரான போராட்டத்தில் சாதி வெறியர்களுக்கெதிராக அனைத்துச் சமூகத்தினரையும் ஒன்றிணைத்து ஐக்கியப்பட்டுப் பேராடினார்.

ஏகாதிபத்தியத்துக்கெதிராக உழைக்கும் மக்கள் பக்கம் நின்றனர். வியட்நாம் விடுதலைப் போருக்கு தமது ஆதரவை வழங்கினர்.

மாக்ஸீயக் கருத்தியலை ஏற்றுக்கொண்டு கம்யூனிட் கட்சியின் வழிகாட்டலில் தடம்பதித்தனர்.

எதிரிகளாகிய சாதி வெறியர்களைத் தனிமைப் படுத்தி பரந்த வெகுஜனத்தை ஐக்கியப்படுத்தினர்.

சாதிவாதத்தைக் கடந்து மனிதநேயம், சமூக நீதியை வலியுறுத்தினர்.

சிங்கள மக்கள், முஸ்லீம் மக்கள், பிக்குகள் உட்பட அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்தி களுடனும் ஐக்கியப்பட்டு ஓரணியில் திரண்டனர்.

எதிரியார், நண்பர் யார் என்ற தெளிவுடன் தீண்டாமைக்கெதிராக மாவிட்டபுர ஆலயப் பிரவேசம், வில்லூன்றிமயானப் போராட்டம் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் போராட்டம் என பல்முனைகளிலும் போராடி வென்ற வரலாறு ஈழத்து தீண்டாமைப் போராட்டமாகும்.

ஆனால் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் தோல்வியில் முடிந்தமைக்கான காரணங் கள் சுயவிமர்சன ரீதியில் ஆராய்வது அவசியமாகும்.

1.ஒடுக்கப்பட்ட தேசிய இனமாகத் தமிழர்க ளைக் கருதாமல் ஆண்ட பரம்பரைக் கருத்தியலும் மூவேந்தர் உறவும் பண்டைய பெருமையும் இந்திய விசுவாசமும் மேற்குமைய ஏகாதிபத்திய பாசமும் தவறின் அடிப்படையாகும்.

2. ஜனநாயக விருப்பமின்மை, மனித உரிமையை மதியாமை, சமூகநீதியடிப்படையில் சாதியத்துக் கெதிரான கருத்தியலை மதிக்காமை.

3. பெண் விடுதலைக் கருத்தியலில் சமூக பங்களிப்பை ஏற்ற வெகுசனமார்க்கத்தை ஏற்காமல் இராணுவ பாசிச முனைப்புக் கொண்டமை.

4. சுயசார்புப் பொருளாதார நம்பிக்கையீனமும் உலகமயம், நுகர்வுப் பண்பாடு பற்றிய தெளிவீனம்

5. முஸ்லீம், மலையகத் தேசிய இனங்களை அங்கீகரிக்காமை அவர்களையும் தமிழ் தேசியமென வரையறுத்துக் கொண்டகுறுந்தேசிய மனப்பாங்கு.

6. சமூக விஞ்ஞான மாக்சிய கருத்தியலை கருத்தில் கொள்ளத் தவறியமை.

7. ஐக்கிய முன்னணித் தந்திரோபாயத்தை கைக் கொள்ளாமை.

8. ஆசிய ஆபிரிக்க - இலத்தீன் அமெரிக்க நாடுகளின் சர்வதேச உறவைக் கொள்ளாமல் ஆங்கில மோகமும் மேற்குமையஏகாதிபத்திய உறவும்.

9.மக்கள் மத்தியில் பன்மைத்துவ பண்பாட்டை மதிக்காமை மதசார்பின்மையை வலியுறுத்தாமையும்.

10.சிங்கள யூ.என்.பி. தலைவர்களுடனும் மகிந்த ராஜபக்ச ஆகியோருடன் இரகசிய- கள்ள உறவு பூண்டமை.

11.ஈழயுத்தம் பயங்காரவாத ஒழிப்புக்கான ஒன்றாக அக்கறை கொள்ளப்பட்ட அளவில் தேசிய இனப்பிரச்சினையின் இருப்பாகப் பார்க்கப்படவில்லை"

12.யூகோஸ்லாவியா, கியூபா, பொலிகியா, பிரேசில் போன்ற நாடுகளினதும் சோவியத் சீனப்புரட்சி களின் அனுபவத்தையும்கைக் கொள்ளாமை.

ஆகிய மேற்கொள்ள விடயங்களைக் கவனித்து எதிர்காலத்தில் விடுதலைத் தேசியத்தை வென்றெடுப்பதிலும் கவனம் செலுத்தல் வேண்டும்.

“அந்த வகையில் தேசியத்தை நிராகரிக்கும் சோஷலிசமோ, சோசலிசத்தை நிராகரிக்கும் தேசியமோ விடுதலைக்கான மார்க்கமாகவியலாது எனும் துலக்க மான உண்மையை ஹோரெஸ் பி.டேவிஸ் என்பவர் “தேசியம் பற்றிய மார்க்சியக் கோட்பாடு" என்னும் நூலில் காத்திரமான முறையில் அழுத்தி முன் வைத்திருப்பது ஓர்திருப்புமுனை" (பக் 221)

மக்கள் தம்முடைய உரிமைகளை நிறுவவும், ஒடுக்குமுறையை எதிர்க்கவும் பயன்படும் மிகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான வடிவமாக தேசம் உள்ளது. தேசியப் பிரச்சினை வெறும் முதலாளி வர்க்கத் துக்கானதல்ல. முழுச் சமூகத்துக்கு முரியது. (புக் 224)

"அந்த வகையில் மாக்ஸீயர்கள் தேசிய இயக்கங்களில் முழு ஈடு பாட்டுடன் பங்கெடுப்பது அவசியம், அதேவேளை சோசலிசப் பதாகையைத் தொடர்ந்து உயர்த்திப் பிடிப்பதும் அவசியம்; இல்லா விட்டால் தேசிய இயக்கங்களுக்குள் ஈர்க்கப்பட்டு, அவர்களுடைய தெளிவான அடையாளத்தை இழக்கும் பெரும் ஆபத்துக்குள்ளாவார்கள் (டேவிஸ்) (பக் 224)




"தமிழினத் தேசியகத்தின் சுயநிர்ணயத்துக்காக போராடுகையில் உலக மேலாதிக்கத்து எதிராக- சமூக ரீதியாக எதிர் கலாசார வடிவிலான பாட்டாளிவர்க் இயக்கத் தலைமையினை புதிய பண்பாட்டுப் போராட்டமாக முன்னெடுப்பதும் வாயிலாகவே வெற்றியை உத்தரவாதப் படுத்த இயலும்"

"புதிய பண்பாட்டு இயக்கம் என்பது மனுக்குல விடுதலையின் பகுதியான பேராட்டமாக அமைய வில்லை. களத்தினை சர்வதேசவாதப் பண்பாட்டு இயக்கம் வழங்க முடியும். அதுவே பொதுவுடைமையை வென்றெடுக்க ஏற்ற மார்க்கமாக அமையும்"

"பாட்டாளி வர்க்கக் கட்சி முன்னேறும் போது மட்டுமே விடுதலைக்கான திசையில் மக்களை வழிநடத்த இயலுமாகும்."

"பண்பாட்டு ஒடுக்குமுறைக்கு உள்ளாகிற மக்கள் மத்தியிலான பணி வெறும் அரசியல் பொருளாதாரத் தளம் சார்ந்ததாக அமையாது. அரசு அதிகார கோட்டைகளைக் கைப்பற்றுவதே "புரட்சி என்பது இடது சாரிகளின் மற்றொரு கோட்பாட்டு ரீதியான முன் முடிவு. அரசியலில் மட்டுமே அதிகாரம் இருக்கின்றது என்கிற கருதுகோளிலிருந்து இது வருகிறது."

"மாற்றப்படவேண்டும் என்று குறிவைத்துள்ள பகுதிகளை வெறும் பொருளாதாரம் மற்றும் அரசு ஆகிய வற்றுக்கு மட்டும் தொடர்புடையவையாக புரட்சிகரப் போராட்டம் சுருக்கிவிட்டது.

"அனைத்துப் பிரிவு மக்களிடமும் பண்பாட்டுத் தளப் பணி வலுவாக முன்னெடுக்க உணரப்பட்டும். இவ் வேளையில் அரசியல் பொருளியல் ஒடுக்கு முறைகளை விட அதிகமாகவே கவனம் செலுத்தியாக வேண்டும் என்பதைப்புரிந்து கொள்ளுவோம். (பக் 240)

"விடுதலைப் போராட்டம் என்பது அடிப்படையில் பண்பாட்டுடன் தொடர்புடையது விடுதலைப் போராட்டமானது எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு பண்பாட்டுச் செயற்பாடாகும்"

"பண்பாட்டுச் சிதைவோடு இணைந்து ஏகாதிபத்தியப் பிணைப்பிலிருந்து தேசிய விடுதலையை வென்றெடுக்கும் செயல் அடிப்படையில் பண்பாட்டுப் புரட்சி வடிவம் சார்ந்ததாகும்."

"இந்தியாவின் சமூக மாற்றப் புரட்சிகள் பண்பாட்டு வடிவங்களில் நடந்தேறியுள்ளன. பௌத்த எழுச்சி அத்தகைய பண்பாட்டுப் புரட்சி என்பதை எம்.என்.ராய் காட்டியிருந்தார். பக்திப் பேரியக்கம் நிலவுடைமைக் எழுச்சிக்கான ஒரு போராட்ட வடிவம் என்பதனைக் கைலாசபதி காட்டியிருந்தார்."(பக் 241)

"புதிய பண்பாட்டு இயக்கத்தின் இலக்கு பொதுவுடைமை புத்துலகம் படைப்பதாகும்."

## 5.

மேற் காட்டியவாறான "சாதியம் தேசம் பண்பாடு" என்ற நூல் பலவழிப் பயணங்களை நிகழ்த்தியுள்ளது. இவற்றை நாம் முடிந்த முடிபாகக் கொள்ள வேண்டியதில்லை.

வினாக்கள் பல எழுகின்றன. பதில்கள் பரந்த விவாதங்களின் மூலமும் நடைமுறை இயக்கச் செயற்பாட்டின் மூலமும் கண்டடையப்பட வேண்டியன வாகும்.

இந்நூலில் கூறப்பட்ட விடயங்களில் சில சொற்பிரயோகங்கள் தொடர்பாகவும் சில உள்ளடக்க முடிவுகள் தொடர்பாகவும் சந்தேகங்கள் எனக்கு உள்ளன.

முதலாவது இழிசனர் இலக்கியம் என்பதை பஞ்சமர் இலக்கியம் எனவும் ஈழத்தமிழ்த் தலித் இலக்கியம் எனவும் பெயர் மாற்றம்பெற வேண்டிய தேவையும் அவசியமும் ஏன் ஏற்படுகிறது.

இரண்டாவது தலித்தேசியம் என்பது இந்தியத் துணைக் கண்டத்துக்கு ஏற்புடையதாயினும் இலங்கையில் மலையகம், கிழக்கு, வன்னி, கிளிநொச்சி தவிர்ந்த யாழ் குடாநாட்டுச் சாதியச் சமூகத்துக்கு எவ்வகையில் பொருத்தமாகிறது.

மூன்றாவது, தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் கண்ட பன்முக வெற்றியின் பின்னால் யாழ்ப்பாணத்தில் சாதியின்பெயரிலான இரட்டைத் தேசியம் எந்தளவுக்கு ஏற்புடையது.


திணை அரசியல் அதிகாரத்தால் ஒடுக்கப்படும் சகல சாதியினருக்கும் இந்தியா போல், இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் முற்பொக்குத் தமிழ் தேசியத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கையில் தனித்தனிச் சாதிகளும் தேசியம் ஆகக் கருதும் அவலம் ஏற்பட்டு விடாதா? ஆகவே இச் சந்தேகங்களுக்கப்பால் புதிய பண்பாட்டுப் புரட்சியின் ஊடாக தேசிய விடுதலையையும் நாட்டின் இறைமையையும் சுதந்திரத்தையும் நமது வளங்களைப் பாதுக்காக்கவும் பரந்த தளத்திலான ஐக்கியமும் அதற்கான நடைமுறையும் செயலும் அவசியம் என்பது உணரப்பட வேண்டும்.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமையானும் கெடும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்த உரையாடலுக்குக் களமமைக்கும் நூல் ந. இரவீந்திரனின் "முற்போக்கு இலக்கிய எழுச்சி" நான்கு முன்னோடி முற்போக்கு எழுத்தாளர்கள் நூலை முன் வைத்து



**மு. அநாதரட்சகன்**

தமிழுலகில் ந. இரவீந்திரன் மார்க்சிய ஆய்வாளராகத் தொடர்ச்சியாக இயங்கி வரும் ஒருவர். மார்க்சிசத்தின் செயற்றிறனை விசாரணைக்குள்ளாக்கி புதிய விகாசங்களுக்கு நகர்த்த முனைபவர். இக்கோட்பாட்டின் வழி தமிழ் இலக்கியத்தை ஆய்பவர்களில்இவருக்கு முக்கிய இடமுண்டு. இவரது "முற்போக்கு இலக்கிய எழுச்சி - நான்கு முன்னோடி முற்போக்கு எழுத்தாளர்கள்" என்ற நூல் பூபாலசிங்கம் பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டது. இது ஆறு பிரதான தலைப்புக்களுடன், உபதலைப்புக்களையும் கொண்டுள்ளது. இலக்கியம், அரசியல், சமூகம் என்பவற்றின் மீது விமர்சனங்கள், உரையாடல்கள், தேடல்களை நிகழ்த்தும் வகையில் இந்நூலை எழுதியுள்ளார். இவை குறித்த விடயப் பரப்பில்சிந்திக்கத் தூண்டும் நூலாக இது உள்ளது.

இலங்கையில் முதலில் 1947 இல் உருவான எழுத்தாளர் சங்கம் என்பது "இலங்கை எழுத்தாளர் சங்கம்" இது இலங்கைக்கு வருகை தந்த இந்தியாவின் முற்போக்கு எழுத்தாளர் முஸ்க்ராஜ் ஆனந்த்தின் வருகையுடன் சாத்தியமாகியது. இதன் தலைவராக பேராசிரியர் விபுலானந்தர் இருந்துள்ளார். உப தலைவராக மாட்டின் விக்கிரமசிங்கவும், இணைச் செயலாளர்களாக எதிர்வீர சரத் சந்திர, கே.கணேஷ் செயற்பட்டனர் என நூலில் அறிய வருகிறது.

இதைத்தொடர்ந்து, 1954 ஜூன் 27 இல் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உருவானது. அதன் ஆரம்பகால உறுப்பினர்கள் மிகச் சிலரேயாவர். பின் நாடு தழுவி வியாபித்தமடைந்து எண்ணிறைந்த படைப்பாளிகளைக் கொண்ட பேரியக்கமாக எழுச்சி கண்டது. இவ்வியக்கம் சமூகப்பிரக்ஞையுடன் இலக்கியக் கோட்பாட்டின் அடிப்படையில் இலக்கிய, சமூக, அரசியல் களங்களில் தீர்மானங்களை எடுத்து இயக்கியது, 1956 ஜனவரி தைப்பொங்கலன்று "புதுமை இலக்கியம்" எனும் சஞ்சிகை வெளியிடப்பட்டது. இரண்டு தாசப்தங்களுக்கு மேலாகத் செயற்பட்டு ஈழத்து இலக்கியத்துக்கு மேலாகச் செயற்பட்டு ஈழத்து இலக்கியத்துக்கு ஆற்றிய பங்களிப்புச் செய்தமை பற்றி இந்நூல் விபரிக்கிறது.

அறுபதுகளில் சர்வதேசத்தில் மார்க்சியக் களத்தில் ஏற்பட்ட தத்துவார்த்தப்பிளவு இலங்கையிலும் தாக்கத்தை விளைவித்தது. இச்சூழல் இவ்வியக்கத்தை பலவீனப்படுத்தியது. பிரிந்து போனவர்கள் தேசிய கலை இலக்கியப் பேரவையை 1974 இல் உருவாக்கியமை. இவ்வமைப்பு மக்கள் இலக்கியத்துக்கு அழுத்தம் கொடுத்து வருவது குறித்து பல தகவல்களை ந. இரவீந்திரன் பதிவு செய்துள்ளார்.

ஈழத்தில் தமிழ்த்தேசியம் எழுச்சியடைந்த பின்னணியில், அது பற்றி சரியான நிலைப்பாட்டினை முற்போக்குச் சக்திகளால் எடுக்க இயலவில்லை. தமிழ் தேசிய வாதிகள் முற்போக்கு அணியினருக்கு முரணாகிச் செயற்பட்டனர் என்பது ஒரு புறமிருக்க, முற்போக்கு அணியினரும் இனத்தேசியத்தை மார்க்சியப் பிரயோகத்தில் தெளிவாக இனங்காண முடியாமல் போனமை தவறு. இதில் சரியான நிலையை எடுத்திருந்தால் ஈழத் தமிழ் தேசியத்தில் இடது சாரி அணியைப் பலப்படுத்தியிருக்கலாம்". அது சாத்தியமாகியிருப்பின் வலதுசாரி தமிழ்த்தேசியம் விளைவித்த பாதிப்புக்களை தவிர்த்திருக்கலாம் என்ற கருத்தையும் நூலில் முன் வைக்கிறார்.

முற்போக்கு இலக்கியம், காலமும் களமும் என்பது குறித்துப் பேசுகையில், "இலக்கியம் என்பது மக்கள் சமூகத்தின் வாழ்வாதாரங்களிலிருந்து வெளிக் கிளம்பிய கலைத்துவ ஆக்கம், அது மக்களது வாழ்வோடும் வரலாற்றோடும் தொடர்பற்ற சுயம்புவான படைப்பின் விளைவு அல்ல, என்பதோடு, மக்களது விருப்பார்வம், கற்பனை, ஈடுபாடு என்பவற்றின் வெளிப்பாடே இலக்கியம்" என வரையறை செய்கிறார்.

மேலும் யதார்த்தவாதம், சோசலிச யதார்த்த வாதம், மண்வாசனை இலக்கியம், மரபுப்போராட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழிசனர் வழக்கு, தேசிய இலக்கியம் என்பன பற்றியும் ஆங்காங்கே நூல் விபரிக்கிறது. முற்போக்கு இலக்கியத்தின் கருத்தியல் தளம், அதற்காக முற்போக்கு இயக்கம் ஆற்றிய பங்களிப்புகள் குறித்தும் பதிவிட்டுள்ளார்.

இந்நூலில், முற்போக்கு இயக்கிய இயக்கத்தின் முன்னோடிகள் என நால்வரை இனங்காட்டியுள்ளார். அவர்கள் என்.கே.ரகுநாதன், கே.டானியல், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன் ஆவர். அவர்களது இலக்கியப் பங்களிப்பினை எடுத்துரைத்துள்ளார்.



என். கே.இரகுநாதன் பற்றிக் குறிப்பிடுகையில் பழந்தமிழ் இலக்கியங்களில் களங்களைத் தேர்ந்து, மறுவாசிப்புக்குட்படுத்தி அழகியல் உணர்வுடன் சிறுகதைகளை எழுதியவர். அத்துடன் சிறுகதை வடிவத்தைச் சிதைக்காது. சாதிய எதிர்ப்புணர்வை வாசகனிடத்தில் விதைத்தவர். தனது எழுத்திலும், நடையிலும் பரிசோதனைகளை செய்ய முனைந்தவர் என சிலாகித்தக் கூறியுள்ளார். அவரது சிறுகதைத் தொகுதிகளான "நிலவிலே பேசுவோம்"(1962), "தசமங்கலம்"(1996) என்பவற்றில் உள்ள கதைகளில் இனம், சாதி, வர்க்கம் என்ற பேதமற்ற உலகைக்காண கனவு கண்டார். அவர் கூர்மையான சமூகப் வை கொண்டவர். அதனால். கோட்பாட்டின் அடிப்படையில், நெறிப்படுத்தப்பட்ட படைப்புக்களை நிதானமாகப்பிசகின்றி அவரால் எழுத முடிந்தது என என்.கே.ரகுநாதன் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அவரது சிறுகதைகள் வீரகேசரி தினகரன், சுதந்திரன், தாயகம், தாமரை, சரஸ்வதி, இலக்கியப்பாலம், சிரித்திரன் ஆகியவற்றில் சொந்தப் பெயரிலும், வெண்ணிலா, எழிலன், துன்பச் சூழல், வரையண்ணல் என்கிற புனைபெயர்களிலும் எழுதினார் என்ற அறியவராத பல தகவல்களை நூலாசிரியர் தந்தள்ளார்.

கே.டானியல் பற்றிக்குறிப்பிடுகையில், அவர் தனது முதலாவது சிறுகதைத் தொகுதியை 1963ல் "டானியல் கதைகள்" எனும் தலைப்பில் வெளியிட்டவர். இதற்கு பேரா.சு.வித்தியானந்தன் முன்னுரை வழங்கியிருந்தார். தமிழின் தலித் இலக்கிய முன்னோடி என இனங்காணப்பட்ட டானியல், தமிழரின் வாழ்வியல் முறைமையில் சாதியத்தின் வகிபாகத்தை முன்னிறுத்த தனது படைப்பாளுமையை வெளிப்படுத்தியவர் என மதிப்பிடுவதுடன், டானியல் சாதி எதிர்ப்புணர்வு காரணமாக பின்நாளில் சிறுகதைகளை விட நாவல்களிலேயே கவனம் செலுத்தியவர். அவ்வகையில் அவரது "பஞ்சமர்" நாவல் வரிசை முக்கியமானவை. அவற்றில் தான் விரும்பிய வர்க்கப் பார்வைக்கு அழுத்தம் கொடுக்கத் தவறினார் என்ற விமர்சனத்தையும் டானியல் மீது வைத்துள்ளார். தவிர, டானியல் பற்றி எதிரணியினர் வைத்த கடுமையான விமர்சனங்களுக்கும் பதிலளிக்கும் வகையில் தனது தர்க்க நியாயங்களை ந. இரவீந்திரன் இந்நூலில் பதிவிட்டுள்ளார்.

டொமினிக் ஜீவா பற்றிக் குறிப்பிடுகையில், அவரை சிறுகதையாசிரியராகவும், இதழியலாசிரியராகவும் இனங்கண்டு அவரது இலக்கியப்பங்களிப்பினை பதிவிட்டுள்ளார்.

தமிழகத்தில் 1960 இல் சரஸ்வதி வெளியீடாக வந்த ஜீவாவின் "தண்ணீரும் கண்ணீரும்" சிறுகதைத் தொகுதி முதன்முதலில் தமிழில் சிறுகதைக்கான சாகித்திய மண்டலப்பரிசினைப் பெற்றது. ஜீவாவின் முதல் சிறுகதை 1950 இல் சுதந்திரனில் வெளிவந்தது. தொடர்ந்து "பாதுகை", "சாலையின் திருப்பம்", "வாழ்வின் தரிசனங்கள்" ஆகிய தொகுப்புக்களையும், பின்னர் 1996 இல் தனது ஐம்பது கதைகளைக் கொண்ட "டொமினிக் ஜீவா சிறுகதைகள்" என்ற பெருந்தொகுப்பினையும் வெளியிட்டவர். "மல்லிகை" மாதாந்த இதழை 47 வருடங்களாகத் தொடர்ச்சியாக வெளியிட்ட சாதனையாளர். மல்லிகைப் பந்தல்வாயிலாகப் பல நூல்களைப் பதிப்பித்தவர். மல்லிகையில் பலருக்கும் களம் கொடுத்து பலரைப்படைப்பாளிகளாக்கியவர். இது ஜீவா ஆற்றிய தமிழ்ப்பணிகளில் முதன்மையானது. ஜீவாவின் சிறப்பு தனது படைப்புக்களில் உழைப்பாளர்களது மதிப்பை பாத்திரவார்ப்பின் மூலம் வெளிப்படுத்தியமை என அவர் பற்றி பல விடயங்களை ந.இரவீந்திரன் நூலில் தந்துள்ளார்.

அடுத்து, நீர்வை பொன்னையனின் படைப்பாளுமை குறித்து இந்நூல் பல தகவல்களைத் தருகிறது. நீர்வை பொன்னையன் யாழ் குடாநாட்டில் நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நீர்வேலி அத்தியார் கல்லூரியில் ஆரம்பக்கல்வியைக் கற்று, பின்னர் இந்தியாவில் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். நாடுதிரும்பியவர் முற்போக்கு இலக்கிய இயக்கத்தில் இணைந்ததுடன், 1947ல் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியிலும் இணைந்து தொழிற்சங்க முழுநேர ஊழியராக இயங்கியவர். கலைமதி, வசந்தம், தேசாபிமானி, தொழிலாளி, ஆகிய இதழ்களின் ஆசிரியர் குழுவில் இடம்பெற்றவர். இவரது சிறுகதைத் தொகுப்புக்கள் என வெளிவந்தவை. "மேடும் பள்ளமும்"(1961), "உதயம்"(1970), "பாதை"(1997), "வேட்கை"(2000) "ஜென்மம்"(2005), "நிமிர்வு"(2009), "காலவெள்ளம்"(2010), "நீர்வை பொன்னையன் கதைகள்"(2007).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது படைப்புக்கள் உண்மையில் நடந்தேறி சம்பவங்களைக் கருவாகக்கொண்டவை. வர்க்க உணர் வோடு சாதியத்துக்கெதிராக எழுதியவர். மக்களது வாழ்வியல் தனத்திலுள்ள பிரச்சனைகளை எழுதுகை யில் அழகியலிலும் கவனம் கொண்டிருந்தார். நீர்வை பொன்னையனின் சிறப்பு கல்வித் தகமைகளிலிருந்தும், அரசதொழிலை நாடவில்லை. முற்போக்கு இலக்கிய இயக்கம், கம்யூனிஸ்ட்கட்சி, தொழிற்சங்கம், இடதுசாரி அரசியல் எனப் பலகளங்களிலும் தீவிரமாக இயங்கி யமை எனலாம்.

முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் வரலாற்று முக்கியத்துவமுடைய சாதனை இவ்வியக்கம் நடை முறைப்படுத்திய "இலக்கிய ஜனநாயகக் கோட்பாடு" என்பதாகும். அடிநிலை மக்களின் பிரச்சனைகள் அந்த மக்களாலேயே எழுதப்பட்டதற்கு இக்கோட்பாடு வழி வகுத்தது. இது இலக்கிய ஆக்கம், பரவல், வாசிப்பு என்பவற்றில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. ஒடுக்கப் பட்ட தாழ்த்தப்பட்ட நிலையிலிருந்தோர் தமது அனுபவங்களை தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைத் தாங்களே வலிசுமந்து எழுதினர். அடக்கு முறைக் குள்ளானோரே, அவ் வடக்குமுறைக்கெதிராக எழுத்தை ஆயுதமாகத் தூக்கினர் என்பது முக்கியமாகும். இதனை கே.டானியல், டொமினிக் ஜீவா, என்.கே.ரகுநாதன், தெணியான், நந்தினிசேவியர், யோ.பெனடிக்ற் பாலன் இன்னும் பலர் அத்தகையவர்களே.

இந்த மாற்றம் தமிழிலக்கிப் பாரம்பரியத்தில் முதல் தடவையாக நிகழ்ந்தவொன்று என பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நூற்றாண்டின் ஐம்பதுகளின் பிற்பகுதி யில் மண்வாசனை, மரபுப்போராட்டம், தேசிய இலக்கி யம் என்பன முனைப்படைந்த வேளை அவற்றின் உள்ளடக்கப்பெறுமானம் குறித்து மரபுவாதிகளிடமிருந்து வாதப்பிரதி வாதங்கள் எழுந்தபோது, க.கைலாசபதி, அ.ந.கந்தசாமி, கா.சிவத்தம்பி, ஏ.ஜெ.கனகரட்னா, பிரேம்ஜி ஆகியோர் வாதங்களில் ஈடுபட்டனர் எனவும் சாதியம், வர்க்கம், இனத்தேசியம், இரட்டைத்தேசியம் பற்றிய விடயங்களையும் ஆய்வு நோக்கில் ந.இரவீந்திரன் வெளிப்படுத்தியுள்ளார். இவற்றைவிட ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக்கான இலக்கியம் என்ற வகையில் முற்போக்கு இலக்கியத்துக்கும், தலித் இலக்கியத்துக்கும் தன்னளவில் இணக்கம் இருக்கவே செய்கிறது. சிந்தனையில் சுதந்திரம், செயற்பாட்டில் ஒற்றுமை என இரண்டும் முற்போக்கு இலக்கியத்தில் ஒருங்கிணைந்த இயங்கியதென்ற செய்தியையும் நூலில் பதிவு செய் துள்ளார்.

முற்போக்கு இலக்கியம் தமிழ்த்தேசியத்தக்கு எதிரிடையான தென்ற கற்பிதம் சிலவட்டாரங்களில் முன்வைக்கப்பட்டது. முற்போக்கான தமிழ்தேசியத்துக்கு அது என்றும் எதிரிடையானதல்ல. தமிழ்த்தேசியத் தின் வலதுசாரிப் பண்பு இடதுசாரிப் பண்பினை நீர்த்துப்போக காரியங் களை ஆற்றியதென்ற குறிப்பும் நூலில் உள்ளது.




தவிர, மார்க்சிய வட்டாரத் துக்குள் முன்னர் பேசத் தயங்கியவையும் இந்நூலில் பேசப்படுகிறது. குறிப்பாக இடதுசாரிகள் தமிழ் தேசியம் பிரச்சனையில் எடுத்த முடிவுகள், அவற்றிலுள்ள குறைநிறைகளை பரிசீலனைக்கு உட்படுத்தியுள்ளார். அது பற்றி மார்க்சியப் பார்வையுடன் தனது கருத்தை திறந்தமனதோடு முன் வைத்துள்ளார். சர்வதேச, தேசிய ரீதியில் தற்காலிகப் பின்னடைவைச் சந்தித்த இடதுசாரி மார்க்சிச இயக்கத்தில் அகப்புறத் தவறுகளை அறிவியல் ரீதியில் திருத்தியமைக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

முற்போக்கு இலக்கியப்படைப்பாளிகள் மீது அவர்களது அழகியல் சரிவு பற்றிய விமர்சனங்கள் எப் போதும் எழுப்பப்படுவதுண்டு. மாவோவின் புகழ்பெற்ற மேற்கோளை இங்கு கவனங்கொள்வது நல்லது.

"எல்லாக்காலத்துக்கும், இடத்துக்கும் பொருந் தக்கூடிய தூய்மையான, முழுமையான அழகியல் தகுதிப்பாடு என்ற ஒன்று இருக்க முடியாது"

அழகியல் வாதிகளால் உயர்ந்த கலை என்று கருதியவற்றுக்கு அடியில் ஒருவர்க்க நலன்சார் முக்கியத்துவம் உண்டு. ஆளும் வர்க்க நலனைப் பாதிக்கின்ற அந்தக் கலையும் உயர்ந்த கலையென்று பாராட்டப்படுவ தில்லை. ஒரு கலைப்படைப்பின் சிறப்பு அழகியல் பார்வையின் அடிப்படையில் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது என்பதும் தவறு. உண்மையில் வர்க்கப் பார்வையானது, அழகியல் தகுதிப்பாட்டோடு இணைந்திருப்பதே சிறப்பானது என ந.இரவீந்திரன் கூறி யுள்ளார்.

முற்போக்கிற்கும், நாவலருக்கும் இடையிலான முடிச்சு நீண்ட காலமாகவே பேசப்பட்டு வருகிறது. இந்நூலிலும் அது வருகிறது. நாவலரை முழுமையாக நிராகரிக்க வேண்டியதில்லை. அவர் தனது காலத்தில் வகித்த பங்கு முற்போக்காகவே இருந்திருக்கலாம். ஆனால், நாவலருக்கு சாதியச் சிந்தனைகளை அதற் குரிய பிற்போக்குச் சார்பினை மறந்து புதிய அர்த்தங் களைக் கற்பிப்பது முற்போக்காகி விடாது.

நூலின் பக் 166ல் அறுபதுகளுக்குப் பின் சாதியத்துக்கு எதிராக சிறுகதைகளைப் படைத்தவர்கள் என சிலரை வரிசைப்படுத்தியதில், தெணியானின் பெயர் விடுபட்டுப்போயுள்ளது. ஈழத்தில் சாதியத்துக்கு எதிராக எண்ணிக்கையில் அதிகம் சிறுகதைகளை எழுதியவர் தெணியான் என்பது முக்கியமானது.


இறுதியாக, இந்நூலில் ஈழத்து இலக்கியப் பரப்பில் முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் வரலாற்றுப் பாத்திரம், அறுபதுகளிலிருந்த எண்பது கள் வரை அதன் இயக்கம் எவ்வாறு வேகமெடுத்தது என்பதை வாசிப்பினூ டாக உணர முடிகிறது. கூடவே, தமிழர் அரசியல், இடதுசாரி அரசியல், இலக்கியம் பற்றியெல்லாம் முக்கியமான பல கருத்துக்கள், தகவல்கள் இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அவை பற்றிப் பல வகையில் நம்மத்தியில் விவாதங் களைத் தூண்டு கின்ற தன்மை யினதாக இந்நூலினை ந.இரவீந்திரன் எழுதி யுள்ளார் என்பது சிறப்புக்குரியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளிமைத் தோரணங்களின் அசைவாய் "ஏன்" கதைத் தொகுப்பு

இ.சு முரளிதரன்




என்.எஸ்.வாகீசன் என்ற புனைபெயரில் ந.ரவீந்திரன் எழுதிய "ஏன்" கதைத் தொகுப்பானது எளிமைத் தோரணங்களின் அசைவாக வாசகனை ஈர்க்கும் பண்புடன் காணப்படுகின்றது. மரணவெடில் வீசிய காலமொன்றின் அப்பட்டமான பதிவுகளை இனங் காட்டுகின்றது. 1991 இல் தேசிய கலை இலக்கியப் பேரவையோடு இணைந்து "சவுத் ஏசியன் புக்ஸ்" வெளியீடாக பதிக்கப்பெற்றுள்ளது. பதினொரு கதை களை உள்ளடக்கிய தொகுப்பாக அமைந்துள்ளது.

ஈழவிடுதலைப் போர்க்காலத்தின் பதிவாகவே அனைத்துக் கதைகளும் காணப்படுகின்றன. போர்க் காலத்தின் மீதான விமர்சனமாகவும், நடப்பியல் அனுபவ மாகவும் ஐந்து கதைகளை இனங்காண முடிகின்றது. பத்துக்குமப்பால், கோபாலின் ஒரு நாள் பங்கர் அனுபவங்கள், அவள் வருவாள், திசை தெரியாத பயணம், ஏன் ஆகிய கதைகள் அமர்காலத்தின் யாதார்த்தத்தை துல்லிமாக இனங்காட்டுகின்றன. ஏனைய ஐந்து கதைகளும் சமூக விசாரணையாகமைகின்றன. யமலோக சஞ்சாரம் என்னும் ஒரு கதை மட்டும் மூட நம்பிக்கை யைத் தகர்க்கும் விதமாக எழுதப்பட்டுள்ளது.


போராளிகள் மக்களுக்கான போராட்டத்தை முன்னெடுக்கிறார்கள். மக்களோ கடல் கடந்து வெளி நாடுகளில் சென்று தஞ்சமடைகிறார்கள். பணமற்றவர் கள் மட்டும் தயாகத்தில் இருக்க வேண்டிய சூழல் என்பதாக "பத்தக்குமப்பால்" கதையின் தரிசனம் அமைந் துள்ளது. பேராட்டத்தில் இணைந்த மகனைப் பணங் கொடுத்து எடுத்து வெளிநாட்டுக்கு அனுப்ப நினைக்கும் தாயின் கோணமும், அதற்கு எதிரான மகனின் கோணமும் பதிவாகியுள்ளன. பதுங்கு குழி வெட்டும் தொழிலாளி யின் அவலத்தை விளக்கும் பண்போடு "கோபாலின் ஒரு நாள் பங்கர் அனுபவங்கள்" கதை காணப்படுகின்றது. பங்கர் வெட்டுவதற்குப் பொதுமக்களை இயக்கம் பிடித்துச் செல்லும் காலமொன்றினையும் கதை இனங் காட்டு கின்றது. கதையின் இறுதியுத்தத்தில் பொம்மரின் தாக்குத லுக்கு அஞ்சி அயலிலுள்ள வீட்டுப்பதுங்கு குழியில் இறங்க முயலும்போது ஏற்படும் சிரமத்தை நகைப்பும் அவலம் சங்கமித்த சமூக விமர்சனமாகப் பதிவு செய்துள்ளார்.

இந்திய இராணுவ வீரனைக் காதலித்து, தாக்குதல் குறித்த இரகசியத்தைச் சொல்லி படை யினரைத்தப்பிக்க வைக்கும் "விஜிதா" என்ற பெண், போராளிகளால் அழைத்துச் செல்லப்படுகிறாள். "மரணவீட்டை நடத்துமாறு" செய்தி கிடைக்கிறது. எனினும் இறந்து போனதாக நம்பப்பட்ட பிறிதொரு நபர் உயிரோடு வந்தமையால், விஜிதாவின் தாய்க்கு தனது மகளும் வருவாள் என்ற நம்பிக்கை உண்டாகிறது. விஜிதா திரும்பி வந்தால் சமூகத்தின் பார்வை எவ்வாறு இருக்கும் என்பதையும் இனங்காட்டிக் கதையை நிறைவு செய்கிறார். "திசை தெரியாத பயணம்" கதை இலங்கை அரசியலை குறியீட்டிலே பேசுகின்றது. தேசப் பிரிவினையைக் காணிப் பிரிவினையாகப் பதிவு செய்கிறது. காணியைப் பிரிக்கச் சட்டம் இடந்தராது, சகோதரச் சண்டையின்றி ஒற்றுமைப்படல் போன்ற பல்வேறு விடயங்களை பேரரசியலை மையமாகக் கொண்டு சிற்றரசியலின் நோக்கு நிலையிலே பேசுகின்றார். "ஏன்" என்ற கதையானது கொழும்பு நோக்கிய பயணத்தின் துன்பியலைப் பதிவு செய் துள்ளது. ஒரு காலத்தின் அப்பட்டமான பதிவாக அமைந்துள்ளது.


காசா லேசா, சமநிலை, நல்லகாலம், அகதி, எனக்கும் உறவு உண்டு என்னும் கதைகளில் சமூக விமர்சனத்தினை இனங்காண முடிகிறது. பணத்திற்கான சமூக மதிப்பினைப் பேசுகின்ற கதையாக காசா லேசா அமைந்துள்ளது. சம்பளக் காசோலை மாற்றச் செல்லும் ஆசிரியரை மதிக்காத வங்கி ஊழியர் ஐந்து இலட்சம் வைப்புச் செய்ய வருபவரை மதிக்கும் நிகழ்வினூடாக கதையை நகர்த்தியுள்ளார். இயக்கத்திற்குச் சென்ற மகனை மீட்டு எப்படியாவது வெளிநாட்டுக்கு அனுப்பும் நினைவோடு கதைநிறைவு பெறுகிறது. கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழுமையும் பணத்திற்கான சமூகச் கௌரவத்தையே இனங்காட்டுகின்றது. இக்கதையின் மற்றொரு பக்கத்தை “சமநிலை” கதை வெளிப்படுத்துகிறது. பணத்தை மதிக்காமல் தேசத்தை நேசிக்கும் மருத்துவரின் தியாக சேவையை அக்கதை நடுவண் இழையாகக் கொண்டுள்ளது. உயிர்ச் சமநிலை குலைந்தால் உயிரிழப்பு. சமூகத்தின் சமநிலை குலைந்தால் கொந்தளிப்பு. அமைதியை உண்டாக்க எந்த சமநிலையை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற வினாவோடு நிறைவு செய்கிறார். பெண்கள் சமூகத்திலே படுகின்ற வலியை “நல்ல காலம்” கதை இனங்காட்டுகின்றது. பெண் விடுதலை சார்ந்த கருத்துகள் புதைந்திருந்தாலும், ஆண்களால் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்ற பெண்மையின் துயரைக் கதை வெளிப்படுத்துகின்றது. “சொந்த நாட்டிலே எதை இழந்தாலும் உரிமையும், தேசமும் இருக்கும். வெளிநாட்டுக்கு ஓடி விடக்கூடாது. சொந்த நாட்டிலே எவரும் அகதியாவதில்லை. வெளிநாடு செல்பவரே அகதி” என்னும் எண்ணத்தைக் கட்டியெழுப்புவதாக அகதி கதை அமைந்துள்ளது. சகோதரிகளின் வீட்டு உரிமம் குறித்த இழை வழியே கதை நகர்த்தப்பட்டுள்ளது.

இத்தொகுப்பிலுள்ள மாறுபட்ட கதையாக “யமலோக சஞ்சாரம்” அமைந்துள்ளது. அறுவை சிகிச்சையின் போதான மயக்க நிலையில் யமலோகம் வரை சென்று மீண்டதாகக் கருதுகின்ற பாட்டிக்கு இனித் தொண்ணூறு வயதிலே தான் மரணம் என்று சாத்திரியார் சொல்லி விடுகின்றார். பொம்மர் அடியில் பேரனைக் காப்பாற்றும் முயற்சியில் பாட்டியின் உயிர் போகிறது. மரண வீட்டுக்கு வந்த சாத்திரியார் நெஞ்சாங் கட்டை வைத்த பிறகும் நம்பிக்கையை இழக்கவில்லை என அங்கதமாகக் கூறிக்கதையை நிறைவு செய்கிறார்.

தொல்பொருளாய்வாளர் ஒருவருக்கு புராதன வாழ்விடம் ஒன்று கிடைத்தால் எவ்வாறு மகிழ்வாரோ, அத்தகைய மகிழ்ச்சியை “ஏன்” என்ற இந்தத் தொகுப்பு வாசனுக்கு வழங்கும் எனத் திடமாக நம்புகிறேன். அற்புதமான அதிர்வுகளை நிகழ்த்தக் கூடியகதைகளை எழுதிய என்.எஸ்.வாகீசன் என்னும் ந.ரவீந்திரன் அவர்களுக்கு வாழ்த்துக்கூறி நிறைவு செய்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ.ஆரூரன்

# மதம் பற்றிய மாக்சியக் கோட்பாட்டில் மாற்றம் வேண்டும் எனக் கூற விளையும் கலாநிதி ந.இரவீந்திரனின் "மதமும் மார்க்சியமும் – தமிழ்ப் பண்பாட்டுப் பார்வை"






நான் சிறையில் இருந்த போது என் கைக்குக் கிடைத்திருந்த ஜீவநதி இதழில் (கார்த்திகை 2013) அக்காலத்தில் ஜீவநதி வெளியீட்டில் உருவாகிய தெணியான் ஐயாவின் "குடிமைகள்" நாவலை முன் வைத்த கலாநிதி ந.ரவீந்திரனின் விரிவான கட்டுரை அதில் காணப்பட்டது. பொருட் செறிவுள்ள கட்டுரை அது. அதன் மூலமே அவரை அறிந்து கொண்டேன். தேவ தாசன் ஐயாவிடமிருந்தும் தோழர் பிரதீபனிடமிருந்தும் அவர் குறித்து வினவி மேலதிக விவரங்களை அறிந்து கொண்டேன். அவரைத் தொடர்ந்தேன்.

காலப்போக்கில் நான் எழுத ஆரம்பித்தேன். ஒக்ரோபர் புரட்சியின் நூற்றாண்டை முன்னிறுத்தி யாவருங்கேளிர் என்ற நாவலை 2017 இல் வெளியீடு செய்தேன். அந் நாவலுக்கு இரவீந்திரன் சேர் கருத்து ரைக்க வேண்டும் என்ற அவா என்னுள் எழுந்தது. அவரிடமிருந்து வெளிவரும் கருத்துரை என் நூலுக்கு உரை கல்லாக அமையும் என்ற நம்பிக்கை. என்னால் அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. தம்பி பரணீதரன் இரவீந்திரன் சேரை என் தந்தையோடு தொடர்புபடுத்தினார். தந்தையார் இரவீந்திரன் சேரை நேரில் சந்தித்து யாவருங் கேளிர் நாவலை அவரிடம் சேர்ப்பித்தார். பின்னர் என்னிடம் கூறும் போது "டொக்ரர் இரவீந்திரன் எளிமையான மனிதராக இருக்கின்றார். நன்கு பழகியவர் போல் இயல்பாகப் பேசுகின்றார்" என்ற செய்தியையும் கூறி வைத்தார். என் நாவலுக்கு அவர் ஜீவநதியில் கருத்துரை எழுதியதை இப்போது நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

அவரின் நூல்களைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டபோது தந்தையார் மூலம் தொடர்பு கொண்டேன். தனது நூல்களில் சிலவற்றை அன்பளித் திருந்தார். இவற்றுள் "மதமும் மார்க்சியமும்" என்ற நூலும் ஒன்று. ஜீவநதி வெளியிடவிருக்கும் கலாநிதி ந.இரவீந்திரன் சிறப்பிதழுக்கு நானும் ஒரு கட்டுரை எழுதுவதற்கு வாய்ப்பளித்த தம்பி பரணிக்கு நன்றி கூறியபடி அந்நூலிற்கு என் பார்வையைக் கூறுவதில் மகிழ்வடைகிறேன்.

"மதம்ஓர் அபினி. இந்த உலகத்துயரங்களை மறக்கச் செய்து, நிதர்சன உலகைத் தலைகீழாக்கி வைத்துக் காட்டப்படும் மேலுலக நம்பிக்கையில் மக்களை மூழ்கடித்து வெறும் ஆறுதலில் மயங்கச் செய்யும் அபினி, மதம்" – இவ்வாறு கூறுகின்றது மாக்சியம்.

மாக்சியம் எப்போதும் அகநிலை வாதத்தை அனுமதிப்பதில்லை வரலாற்றுப் பொருள் முதல் வாத அடிப்படையில் புறநிலை யதார்த்தத்தை விஞ்ஞானப் பார்வையோடு அணுகும். "மதம் ஓர் அபினி" என்ற மாக்சியத்தின் கறாரான பார்வையில் நூலாசிரியர் முற்று முழுதாக உடன்படவில்லை. அதற்காக அவர் மாக்ஸை குறை கூறாது, இந்தியா தொடர்பில் மாக்ஸ் உரிய முறையில் ஆய்வு செய்யவில்லை என்ற நிலைப்பாட்டில் உள்ளார்.

//ஏகாதிபத்திய வாதிகள் எழுதிய குறிப்புகளி லிருந்து தான் மாக்ஸ் இந்தியா பற்றி அறிய முடிந்தது. அவர் இந்தியாவில் நேரடி அனுபவம் பெற்றிருப்பின் மதம் பற்றி பார்வையில் புதிய அத்தியாயம் சாத்தியப்பட்டி ருக்கும்.//(பக் 21) மேற்படி கருத்தை வலியுறுத்தம் முகமாக தமிழர் வரலாற்றில் நிகழ்ந்த மாற்றங்களுக்கு மதம் முற்போக்கு பாத்திரத்தினை வகித்திருப்பதாகவும் – மதம் ஓர் அபிணி என்பதோடு மட்டுபத்திவிட முடியது என்பதற்கு வரலாற்று ஆதாரங்களை முன்வைக்க முனைந்துள்ளார். பெருவாரி மக்கள் மதத்தின் பின்னால் அணிதிரண்டு நிற்கையில் நாத்திக வாதம் பேசுவதன் மூலம் அதனை வெறுத்தொதிக்கி மக்களிடமிருந்து அந்நியப்பட்டு போவதைக் காட்டிலும் மக்கள் அலை யோடு சேர்ந்தியங்கி அவர்களை புரட்சிக்குரிய சக்தி களாக அணியப்படுத்துவது என்பது சிறந்தது. இப்படி யான எண்ணத்தில் தவறு காணமுடியாது. சமூக மாற்றத்தையோ, புரட்சியையோ விரும்பும் சக்திகள் அதனைப் பயன்படுத்திக் கொள்ள இயலும். ஆயினும் உரிய விஞ்ஞானப் பார்வையின்றி இவ்வாறான விடயங் களில் கருத்துக்களை முன்வைக்கும் வேளையில் குளிக்கப்போய் சேறு பூசும் நிலை ஏற்பட்டுவிடும்.

எல்லாவற்றிற்கும் முன்பாக தமிழ்ப் பண்பாட்டில் மதம் வகித்த பாத்திரத்தைக் காணுதல் அவசியமானது. சங்ககாலத்தில் தமிழர் மெய்யியலில் பொருள் முதல் வாதக் கண்ணோட்டமே இருந்துள்ளது. இயற்கை வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு, நடுகல் வழிபாடு போன்றவற்றோடு ஐந்திணைகளுக்குரிய கடவுள்களும் இருந்துள்ளனர். குறிஞ்சி முருகன்; நெய்தல் - வருணன்; மருதம் - இந்திரன்; முல்லை மாயோன்; பாபலை- கொற்றவை போன்றவர்கள் திணைத் தெய்வங்கள்.

இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் என்கின்ற நால்வேதங்களை ஏற்கும் பிராமண மதம் /வைதீக மதம் தமிழ் மொழியை ஏற்கவில்லை; நீசபாசை என்றது. விலங்கு பலியிடலை ஏற்கின்றது. சமணம் உயிர்க் கொலையைக் கண்டிக்கிறது; புலால் மறுப்பை ஏற்கிறது. பௌத்தமும் உயிர்க்கொலையைக் கண்டிக்கிறது. இந்த மூன்று மதங்களும் தென்னாட்டிற்குள் நுழையும் போது பிராமண மதத்தை தமிழர்கள் நிராகரித்தனர். பௌத்த சமயணம் போன்றவற்றின் வாழ்கை நெறியை விரும்பியிருந்தனர். தமிழ்க் காப்பியங்கள் கூட பௌத்தம் சமணம் போன்றவற்றில் வயப்படும் அளவிற்கு குடிமக்கள் ஏற்றிருந்தனர். பின்னர் களப்பிரர் என்ற அந்நியர் நுழைகின்றனர். (கி.பி 225 – கி.பி650) வரை அவர்களின் ஆட்சியின் போது அவர்கள் ஆட்சி மொழியாக பாளியை முன்வைக்கின்றனர். பண்பாட்டில் தமிழ்மொழி தரந்தாழ்த்தப்படுகின்றது. தமிழிசைகர் நாடக சங்கீதமாகிறது; பண் என்பது இராகமாகிறது. அவர்கள் பௌத்தத்தையும் சமணத்தையும் ஆட்சி மதமாக்குகின்றனர். ஒரு காலத்தில் மக்களால் தன்னார்வமாக விரும்பப்பட்ட பௌத்தமும் சமணமும் ஒடுக்கு முறையாளரின் மதத் திணிப்பாலும் அதீதமாகத் துறவறத்தைப் பொதித்தமையாலும் வெறுப்புக்குள்ளாகின்றது. இப்படியான சூழலில் தான் பிராமண மதம் தன்னுள் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டு பக்திப் பேரியக்கத்தின் வாயிலாக வெளிப்படுகின்றது. நீச பாசை என்று ஒதுக்கிய தமிழ் மொழியை தேவாரங்கள் மூலம் மதிப்பளித்து, விலங்கு பலியிடலையும் மறுத்து களப்பிரருக்கு எதிராக மேற்கிளம்புகின்றது. வேதத்தை தமிழ்ப்படுத்தி - வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது... என்கின்றது. தமிழோடு இசை பாடல் மறந்தறியேன் போன்றவற்றக் குறிப்பிடலாம். முருகனும் ஸ்கந்தனும் ஒன்று; மாயோனும் விஷ்ணுவும் ஒன்று; கொற்றவையும் உமையும் ஒன்று என்ற கருத்துருவாக்கம் ஏற்படுத்தப்பட்டு வைதீகம் கோலோச்ச ஆரம்பிக்கின்றது.

கி.பி 5ம் நூற்றாண்டில் காரைக்கால் அம்மையாரால் உருவாக்கப்பட்ட பக்திப் பேரியக்கம் ஞான சம்பந்தர் அப்பர் போன்றோரால் வளர்த்தெடுக்கப்பட்டது. களப்பிரர் ஆட்சிக்கு அது முடிவு கட்டினாலும் பக்திப் பேரியக்கத்தின் மூலம் புரட்சி நிகழ்ந்ததாகக் கொள்ள முடியாது உள்ளது. ஓர் ஒடுக்குமுறை இயந்திரம் தன்னால் பழைய வடிவில் நின்று செயற்பட முடியாத போது தன்னுள் புதிய மாற்றங்களை உள்வாங்கி, சீர்திருத்தம் செய்து வெளிப்படுவதைப் புரட்சி எனக் கொள்ள முடியுமா? பிராமண மதம் சில சீர்திருத்தங்களை மேற்கொண்டு பக்திப் பேரியக்கத்தின் வழி வெளிப்பட்டு ஆதிக்கத்தைப் நிலைநாட்டியதோடு வர்ணாசிரமத்தை இறுக்கமாக்கி சட்டியிலிருந்த அடுப்புக்குள் வீழ்ந்த நிலையை உருவாக்கி விட்டது. நூலாசிரியர் பக்திப் பேரியக்கத்தின் மூலம் புரட்சி நிகழ்த்தப்பட்டதாக வாதிடுகிறார். வைதீக மதம் காலத்திற்கு ஏற்ப தன்னை மாற்றி வெளிப்படுத்தியதை தந்திரம் என்றே கருத வேண்டியுள்ளது.

நாவலரின் பங்குப் பாத்திரம் பற்றி ஆசிரியர் குறிப்பிடும் போது, //நாவலர் மதவாதிக்குரிய, சாதிய வாதிக்குரிய பங்குப் பாத்திரத்தை வகித்தவரல்ல. ஏகாதிபத்தியத்தின் பண்பாட்டுத்திணிப்புக்கும் அழிப்புக்கும் எதிராக எமது பண்பாட்டைப் பாதுகாக்கின்ற கடமையை மேற்கொண்ட மதத் பற்றாளர்//(பக் 50)

//நாவலரின் சைவப் பாதுகாப்பு ஏகாதிப்பத்திய எதிர்ப்புக் குணாம்சம் உடைது//(பக் 50)

நாவலர் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பண்பாட்டுத் திணிப்பை வெறுத்தார் என்று கூறும் போது... வெஸ்லி குருவானவரோடு எவ்வாறு அவரால் ஒட்டி உறவாட முடிந்தது? விவிலியத்தை தமிழாக்கம் செய்து ஏகாதிபத்திய கிறிஸ்தவ மதம் தமிழரிடையே பரவ எவ்வாறு வழி செய்ய முடிந்தது? திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் மூலம் உருவாகிய மணிப்பிரவாள நடையை ஈழத்தில் பரவும் வகை செய்ததை எப்படிப் பார்ப்பது? அச்சு இயந்திரப் பயன்பாட்டினால் தமிழ்மொழிப் பரவுகை தமிழகத்திலிருந்து இங்கு வரவில்லை எனில் சமஸ்கிருத மயப்பட்ட மொழியாக இன்னொரு மலையாளமாக யாழ்ப்பாண தமிழ்மொழி மாறியிருக்கும் அல்லவா? கந்த புராண கலாசாரத்தை உருவாக்கி வெள்ளாள சமூகத்தை சற்சூத்திரர் ஆக்கி ஏனைய சிறுதெய்வங்களை அவர் இழிவுபடுத்தினார். "சமணச்செட்டிச் சிக்குக் கோயிலா?" என்று கண்ணகி வழிபாட்டை இழிவு செய்தார்.

ஸ்கந்தனும் முருகனும் ஒன்றல்ல என்பதை தெளிவுபடுத்தி தமிழர் மெய்யியலை மீட்டெடுத்தல் என்பதையே இப்போது செய்ய வேண்டியுள்ளது. சதுர் வர்ணக் கோட்பாட்டினை வரித்துக் கொண்டிருக்கும் இந்து மதத்தால் ஒரு போதும் முற்போக்குப் பாத்திரத்தை வகிக்க இயலாது. நிலவுடமைச் சமூகம் வளர்ச்சியற்ற யாழில் வர்ணா சிரம தர்மம் நிலை பெற்றதற்கு நாவலரே காரணம். யாழில் அது நிலை பெற்ற அளவிற்கு நிலவுடமையாளர் அதிகம் உள்ள மட்டக்களப்பில் கூட அது நிலை பெறவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும்.

சமூகத்தை ஆய்ந்திடும் போது நாவலர் போன்றோருக்கு தெரிந்தோ தெரியாமலோ வெள்ளை அடிக்கப்படுமாயின் ஆசிரியர் மீதான தனிமனித விமர்சனமாக அவை அமைந்துவிடும்.

எனக்குத் தெரிந்தவரை கலாநிதி இரவீந்திரன் அவர்கள் ஒரு நல்ல மனிதர்; இனிய வார்த்தைகளைப் பேசுபவர். மாற்றுக் கருத்தாளர்களோடும் நட்புப் பாராட்டுபவர். இத்தகைய மனிதர்களை காண்பது அரிது.

//எனக்கு எந்தச்சாதி மீதும் அபிமானம் கிடையாது. சாதியம் ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்கிற உணர்வுடனேயே எனது எழுத்துக்கள்...// (என்னுரை) மேற்படி கருத்திற்கு நூறு சதவீத உரிமை கொண்டவர் இரவீந்திரன் சேர்.

ஆயினும் மக்களை விடுதலைக்காக அணி திரட்ட வேண்டும் என்ற நன் நோக்கிற்காக அவர் எழுதுகையில் மேற்படி விடயங்களைக் கருத்தில் கொள்ளாதுவிடின் அவர் மேல்சேறு பூசப்படுவதையும் தவிர்க்க முடியாது! தற்போது ஈழத்தில் வாழும் அறிவு ஜீவிகளில் ஒருவரான இரவீந்திரன் சேர் இன்னும் பல்லாண்டு ஜீவித்திருந்து சமூக சேவை புரிய வேண்டும் என உளங்கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒக்டோபர் புரட்சி நடைபெற்று நூறு வருடங்கள் கழிந்துவிட்டன. சோவியத் அமைப்பு மறைந்து இருபத்தி ஆறு வருடங்கள் கழிந்துவிட்டன. ரக்ஷ்யா பல சிக்கல்களுக்கூடாக ஒரு முதலாளித்துவ வல்லரசாக மறுபிறவி எடுக்கும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளது. சீனா கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் முதலாளித்துவப் பாதைக்குத் திரும்பி வீறுநடையில் வல்லரசாக எழுகிறது. இன்று சோக்ஷலிச முகாம் என ஒன்று இல்லை. ஆனால் சோக்ஷலிசம், கொம்யூனிக்ஷம் எனும் கருத்துக்கள் மறையவில்லை. அவை பற்றிய விவாதங்கள் தொடர்கின்றன. முதலாளித்துவமே வரலாற்றின் இறுதி நிலையம் எனும் வாதம் எடுபடவில்லை. அதனால்தான் எதிர்கால நோக்கில் இருபதாம் நூற்றாண்டின் தோல்வியடைந்த சோக்ஷலிச வரலாற்றைத் திருப்பி பார்க்கிறோம், மீளாய்வு செய்து விவாதிக்கிறோம், நமது முன்னைய நிலைப்பாடுகளையும் நம்பிக்கைகளையும் கேள்விக்குள்ளாக்குகிறோம், சுயவிமர்சனம் செய்கின்றோம்" என்று "ஒக்டோபர் 1917: ஒரு மாபெரும் புரட்சியின் நினைவுகூரலும் விமர்சனமும்" என்ற கட்டுரையின் முடிவுரையில் (சமுத்திரனின் எழுத்துக்கள்-தொகுதி 02, 2023:179) இடதுசாரிய அரசியலிலும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் செயற்பாடுகளிலும் ஆர்வம் கொண்டிருந்த என்.சண்முகரத்தினம் குறிப்பிடுகின்றார். அந்தக் கட்டுரையில் சார் மன்னன் காலத்தில் அவனது ஆட்சிக்கு எதிராக எழுச்சிபெற்ற அமைதியான மக்கள் போராட்டத்தையும் அந்தப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு நிகழ்ந்த இரத்தம் தோய்ந்த ஞாயிறு பற்றியும் லெனினின் போல்க்ஷெவிக் கட்சிக்கும் பூர்சுவா ஜனநாயகப் புரட்சிக்காகச் செயற்பட்ட மென்க்ஷெவிக் கட்சிக்குமான முரண்பாடுகள் பற்றியும் ரொஸ்கியும் லெனினும் இணைந்து செயலாற்றிய விதம் பற்றியும் ஆழமான விளக்கங்களைத் தருகின்றார். நவீனத்துவத்தின் பெருவளர்ச்சியின் பின்னான இன்றைய காலத்தின் உலகப் போக்கில் நவதாராளவாதம், உலகமயமாக்கம், பண்டமயமாக்கம், பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கம் என்பவற்றின் பின்னணியில் மிகக்கூர்மையான விமர்சன நோக்கினை வேண்டிநிற்கின்ற ஒன்றாக சோக்ஷலிசம் மற்றும் கம்யூனிசம் அமைந்துபோனதை அந்த விளக்கங்கள் சிந்திக்கச் செய்கின்றன.

இன்றை உலகின் அரசியல், பொருளாதார ஒழுங்குகள் மற்றும் போக்குகளில் சோசலிசம், இடதுசாரியம், கம்யூனிசம் என்பவற்றின் பலம், பலவீனம், நிலைபேறு என்பவை குறித்து, அந்தக் கொள்கைகளை ஆழமாக நம்பி ஏற்றுக்கொண்டு செயலாற்றி வருபவர்களே சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். காலப் போக்குக்கு ஏற்றவகையிலான "மாற்றுக்களைக்

# மாற்றுக்களைக் கண்டடையும் இயங்கியலுக்கான சுயவிமர்சன நோக்காக "ஏகாதிபத்தியம்-சுயநிர்ணயம்-மக்கள் இலக்கியம்"

இ.இராஜேஸ்கண்ணன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டடைதல்” அதன் அடிப்படை நோக்கமாக அமைந்துள்ளது. கலாநிதி ந.இரவீந்திரன் அவர்கள் இடதுசாரிய கொள்கையின் வழிநின்று தனது ஆய்வுகளை செய்பவர். தனது சமூகச் செயற்பாட்டு தளத்துக்கான அடிப்படையான கருத்துநிலையாக இடதுசாரியத்தை வரித்துக்கொண்டவர். எப்போதும் ஒடுக்கப்பட்ட, நலிந்த, விளிம்புநிலையில் வாழ்கின்ற மக்களின் வாழ்விலான பிரச்சினைகள் மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பில் அக்கறை மிக்கவராகவே தன்னை இனங்காட்டி வருபவர். சீனச்சார்பு இடதுசாரிய நிலைப்பாட்டை ஆதரித்து, அதற்கமைய புரட்சியாளர் கே.ஏ.சுப்பிரமணியம் அவர்களின் வழித்தடத்தில் பயணித்தவர். அந்தக் கொள்கைப் பற்றுறுதியோடு கலை, இலக்கியம், அரசியல், சாதியம், சமயம், பொருளாதாரம் முதலான விடயங்களை அணுகி ஆய்வுகளைச் செய்துவரும் ஒரு புலமையாளர். அவரது ஆய்வுப் புலமையையும் கொள்கைப் பிடிப்பையும் தெளிவாகக் காட்டுவனவாக அவரது எழுத்துக்கள் பலவும் அமைந்துள்ளன. “இந்துத்துவம் இந்து சமயம் சமூக மாற்றங்கள்”*(2003)*, “இந்துத்துவக் காலச் சூழலின் மறுவாசிப்பில் பாரதியின் மெய்ஞ்ஞானம்”*(2003)*, “இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்”*(2014)*, “சாதி தேசம் பண்பாடு“*(2014)* முதலான நூல்களின் வரிசையில் இப்போது வெளிவருகின்ற இந்த நூலும் தனித்துவமானது.


கலாநிதி ந.இரவீந்திரன் அவர்களின் “ஏகாதிபத்தியம், சுயநிர்ணய உரிமை, மக்கள் இலக்கியம்“ எனும் இந்த நூல் மிகப்பரந்து விவாதிக்க வேண்டிய பொருளை மிகச் செறிவாகப் பேசுகின்றது. இதன் செறிவு கனதியை அதிகப்படுத்தியுள்ளது. விரித்துரைக்கப்பட வேண்டிய தேவையை வேண்டிநிற்கின்றது. எனினும், கம்யூனிசம், எதிர்-கம்யூனிசம்(anti - communism) எனும் எதிர்நிலைகளிடையே தேசியம், சுயநிர்ணயம், மக்கள் இலக்கியம் ஆகியன தொடர்பான சிந்தனைகள் எவ் வாறு இயங்குகின்றன என்பதை இந்த நூல் விளக்கிச் செல்கின்றது. உலகளாவிய ரீதியில் ஏகாதிபத்தியத்தின் பொது விதிகள் எவ்வாறு வெவ்வேறு வடிவங்களில் நிலைபெற்றன? அந்த ஏகாதிபத்திய அலைகளிடையே சோக்ஷலிசம் மற்றும் கம்யூனிசம் எவ்வாறு நிலைபெறச் செய்யப்பட்டது? தேசியவாதிகளுக்கு கம்யூனிஸ்ட்டுக்கள் ஆரம்பநிலைகளில் ஏன் தேவைப்பட்டார்கள்? அடையாள அரசியலின் எழுச்சியின் பின்னர் தேசியவாதிகளுக்கு கம்யூனிஸ்டுக்கள் ஏன் வெறுப்புக்குரிய பாத்திரமானார்கள்? 21ஆம் நூற்றாண்டுக்கான சோஷலிசம் எவ்வாறு உலக அரங்கில் நிலைபெற முடிந்தது? பின்நவீனத்துவ சூழமைவில் அடையாள அரசியல் மேலோங்கி வளர்ந்தமைக்கான பின்னணி எவ்வாறமைந்தது? ஏகாதிபத்தியத்தின் புதிய வடிவங்களாக எழுச்சிபெற்ற சூழமைவை வெற்றிகொள்வதில் முற்போக்காளர்களிடம் நிலவிய பிற்போக்குத்தனங்கள் எவை? சந்தைச் சோஷலிசத்தின் பெருவளர்ச்சியும் அதன் விளைவுகளும் எத்தகையவை? நவதாராளவாத சிந்தனைகள் முனைப்படைந்த சூழமைவில் மார்க்சியர்களிடையே திரிபுவாதங்கள் எவ்வாறு உருப்பெற்றன? இடதுசாரிகள் மாற்றத்துக்கான இயங்கியலைக் கருத்திலெடுக்காமல் பழமைவாத நோக்கில் இயங்கி கண்டுகொள்ள மறுத்த விடயங்களும் அவர்களது தவறுகளும் எவை? தேசிய எழுச்சிக்கான இலக்கியத்துக்கும் மக்கள் இலக்கியத்துக்கும் வேறுபட்ட நிலைப்பாடுகள் எவை? சமூகநீதியை வென்றெடுப்பதில் இலக்கியத்துக்கான பங்களிப்பு எத்தகையது? அழகியல்வாத முடக்கத்துக்கு ஆட்பட்டுப்போன இரசனை மையமான இலக்கியங்களின் வாழ்வியல் பங்களிப்பு என்ன? போன்ற கேள்விகளுக்கான பதில்களை விவாதிப்பதாக இந்த நூல் அமைந்துள்ளது.

மேலே குறிப்பிட்ட வினாக்களை மையப்படுத்திய விவாதத்தின் அடிச்சரடாக அமைவது பின்காலனிய, நவதாராளவாத அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களிடை கார்ல் மார்க்ஸ், லெனின், மாவோ சேதுங் முதலானவர்களால் முன்வைக்கப்பட்ட சிந்தனைகள் நிலைபெற முடிந்ததா? என்பதும் கம்யூனிஸ்டுக்கள் தம்மை எவ்வாறு சமூக மற்றும் அரசியல் செயற்பாடுகளிலும் கலை, இலக்கியச் செயற்பாடுகளிலும் தகவமைத்துக் கொண்டனர்? என்பதுமாகும். ஒரு வகையில் இந்த நோக்கம் இடதுசாரிகளின் செயலாற்றுகை மீதான இடதுசாரி ஒருவரின் தீவிரமான மீள் மதிப்பீடாகவும் அமைந்துபோனது. இந்த மீள்மதிப்பீடு ஆங்காங்கே நவதாராளவாத உலக ஒழுங்கில் முதலாளித்துவ நாடுகளுக்கு சவாலான சீனாவின்(அல்லது மாவோவின் சிந்தனைகளின்) போக்குக்கான நியாயப்பாடுகளை முன்வைப்பதாகவும் அமைந்துள்ளது. இதனால் தாராளவாத, பூகோளமயமாக்க ஒழுங்கின் பின்னணியில் வைத்து தேசியம், அடையாள அரசியல், வர்க்க வேறுபாடு, சாதியம், இலக்கியம் என்பவை தொடர்பாக பேசுகின்ற பனுவலாக இந்த நூல் விரிவாக ஆராயத்தக்கது.

சோவியத் யூனியனின் சரிவின் பின்னர் மார்க்சியம்-அன்ரி மார்க்சியம், கம்யூனிசம்-அன்ரி கம்யூனிசம் என்று ஒரு நிகழ்போக்காக மாறியுள்ள விவாதங்களிடையே “அன்ரி” அணியின் வாதங்களே ஜனரஞ்சக அங்கீகாரத்தைப் பெற்றுவிடுகின்றன. அந்த அங்கீகாரத்துக்கான வாய்பை மார்க்சியம் மற்றும் கம்யூனிசத்தின் நீண்டகால வரலாற்று இயங்குதளமே தீர்மானித்தது என்ற சுயவிமர்சனம் இந்த நூலின் முதன்மையான அம்சமாகியுள்ளது. இந்த விமர்சன நோக்குகள் இந்த நூலின் பெரும்பாகத்தை நிறைத்துள்ளது. இலங்கையின் அனுபவத்தில் இடதுசாரிகள் எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் தேசியவாதிகளோடு கைகோர்த்திருந்தனர், சமநீதியின் நிலைபேற்றுக்காக சித்தாந்த தெளிவுடன் எவ்வாறு குரல்கொடுத்தும் செயற்பட்டும் வந்தனர், முதன்மையான தருணங்களில் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற பெருங்குடையின் கீழ் எவ்வாறான தவறுகளுக்கு காரணமாயினர்-தடம் புரண்டுபோயினர் என்பவை பற்றிய நுணுக்காமான விசாரங்களை இந்த நூலாசிரியர் செய்கின்றார். இந்த இடத்தில் “பின்நவீனத்துவம் பிறகான மார்க்சியம்“ என்ற நூலில் “கம்யூனிஸ்டாக இருப்பதை விடவும் ஆன்டி கம்யூனிஸ்டாக இருப்பது இலகுவானது, வசதியானது என்பதனால் பலர் ஆன்டி கம்யூனிஸ்டுகளாக இருக்கலாம். கம்யூனிஸ்டுகள் அறிவு மற்றும் ஆய்வு மனம் கொண்டவர்கள். அவர்களையே எதிர்த்து நிற்கும்போது பேரறிவும், பேராய்வும் நிறைந்தவர்களாக தாங்கள் தோற்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














கொள்ளலாம் என்பதற்காகக்கூட பலர் ஆன்டி கம்யூனிஸ்டுக்களாக இருக்கலாம். ஆன்டி கம்யூனிஸ்ட்டாக இருப்பதற்கு இவையெல்லாம் தேவையில்லை என்பதால் பலர் அப்படியிருக்கலாம்"(பிரேம் 2019:123) என்று குறிப்பிடப்பட்டிருந்த கருத்தை சிந்திக்கலாம். உண்மையில் கம்யூனிசத்தை எதிர்ப்பவர்களின் விமர்சனம் கம்யூனிசத்தை நிராகரிக்கும் வகையில் அமையும். அது கம்யூனிசத்தின் மீதான தூற்றுதலாகவும் அமையும். ஆனால், இந்த நூலாசிரியர் சித்தாந்த நிலையில் ஒரு கம்யூனிஸ்டாக இருந்தபடி அதன் இயங்கியலின் ஏற்ற இறக்கங்களை மனந்திறந்து பேசுவது ஈண்டு கவனிக்கத்தக்கது.

எவ்வாறு தேசியம், சுயநிர்ணயம், விடுதலைத் தேசியம், அடையாளம் என்பவற்றின் மீதான விமர்சனங்களைப் முன்வைக்கின்றாரோ அவ்வளவுக்கு இடதுசாரிகள் தவறிப்போன சந்தர்ப்பங்கள் குறித்த விமர்சனங்களையும் வெளிப்படையாக கருத்தாடுகின்றார். "புறக்கணிப்புகள் வளர்வதும் பேரினவாத அச்சுறுத்தல்கள் வலுப்பட்டு வருவதும் குறித்துத் தமிழர்கள் மத்தியில் இயங்கிய இடதுசாரிகள் கண்டுகொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டுப் புறக்கணிக்கத்தக்கதல்ல", "இளம் தலைமுறையினரான பலரிடம் வெளிப்பட்ட மார்க்சிய நாட்டத்தையும் விடுதலைத் தேசிய உணர்வையும் சரியான திசைமுகப்படுத்தலுக்கு ஆட்படுத்தவல்ல செயல் திட்டங்களை இடதுசாரிகள் முன்னெடுக்காது இருந்தார்கள் என்பது இன்னொரு உண்மை", "திராவிட, பிராமணிய, தலித்திய, வர்க்கவாத முடக்கங்களுடன் மார்க்சியச் சொல்லாடல்கள் இடம்பெறும் நிலை இன்றும்கூட நிலவுகின்றது", "சில மார்க்சியர்களும் பின்காலனித்துவம் பற்றிப் பேசும் அவலம் இன்று நிலவுகின்றது", "இத்தனை அழிவுகளுக்கும் அரசியல் பின்னடைவுகளுக்குமான பழியைத் தனியே வலதுசாரிகளின் தலைமேல் மட்டும் போட்டுவிட்டு இடதுசாரிகளான நாம் வாழாதிருந்துவிட இயலாது", "அந்தக் கூட்டரசாங்கம் வேறு தவறுகள் பலவற்றை மேற்கொள்வதற்கு இடதுசாரிகள் எதிர்ப்புக் காட்டாதது மட்டுமன்றி, ஏகாதிபத்திய எதிர்ப்பின் பேரால் அவர்களும் காரணிகளாக அமைந்தனர்", "பேரினவாத மேலாதிக்க அரசியல் பொறியைத் தகர்க்க இயலாத பலவீன நிலைக்கு அன்று மட்டுமன்றி இன்றைய வரையிலும் சிங்கள இடதுசாரிகள் ஆட்பட்டுள்ளனர்" என்று பல்வேறு சந்தர்ப்பங்களில் இடதுசாரிகளின் "இடறல்களை" விமர்சனம் செய்யும் நூலாசிரியர் "சந்தைச் சோசலிச முறை வாயிலாக மகத்தான சாதனைகளின் களமாக சீனா வளர்ந்து வருகிறது" என்றும் "இன்றைய ஏகாதிபத்திய எதிர்ப்பு அணிக்கு தலைமை தாங்கும் வகிபாகத்தை மக்கள் சீனம் ஏற்றுக்கொண்டுள்ளது. இத்தகைய வரலாற்று மாற்றப் போக்கை அனைத்து மார்க்சியர்களும் சரியான வகையில் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதற்கில்லை" என்றும் குறிப்பிடுகின்றார். இந்தக் கருத்துக்களைக் கூர்ந்து கவனிக்கும் ஒருவர் சீன ஆதரவு இடதுசாரிகள், மார்க்சி யர்கள், சிங்கள இடதுசாரிகள் என்ற நிலைப்பாடு களுக்கிடையிலான நூலாசிரியரின் நுணுக்காமான வேறுபடுத்தல்களை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர முடியும். இன்றைய பூகோளமயமாக்க தாராளவாத உலக ஒழுங்கில் சீனாவின் "சந்தைச் சோசலிச முறை" நிலைப்பாட்டை விதந்துரைக்கும் நூலாசிரியர் குறிப்பிடுகின்ற "மார்க்சியர்கள்" என்பவர்கள் யார்? என்ற ஒரு வினா படிப்போரிடத்தில் எழவே செய்கின்றது. இது இன்னொரு விவாதத்துக்கான களத்தை திறக்கிறது. இது "மொஸ்கோ","பீக்கிங்" அணிகளின் சித்தாந்த வேறுபாட்டின் அடிப்படையிலான இயங்கியல் வேறுபாட்டுடன் கூடிய விவாதமாக அமையும்.

தேசியம் எனும் புனிதக் கருத்துருவாக்கம் ஏகாதிபத்தியத்துக்கான எதிர்ப்பாக வெளிப்படும் நிலையிலாயினும் சரி, தேச எல்லைக்குள் விடுதலைத் தேசியமாக முனைப்புப் பெற்றாலும் சரி, அதனுள் ஒரு மேலாதிக்கம் உள்ளடங்கியபடியே இருக்கும் எனவும் அது "ஏகாதிபத்தியச் சுயநிர்ணயமாக" நிலைபெற்று தேசத்துக்கு உட்பட்ட நலன்களைப் பாதிக்கும் என்பதை இந்த நூல் பிரதான ஒரு விவாதமாக கிளர்த்துகின்றது. இந்த "மேலாதிக்கத் திணையின் சுயநிர்ணம்" பற்றிய தெளிவான புரிதல் இலங்கைத் தேசத்தின் இன்றைய நிலையில் தர்க்கரீதியில் சிந்திக்கவேண்டிய விடயமாக உருப்பெற்றுள்ளது. "தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தித் தமது அரசியலை ஆரம்பித்து இயக்கிய ஐம்பதாம் ஆண்டுகளில் இடதுசாரிகளுடன் இணைந்து சில போராட்டங்களில் பங்கேற்ற காரணத்தால் படிப்படியா கத் தமிழ் மக்கள் மத்தியில் அவர்களுக்கான வெற்றி வாய்ப்புகள் பெருகி வந்தன" என்று தேசியத்தை மையப் படுத்திய நூலாசிரியர் குறிப்பிடும் கருத்தை "தனியே பேரினவாத எதிர்ப்பை மட்டுமே கொண்டிருக்கும் ஒரு அணி விடுதலைத் தேசிய நாட்டம் கொள்ள இயலாமல் மேலாத்திக்கத் தேசியத்துக்கு ஆட்பட்டுச் சிதைவுறும் என்பதற்கான எடுத்துக்காட்டாகத் தமிழரசுக் கட்சி அமையலாயிற்று" என்ற கருத்துடன் இணைத்துப் பார்க்கும்போது விடுதலைத் தேசியத்தை முன்னிறுத்துபவர்களிடத்தில் உள்ளமைய வேண்டிய இடதுசாரிய சிந்தனா குழுமத்தின் அவசியத்தை புரிந்துகொள்ள முடிகின்றது. விடுதலைத் தேசிய சிந்தனையுள் மார்க்சியம், இடதுசாரியம், மாவோயிசம் உள்ளடங்க வேண்டிய அவசியம் இன்றைய பூகோள அரசியல் போக்கில் எவ்வாறு அமைதல் வேண்டும் என்ற பெரியதொரு தத்துவார்த்த விசாரணைக்கான வாயிலைத் திறக்கின்றது.

ஏகாதிபத்தியம், சுயநிர்ணய உரிமை தொடர்பில் விவாதங்களைக் கிளர்த்தும் ஒரு நூலில் "மக்கள் இலக்கியம்" பற்றிய கருத்து ஏன் அவசியம்? என்ற கேள்வி எழுவது இயல்புதான். "மக்கள் இலக்கியம்" எனும் விடயம் இலங்கைத் தமிழ்ச் சூழலைப் பொறுத்தமட்டில் ஒரு பேரியக்கமாக தொழிற்பட்டது. அதற்கு ஓர் அரசியல் கருத்துநிலை இருந்தது. வ.அ.இராசரத்தினம், மஹாகவி ஆகிய இருவரும் முற்போக்கு இலக்கிய இயக்கத்தின்




அடையாளத்தை வரித்துக்கொள்ளாது இருந்தமைக்கான நியாயப்பாட்டை நூலாசிரியர் வலியுறுத்தி விரிவாகப் பேசுகின்றார். அதன் அரசியலை விளக்கியுரைக்கின்றார். அதற்காக புதுமைப்பித்தன், பாரதியார், சிங்காரவேலர் போன்றோரின் இலக்கியம்சார் அரசியல் நிலைப்பாடுகளை இணைத்துக் கருத்தாடுகின்றார். வ.அ.இராச ரத்தினம், மஹாகவி போன்றோர் பற்றிய முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் மதியுரைஞர்களாக விளங்கியவர்களின் "பாராமுகம்" பற்றிய விவாதங்கள் சில ஏற்கனவே இலக்கிய உலகில் இருந்து வந்தமை நாம் அறிந்ததே. மேலாதிக்க தேசியம், விடுதலைத் தேசியம் என்று ஆசிரியர் குறிப்பிடும் இரு தளங்களில் நின்று கொண்டு இந்த இலக்கிய கர்த்தாக்களை புரிந்து கொள்ள முற்படுவதன் பின்னால்கூட ஓர் அரசியல் பண்பாடு உள்ளது. அது "இலக்கியத்தின் அரசியல்" பற்றிய கருத்தாடலாக பரிணமிக்கின்றது. இந்த அரசியலைக்கூட மார்க்சியம், மாவோயிசம் என்று "வகிடெடுத்துவிட்ட" இடதுசாரிய நோக்குநிலையில் நின்றுதானா பார்க்கவேண்டும்? அல்லது மேலாதிக்க தேசியம், விடுதலைத் தேசியம் என்ற பிளவுபட்ட நோக்கில் தானா புரிந்துகொள்ளவேண்டும்? என்ற வினாக்களாக நிலைபெறுகின்றன. இந்த வினாக்கள் "அரசியல்-இலக்கியம்-பண்பாடு" எனும் மூன்று தளங்களையும் இணைத்துக்கொண்டு விரிய வேண்டியது என்பதை கலாநிதி.ந.இரவீந்திரன் அவர்களின் இந்த நூல் செறிவாக கருத்தாடுகின்றது.

"இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்"(2014), "சாதி தேசம் பண்பாடு"(2014) ஆகிய நூல்கள் குறிப்பிடும் விடயப் பொருள்களின் ஒரு நீட்சியாகவே இரவீந்திரன் அவர்களின் இந்த நூலைப் படிக்க முடிகிறது.

உலகளாவிய தாராளவாதத்தின் எழுச்சி, முதலாளித்துவம் தனக்கான எதிர்ப்புக்களைச் சமாளித்து தகவமைத்துக்கொள்ளும் பாங்கு, மார்க்சியத்தையோ கம்யூனிசத்தையோ சித்தாந்த நிலையில் ஆதரித்து வந்தவர்களின் நெகிழ்வின்மையும் நெறி பிறழ்வுகளும் என்பவற்றைக் கருத்தாடும் பின்புலத்தில் நின்றபடி தேசியம், இனவிடுதலை, சாதியம், அடையாளம், இலக்கியம் குறித்த பல்வேறு விவாதங்களை கிளர்த்துகின்ற இந்த நூல் முன்னர் குறிப்பிட்ட நூல்களின் பேசுபொருள் எல்லையைக் கடந்து புதிதாக எதனைச் சொல்லிவிட்டு அமைதிகொள்கிறது? என்ற வினாவுக்கான தகுந்த பதிலின்றி மனதில் நின்று விடுகின்றது. ஆயினும், இலங்கையின் அரசியல், சமூக, பண்பாட்டு விசாரங்களில் வரலாற்றில் தவிர்க்க முடியாத பன்முகத் தன்மையுடன் கூடிய திறந்த உரையாடலாக விரியவேண்டிய ஓர் உரையாடலை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கான அவசியத்தையும் உந்தலையும் இந்த நூல்களின் வாயிலாக இரவீந்திரன் அவர்கள் தருகிறார் என்பது காலத்தேவையாக அமைந்துவிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் தமிழ்ச் சூழலில் முற்போக்குச் சிந்தனை - இலக்கியம் தோன்றி அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. முற்போக்கு என்பது இருபதாம் நூற்றாண்டின் அதிசயமல்ல. மனிதகுல வரலாற்றின் "புதுவது" நிகழும் அநேக சந்தர்ப்பங்களில் அது முற்போக்காகவே இருந்து வந்திருக்கின்றது. இயற்கைநெறிக்கால வாழ்வு - இலக்கியம் அதற்கு முற்பட்டவாழ்வின் நின்றும் மாறுபட்ட முற்போக்காகவே இருந்திருக்கும். வள்ளுவரின் வருகையும் எழுத்தும் கருத்தும் முற்போக்கை தமிழில் உருவாக்கின. இந்தியவியல் பார்வையாக இருந்த சிந்தனை காலனிய நவகல்வி மரபால் உலகந்தழுவிய பார்வையாக மாற்றியது. புதிய புதிய சிந்தனைகளும், கருத்துக்களும், இலக்கிய வடிவங்களும் தமிழுக்கு வந்து சேர்ந்தன. தமிழை வளப்படுத்தின. சுகந்திர இலங்கையிலும் தமிழகத்திலும் மார்க்சியம் செல்வாக்குறத் தொடங்கியது.


பெரியாரின் சிந்தனை வழி உருவான நாத்திகவாதம் தமிழகத்தை முழுமையாக ஆட்கொண்டது. உலக ஏகாதிபத்தியத்துக்கு மாற்றான மார்க்சியம் கீழைநாடுகளில் கூர்மையடைந்தது. மதத்தை நிராகரிக்கும் மெய்யிலாகவே அது அதிகம் அடையாளப்படுத்தப்பட்டது. மதங்கள் மூடநம்பிக்கைகளின் அடையாளம் எனறே பல மார்சியவாதிகள் பேசியும் எழுதியும் வந்ததும் உண்மையே. ஆனால் தொம்சனின் மாணவர்களான கைலாசபதியும், சிவத்தம்பியும் மதவியல், மெய்யியல் தொடர்பான ஆய்வுகளை மார்க்சிய கண்ணோட்டத்தில் முன்வைக்கத் தொடங்கினர். கைலாசபதியின் "பேரரசும் பெருந்தத்துவமும்" இந்தவிதமான ஆய்வியல் முறைமையில் புதிய பாய்ச்சலை ஏற்படுத்தியது. வானமாமலையின் "இந்தியதத்துவ மரபும் மார்க்சிய இயக்கவிலும்" இந்த வகைப்பாட்டை நேரடியாகப் பேசும் நூலாகும். தேவிபிரசாத் சட்டோபாத்தாயா வின் வங்காள, ஆங்கில நூல்களும் கட்டுரைகளும் மார்க்சிய தத்துவத்தில் நின்று மதத்தையும் இந்திய மெய்யியலையும் நுண்ணாய்வுக்குட்படுத்திய, விதந்துரைக்கத்தக்க ஆய்வுகள் ஆகும். இந்த வழியில் எஸ்.தோத்தாத்திரி, கே.வரதராஜன், கே.தாமோதரன், வெ.கோவிந்தசாமி, நா.முத்துமோகன், ஞானி என பயணித்துக் கொண்டிருப்பவர்களை இன்னும் பட்டியற்படுத்தலாம்.

மதம் சார்ந்த மார்க்சியப் பார்வையை மிகத் தெளிவாக முன்வைக்கும் முக்கிய நூலாக சட்டோபாத்தாயாவின் மதமும் சமூகமும்/Religion and Society எனும் நூலைக் குறிப்பிடலாம். தமிழில், தமிழ்ப்பண்பாட்டுப் பார்வையில் மார்க்சிய அணுகுமுறையில் மதம் பற்றிய ஆய்வாக வந்த பெருநூல் ஈழந்து மார்க்சிய ஆய்வாளரான கலாநிதி ந. இரவீந்திரனின் "மதமும் மார்க்சியமும்" எனும் நூலாகும். *2006* இல் முதற்பதிப்பும் *2021* இல் தமிழக "சவுத் விஷன் புக்ஸின்" பதிப்பாக இரண்டாம் பதிப்பும் பெற்றது இந்நூல்.

மார்க்ஸ் "மதம் ஓர் அபினி" என்று கூறியதையும் "பழைய இனக்குழு மரபை மீறாத தேங்கிப் போன

# மார்க்சிய நோக்கில் மதங்கள் பற்றிய மறுவாசிப்பு: ந.இரவீந்திரனின் மதமும் மார்க்சியமும் பற்றிய ஒரு குறிப்பு

தி.செல்வமனோகரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம்" என இந்தியாவைப் பற்றிக் குறிப்பிட்டதையும் எடுத்துக்காட்டி பிரான்சில் நடைபெற்ற புரட்சி பற்றிய மார்க்ஸின் பார்வை மாற்றம் இவற்றிலும் நடந்திருக்க வாய்ப்பிருக்காதா என்கின்றார் இரவீந்திரன். மார்க்ஸ் எப்போதும் தேங்கிய குட்டையாக இருக்க விரும்பிய தில்லை. ஏகாதிபத்திய எழுத்துக்களின் வழியே தான் இந்தியாவையும் இந்திய மதங்களையும் மார்க்ஸ் அறிய முடிந்தது என்பது இங்கு கவனத்திற்குரியது. நுகர்வுப் பண்பாட்டுக் கெடுதிகளைத் தகர்த்து புதிய பாதை வகுக்க முயலும் புதிய தலைமுறையுடன் இரவீந்திரன் இது பற்றிய உரையாட விரும்புகின்றார்.

மதம், மதவடிவங்கள், நிறுவனமயமாதல், புனிதநூல், பண்பாட்டில் இவற்றின் வகிபாகம், பண்பாடுப் புரட்சியில் மதங்களின் சாத்தியம் உள்ளிட்ட பல விடயங்களையும் முன்வைத்துத் தன் உரையாடலை

1. மதம் குறித்து மறு மதிப்பீட்டு அவசியம்
2. மதங்கள்
3. பண்பாட்டுத்தளத்தில் தமிழின் தனித்துவப் பங்களிப்புக்கள்
4. மார்க்சிய நிலைப்பாட்டில் மதம்
5. புதிய பண்பாட்டின் எழுச்சி

எனும் தலைப்புக்களின் கீழ் நிகழ்த்துகின்றார். இன்றைய சூழலில் ஏற்பட்டுள்ள அடிப்படை மதவாதம் இரத்த ஆறுகளின் பெருக்கத்திற்கு அடிப்படையாக இருப்பதைச் சுட்டிக்காட்டும் இரவீந்திரன், மார்க்சிய நோக்கில் மதங்கள் பற்றிய புதிய கருத்தாக்கத்தை, மறுவாசிப்பை நிகழ்த்துகின்றார்

இந்துத்துவம் என்பது வேறு, இந்துசமயம் என்பது வேறு. இந்துத்துவத்தின் வரலாறு இருபதாம் நூற் றாண்டுக்கு உரியது என்பதனை தெளிவுறுத்தி இந்து சமயத்தின் நல்லதும் வலிதானதுமான விடயங்களை இந்துத்துவம் சிதைத்து வருதலையும் எடுத்துரைக் கின்றார். மறுமதிப்பீடு செய்கின்றார். இன்றைய இந்திய அரசியல்வாதிகள் மதத்துக்குப் பூசும் அரிதாரங்களையும் அவர்களின் சுயநலவாதப் போக்குகளுக்கு மதத்தைப் பயன்படுத்தும் விதத்தையும் இனங்காட்டுகின்றார். இந்தியச் சமூகத்தில் காணப்படும் மதப்பன்மைத்துவத்தை யும் குறுமனப்பாங்கிலான மதவெறி, மதவாதம் என்பன மதவுணர்வைக் கொச்சைப்படுத்துவதையும் இந்நூல் தெளிவுறுத்துகின்றது. காலனிய விடுதலைக்கு, தேசிய உணர்வுக்கு, புரட்சிக்கு மதங்கள் ஆற்றிய பங்களிப்பு முக்கியமானது. ஆனால் இன்று தேசியவுணர்விலிருந்து அது விலகிப் பயணிப்பதை அவதானிக்க முடிகிறது. இதற்கு மத அடிப்படைவாதமே தளமாக அமைகிறது.

ஒருமையில் பன்மையும் பன்மைக்குள் ஒருமையும் எனும் அத்வைத விளக்கங்கள், ஒரு பரம்பொருள் கோட்பாடு என்பவற்றின் சமூக மெய்யியல் பெறுமானம் இந்நூலில் விளக்கப்படுகிறது. சுமாதான, சகவாழ்வு சிதறிப்போதல், அதற்கான காரணங்களைக் கண்டறிதல் என்பன அடையாளப்படுத்தப்படுகின்றன. மத, சாதிய உறவு என்பது மிகத் தெளிவாக இந்நூலில் உரையாடப் படுகின்றது. தமிழ்ச் சூழலில் சாதியம் என்பது சமணத்தால் வளர்க்கப்பட்டு சைவ, வைணவ ஆதிக்கசக்திகளிடம் கையளிக்கப்பட்டதாகவே தோன்றுகின்றது.

இந்தியக் கடவுளர்களின் பிறப்புத் தொடர்பாக ஆசிரியரின் கருத்தில் எமக்கு சிறிய முரண்பாடு இருப்பினும் மிக எளிமையாக ஒரு அட்டவணையில் விளக்கி நிற்கும் தன்மை பாராட்டத்தக்கதே. இதுபோல இந்து மதத்தின் ஊற்றுக்களும் மாற்றங்களும் எனும் தலைப்பி லான வரைபடமும் இத்தன்மை வாய்ந்ததே. மூல சமணத்தில் இருந்து ஆசிவகம், சமணம், பௌத்தம் உருவானதாக கூறப்படுதலில் "மூலசமணம்" என்பது "மூலசிரமணம்" என்பதே சரியானதெனக் கருதுகிறேன். சைவசித்தாந்தம் முன்னைய இந்திய மெய்யியல்களில் கற்றுக்கொண்ட பாடங்களை உள்வாங்கி வந்தது என்பது சரியானதே ஆயினும் இஸ்லாத்தின் தாக்கம் அதற்கு இல்லை. சமணத்தின் முக்திநிலை அடுக்கமைவும் சைவசித்தாந்த முத்தி பற்றிய அடுக்கமைவும் ஒன்றாகும். ஆனால் இறுதி முக்தி நிலை வேறு வேறு.

மதங்களின் உருவாக்க வரலாறு, அவற்றின் பயணங்கள், கொண்டும் கொடுத்தும் பறித்தும் வாழ்தல் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. மதங்கள், அவற்றின் வகைப்பாடுகள் குறிப்பாக செமிட்டிக் மதங்கள் (யூத, கிறிஸ்தவ, இஸ்லாம் மதங்கள்) நாட்டார் சமயங்கள், இந்திய மதங்கள் என்பன பற்றிய மார்க்சிய நோக்கிலான விவாதங்கள் சிறப்பாக முன்வைக்கப்பட்டுள்ளன. நாட்டார் சமயங்கள், பிரதான சாதியத்தளம் இல்லாத இந்துச் சமூகங்கள், வேத மறுப்புச் சமயங்கள், தொன்மைக் கதைகள் - புராணங்கள் பற்றிய உரையாடல் என்பன இந்திய மத வரலாற்றுப் பின்னணியையும், இயங்குநிலை யை யும் புரிந்துகொள்ள உதவுகிறது.

இந்து மதத்தின், இந்துப் பண்பாட்டின் புலத்தை விளக்கவும் அதன் பரம்பல், செல்வாக்கை புரியவும் முயல்தல் அவசியம். குறிப்பாக இன்றைய சூழலில் இந்து மதத்தை உலகெங்கும் பரவச் செய்ததில் இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழகத் தமிழருக்கும் பாரிய பங்குண்டு. அந்த அடிப்படையில் தமிழின் தனித்துவமான பங்களிப்பை இந்நூல் ஆராய்கிறது. தமிழகத்தின் மதவரலாறு, சாதிய, வர்க்க வரலாறு தவிர்க்க முடியாத வரலாற்று இணைவைப் பெற்றுள்ளன. இவற்றில் மாறுபட்டு மதத்திற்கு புதிய செல்நெறிகளை உருவாக்கித் தமிழ்ச்சமூகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய மூன்று புலமைகளை இந்நூல் அடையாளப்படுத்துகிறது.

1. திருவள்ளுவர் - "திருக்குறள்" - மதச் சார்பில்லாத சமூக இருப்பின் இலக்கிய வகைப்பாடு
2. பாரதி - ஆன்மிக நாத்திகம்
3. பெரியார் நாத்திகவாதம் வெகுஜன இயக்கமாக.

இவற்றின் பொதுப் பண்பாக

1. சாதிய எதிர்ப்பு
2. மதப் பொதுமை அல்லது நிராகரிப்பு

போன்றன சுட்டப்படுகின்றன. மேலே சுட்டப்பட்ட மூன்று தனிநபர்களினதும் மதக்கொள்கை, சமூகக்கொள்கை, உலகக் கண்ணோட்டம் என்பன விளக்கப்பட்டு அவரவர் தனித்துவ சிந்தனைகளும் ஆராயப்பட்டுள்ளன. பாரதியார் மதச்சார்புடையவராக, வேதாந்தியாகவே பலரும் அடை யாளப்படுத்தும் சூழலில் இரவீந்திரன் "ஆன்மிக நாத்திக வாதி" என அடையாளப்படுத்துவது புதுவது. அதேவேளை பாராட்டி ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும். பாரதியின் ஐய வினாக்கள், சமூக வினாக்கள் என்பன இதன் வெளிப்பாடே.

பெரியாரின் நாத்திகம் வெகுசன இயக்கமாக பரிணமித்தது என்பதில் ஐயமில்லை எனினும் சாதாரண மக்களின் மனதை நீடித்த காலம் வெல்ல முடியவில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே தோன்றுகிறது. பெரியார் என்பது ஒரு அலை வருவதும் போவதுமாக இருக்கிறது. படித்த இளைஞர்கள் இதன்வழி பொங்கி எழுவதும் சிறிது காலத்தில் காணாமல் போவதுமாகவே இதனைத் தரிசிக்க முடிகிறது. பெரியாரின் வன்முறை மனதை வென்றெடுக்கவில்லை. கவர்ச்சியான சலசலப்பென்றே தோன்றுகிறது.

மதம் பற்றிய புரிதலில் முக்கியமான கருத்தியல் "விடுதலை இறையியல்" என்பதாகும். கிறிஸ்தவத்தால் முன்வைக்கப்பட்ட இந்த பண்பாடு சமூகத்தில் அதிக தாக்கத்தை வழங்க வல்லது. ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் புலமாக, அவர்களுக்கு ஒருமைப்பாடு மிக்க விடுதலையை வழங்க வல்ல ஒன்றாக அமைந்துள்ளது. மார்க்ஸ், "விடுதலை இறையிலை" அறிந்திருப்பின் மதம் பற்றிய தனது கருத்தியலை முற்றாக மாற்றியிருக்க வாய்ப்புண்டு. பெரியாரும், சில கம்யூனிஸ்ட் சித்தாந்திகளும் மக்களின் நம்பிக்கைகளை உதாசீனம் செய்கின்ற, மக்களின் நம்பிக்கைகளை வென்றெடுக்காத செயல் நிலைகளின் வழி ஒழுகியமையே மக்கள் மயமாதலில் பின்தங்கல்நிலை ஏற்பட்டது. இரவீந்திரன் இவற்றை மிகச் சரியாக இனம் காண்கின்றார். "மக்களுடனான உயிர்பான உறவாடல் அவர்களது மத நம்பிக்கை மதிக்கப்படும் போதே சாத்தியமாகும்" (ப.236) என்கிறார். அத்தோடு பண்பாட்டுத்தளத்தில் மதம் குறித்து கட்சி ஸ்தாபனம் கையாளும் அணுகுமுறைகளாகவும் விளக்குகின்றார். இவை மிக முக்கியமானவை.

பண்பாட்டின் இயங்கியலில் மதத்தின் வகி பாகத்தை இந்நூல் மதிப்பிடுகின்றது. பண்பாட்டை பண் பாடும் எதிர்பண்பாடும், புதிய பண்பாட்டு இயக்கம்: புரட்சி யின் புதியகோரிக்கை என இருதளங்களில் விளக்குகிறது. பண்பாட்டை, அதன் விழுமியத்தைத் தீர்மானிப்பதில் பொருளுற்பத்தித்துறை, ஏகாதிபத்தியம், விடுதலை இயக்கம், போராட்டம், என்பன வகிக்கும் பாத்திரத்தை இந்நூல் எடுத்துரைக்கிறது. இந்திய பண்பாட்டில் ஆன்மிக வாதமும் மாயாவாதமும் இந்தியாவின் ஆன்மாவாக "பிம்ப" நிலையில் கட்டமைக்கப்படுகிறது. யாக்ஞவல்லி யரும், சங்கரரும் வளர்த்த கருத்துமுதல்வாத நிலைக்கு மாற்றாக உத்தலாகரின் ஆலமரம், ஆலம் விதையில் இருந்து வரும் உதாரணத்தையும் கிருஷ்ணமூர்த்தியின் காட்சிப் பிழையிலிருந்தான விடுதலையையும் இரவீந்திரன் முன்னிறுத்துகிறார். இது ஆரோக்கியமான, அறிவார்ந்த உரையாடலைக் கட்டமைக்கின்றது.

மூடத்தனங்களை வாய்மொழி வழக்காறுகள், புராணங்களூடாக முன்வைத்து வரும் மதவாத சிந்தனை களை அதே வடிவத்தைக் கையாண்டு மக்களை அவற்றிலிருந்து மீட்க முடியும். இந்துத்துவத்தில் இருந்து விடுபட புதிய பண்பாட்டியக்கத்தின் கருத்தியல்கள் முன்வைக்கப் படுகின்றன. இந்துத்துவத்தை இரவீந்திரன், மக்களின் பொது எதிரியாக முன்வைக் கின்றார். இதில் மாற்றுக்கருத்தில்லை. சமூக மாற்றங்களை எப்போதும் இந்தியச் சமூகம் அரசியல் வழி போராட்டங்கள் ஊடாக முன்னெடுக்காது, மத தத்துவார்த்த எழுச்சிகளின் வழி முன்னெடுத்தமையை சரிவர இனம் கண்டு அதன் வழி இரவீந்திரன் பொதுவுடமைச் சமூக உருவாக்கத்திற்கான உரையாடலை நிகழ்த்துகின்றார். பழமைவாத சிந்தனைப் போராட்டங்களின் நவீன ஊற்றுக்களை இனங்கண்டு எதிர்ப்பண்பாடு, புதிய பண்பாடு பற்றிய பிரக்ஞை பூர்வமான உரையாடல் தமிழ் இலக்கிய செந்நெறியில் முன்னெடுக்கப்படுதலின் அவசியப்பாட்டை இந்நூல் உணர்த்தி நிற்கின்றது.

இந்நூல் மார்க்சியத்தின் மதம் பற்றிய கருத்தியலை மறுமதிப்பீடு செய்கின்றது. வரலாற்றுப்பொருள் முதல்வாத அடிப்படையில் மதங்களின் வரலாறு, இயங்கியல், பண்பாட்டில் அவை செலுத்தும் தாக்கம் என்பனவற்றோடு தமிழ்த்தரப்பில் வள்ளுவர், பாரதி, பெரியார் ஏற்படுத்திய மதம் தொடர்பான கருத்தியல் தாக்கம் என்பனவும் ஆராயப்படுகிறது. கற்றுக்கொண்ட பாடங்களின் வழியும் தன் பரந்த வாசிப்பின் வழியும் இம்மறுமதிப்பீட்டை இரவீந்திரன் நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சிலவற்றோடு முரண்படினும் பலவற்றோடு எம்மால் உடன்பட முடிகிறது. புதிய தளத்திலான வாசிப்பிற்கு இட்டுச் செல்லும் மிக ஆரோக்கியமான நூல் இது. மார்க்சியம் என்பதே இயங்கியல் தானே. அது தேக்கமுறுவதில்லை. மதம் குறித்த மறுமதிப்பீட்டைச் செய்துள்ள இரவீந்திரன், "தமிழ்த் தேசியம்" குறித்த மறுமதிப்பீட்டையும் செய்தல் நன்று.

### கலாநிதி ந.இரவீந்திரன் பற்றிய சிறு தகவல்கள்

பெயர் - இரவீந்திரன்

பிறப்பு - 20.4.1955

தந்தை - நடேசன்

மனைவி - சத்தியமலர்

பிள்ளைகள் - 2

கல்வி - கலாநிதி

வெளியிட்ட நூல்கள் -

01. பாரதியின் மெஞ்ஞானம் (1986,1992, 2024)
02. இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்(இணையாசிரியர்) (1988,2006)
03. ஏன்?(சிறுகதைத் தொகுதி) (1991)
04. பின் நவீனத்துவமும் அழகியலும் (1997,2002)
05. கலாசாரம் எதிர் கலாசாரம் புதிய கலாசாரம்(1998)
06. இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்(2002)
07. சாதியமும் சமூக மாற்றங்களும்(2003,2017)
08. இந்துத்துவக் காலச் சூழலின் மறுவாசிப்பில் பாரதியின் மெஞ்ஞானம்(2003)
09. இந்துத்துவம் இந்து சமயம் சமூக மாற்றங்கள்(2003)
10. மதமும் மார்க்சிசமும் (தமிழ் பண்பாட்டுப் பார்வை) (2006, 2022)
11. கல்விச்சிந்தனைகள் :பாரதியார் (தொகுப்பாசிரியர்) (2007)
12. திருக்குறளின் கல்விச் சிந்தனை(2009)
13. முற்போக்கு இலக்கியத்துக்கு கைலாசபதியின் பங்களிப்பு(2012)
14. முற்போக்கு இலக்கிய எழுச்சி (2012)
15. இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும் (2013,2015)
16. சாதி தேசம் பண்பாடு (2014,2020)
17. சாதிச் சமூக வரலாற்றில் வர்க்கப் போராட்டம் (2016)
18. உழைப்பு மொழி கல்வி (2017)
19. இலங்கைத் திணை அரசியலில் வர்க்கப் போராட்டம் (2019)
20. ஏகாதிபத்தியம் சுயநிர்ணய உரிமை மக்கள் இலக்கியம் (2024)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org